# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 32 கதிர் 356 கார்த்திகை 1ஆம் நாள் வெள்ளிக்கிழமை 17 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048


# அதிகாரத்தை மீண்டும் கைப்பற்ற மகிந்த புதிய அரசமைப்பை பயன்படுத்தக்கூடாது

*நாடாளுமன்றத்தில் சம்பந்தன் நேற்று அழுத்தமாக எடுத்துரைப்பு*

கொழும்பு, நவம்பர் 17

அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கான வழியாகப் புதிய அரசமைப்பை மகிந்த ராஜபக்ச பயன்படுத்தக்கூடாது என்று நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன். "அதிகாரத்தைக் கைப்பற்றவேண்டுமாயின் அதை வேறு வழிகளில் செய்யுங்கள். அதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் கிடையாது. அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான வழியாக அரசமைப்பை நீங்கள் (மகிந்த ராஜபக்ச) பயன்படுத்தக்கூடாது"- என்றார் அவர்.

"பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட பழமை வாய்ந்த கட்சியில் நீங்கள் அங்கம் வகிக்கிறீர்கள். >> 25



## சம்பந்தனின் உணர்வு மகிந்தவுக்கு புரிகிறதாம்

கொழும்பு, நவ. 17

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தமது முழுமையான ஆதரவை வழங்கவேண்டும் என்று எதிர்க்கட்சித் >> 25

## மைத்திரி - ரணில் அரசை வீட்டுக்கனுப்ப வேண்டும்

*மக்களை ஒத்துழைக்கக் கேட்கிறார் மகிந்த*



கொழும்பு, நவ. 17

நாட்டைத் தொடர்ந்து கடன் சுமைக்குள் தள்ளும், பொருளாதாரத்தை சீரழிக்கும் மைத்திரி-ரணில் அரசை வீட்டுக்கு அனுப்ப நாட்டு மக்கள் எமக்கு ஒத்துழைக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் >> 25

## 93 மேலதிக வாக்குகளால் 'பட்ஜட்' நிறைவேற்றம்

கொழும்பு, நவ. 17

2018ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு 93 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப் பட்டது. 151 வாக்குகள் ஆதரவாகவும் 58 வாக்குகள் எதிராகவும் அளிக்கப்பட்டன. >> 25

## கூட்டமைப்புக்குள் எவரும் வரலாம் போகலாம்

*அதன் தலைவர்கள் தெரிவிப்பு*

கொழும்பு, நவ. 17

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கதவு திறந்தேயுள்ளது. யாரும் வரலாம். யாரும் போகலாம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் நேற்றுத் தெரிவித்தனர். >> 04

## இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சியே மறைமுகமாக வலியுறுத்தப்பட்டுள்ளது

*பயனற்ற தீர்வை ஏற்கோம் என மைத்திரி, ரணிலிடம் கூறிவிட்டோம் என்கிறார் சம்பந்தன்*

கொழும்பு, நவ. 17

புதிய அரசமைப்புத் தொடர்பான இடைக்கால அறிக்கையில் மறைமுகமாகக் கூட்டாட்சியே வலியுறுத்தப்பட்டுள்ளது. பயனற்ற நியாயமற்ற தீர்வை ஏற்கமாட்டோம். அதனை மைத்திரி, ரணிலிடம் கூறிவிட்டோம். புதிய அரசமைப்புக்காக இறுதிவரை முயற்சிப்போம். வெளியிலிருந்து >> 04

வரவு-செலவுத் திட்ட வாக்கெடுப்புக்கு முன்னதாக

## ரணிலுடன் கூட்டமைப்பு நேற்று அவசர சந்திப்பு

*வாக்குறுதிகளைப் பெற்றுக்கொண்டே ஆதரவு*

கொழும்பு, நவ. 17

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவை அவசர அவசரமாகச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள், அவரிடமிருந்து சில >> 04

## திங்கட்கிழமை ரணிலிடம் விசாரணை

கொழும்பு, நவ. 17

பிணைமுறி மோசடி குறித்து விசாரணை நடத்தும் அரச தலைவர் ஆணைக்குழுவில் எதிர்வரும் திங்கட் கிழமை முன்னிலையாகுமாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

சர்ச்சைக்கு >> 04

அரியாலைத் துப்பாக்கிச் சூட்டுக் கொலை

## சந்தேகநபர்களை சாட்சி நேற்று அடையாளம் காட்டவேயில்லை

யாழ்ப்பாணம், நவ. 17

அரியாலை, மணியந்தோட்டம் பகுதியில் இளைஞரொருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப்படையினரின் இரு புலனாய் வாளர்களும் நேற்று யாழ். நீதிவான் மன்றில் அடையாள அணிவகுப்பு உட்படுத்தப்பட்டனர். ஆனால் சம்பவத்தை நேரில் கண்ட ஒரேயொரு சாட்சி அவர்களை அடையாளம் காட்ட >> 04



வவுனியாவில் நேற்றுமுன்தினம் கொடூரம்

## சிறுமி கடத்தப்பட்டு கூட்டு வன்புணர்வு

*நான்கு இளைஞர்கள் கைதாகி விசாரணையில்*

வவுனியா, நவ.17

முச்சக்கரவண்டியில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட 16 வயதுச் சிறுமி ஒருவர் தவறான முடிவெடுத்துத் தற்கொலைக்கு முயன்ற நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப் >> 25

## வாள் வெட்டுச் சம்பவங்களை உடன் கட்டுப்படுத்தப் பணிப்பு

*நீதிபதி இளஞ்செழியன் பொலிஸ் உயர் அதிகாரிகளுடன் நேற்று அவசர கூட்டம்*

யாழ்ப்பாணம், நவ. 17

சட்டம் ஒழுங்குக்குச் சவால் விடும் அளவுக்கு அதிகரித்துள்ள வாள் வெட்டுச் சம்பவங்களை உடன் கட்டுப்படுத்துமாறும், அதன் சூத்திர தாரிகளை விரைந்து கைதுசெய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறும் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி மா. இளஞ்செழியன் பொலிஸாருக்கு நேற்றுப் பணித்தார். >> 04



## காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள் மைத்திரியுடன் நேற்று மீண்டும் சந்திப்பு

*உடனடித் தீர்வு வேண்டுவோரின் விவரங்களைத் திரட்டப் உத்தரவு*

>> 25


எளிமையான லீசிங்
DFCC ஈசி லீசிங்




▪ தனியார் கார், பேருந்து மற்றும் வணிக வாகனங்களுக்கான லீசிங் வசதி ▪ இயந்திரங்களுக்கான லீசிங் வசதி ▪ கவர்ச்சிகரமான வட்டி வீதம் ▪ வேகமான மற்றும் தனிப்பட்ட சேவை ▪ நாடளாவிய ரீதியிலான 139 சேவை மையங்கள்.

24 மணி நேர அழைப்பு மையம் : 011 2350000
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள DFCC வங்கிக் கிளைக்கு விஜயம் செய்யுங்கள்.
www.dfcc.lk
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது.

DFCC வங்கி உங்கள் வளர்ச்சிக்கு

# நாட்டின் கடன் தொடர்பில் பொய் கூறுகிறார் மங்கள

## ஜே.வி.பி. குற்றச்சாட்டு

கொழும்பு, நவ.17

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் வரவு செலவுத் திட்டத்தில் 8 ஆயிரத்து 475 பில்லியன் ரூபாவை நாம் கடனாக செலுத்த வேண்டும் என கூறப்பட்டாலும், அதை மறுத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க எமது நாடு 9 ஆயிரத்து 517 பில்லியன் ரூபாவை கடனாக செலுத்த வேண்டும் கூறியிருந்தார். தற்போது 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் இலங்கை 7 ஆயிரம் பில்லியன் ரூபாவை கடனாக செலுத்த வேண்டும் என மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். இது உண்மையான கடன் தொகை அல்ல. இது முற்றிலும் பிழையாகும். உண்மையான கடன்தொகை எவ்வளவு என்பதனை நாட்டுக்கு அரசு கூற வேண்டும்.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம் கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க சபையில் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான இறுதி நாள் விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போலியான கடன் தொகை கணக்கைக் கொண்ட வரவு செலவுத் திட்டத்தையே மங்கள சமரவீர சமர்ப்பித்துள்ளார். சபையில் ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். அமைச்சர்கள் உள்ளனர். எனவே யாராவது எழும்பி தற்போது நாட்டின் மொத்த கடன் தொகை எவ்வளவு என்பதனை கூறுங்கள்?. உண்மையான கடன் தொகையை கூறுங்கள். (எவரும் பதிலளிக்கவில்லை.) இலங்கை என்பது சிறிய பொருளாதாரத்தை கொண்ட நாடாகும். எமது நாட்டை பொறுத்தவரையில குறைந்தளவிலான தேவைகளே உள்ளன. எனினும் ஒரு குழுவினரின் கைகளுக்கே நாட்டின் பொருளாதாரம் சென்றுள்ளது.

ஆட்சியாளர்கள் எமக்கான அனைத்து வாய்ப்புகளையும் வளங்களையும் கைவிட்டு தற்போது வேடிக்கை பார்கின்றனர். இந்த வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக சாகுபடி நில தொடர்பான பழைய சட்டமூலங்களை திருத்த பார்க்கின்றனர்.

காணி தொடர்பான சட்டஏற்பாடுகளை இலகுப்படுத்தும் போது காணிகளை வெளிநாடுகளுக்கு விற்கும் இடையூறுகள் நீக்கப்படு கின்றன. இதனால் நாட்டின் நிலங்கள் விற்கப்பட்டு வெளிநாட்டு நிறுவனங்களின் கைகளுக்கு செல்வது உறுதியாகும். இது போன்றே நிதி சந்தையையும் திறக்க திட்டமிட்டுள் ளனர். இப்படி செய்தால் நாட்டின் நிதி நிறுவனங்களை வெளிநாட்டின் பலமான நிறுவனங்களுக்கு கைப்பற்ற முடியும். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, காப்புறுதி கூட்டுதாபனம் போன்ற நிதி சந்தைகளுக்கு பாதிப்புகள் ஏற்படும்.

நாட்டின் வரவிலும் செலவிலும் பெரும் பங்கு கடனாகும். இம்முறையும் வரவில் கடன் பெறப்படுவதுடன் செலவினை பார்க்கும் போது அதிலும் பெரும் பங்கு கடன் செலுத்துவதற்கே ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது வரவு செலவுத் திட்டமா? கடன் செலவு திட்டமா?.

திருட்டு பொருளாதாரத்தில் உருவானவர் திருடராகவே இருப்பார். பசுமை என்பது மாயையாகும். இந்த திட்டத்துக்குள் கெட்டவர்கள் உருவாகின்றனர். நுட்பமான பொருளாதாரம் தேவையாகும். சம்பிரதாய நருெக்கடிக்கே தள்ளப்பட்டுள்ளீர்கள். இந்த வரவு செலவுத்திட்டத்தை நாம் எதிர்க்கின்றோம். என்றார். (ற-31)

# தொடருந்துத் திணைக்களத்தின் பயன்பாட்டில்105 இயந்திரங்கள்

கொழும்பு, நவ.17

இலங்கையில் தொடருந்துத் திணைக்களத்தின் பயன்பாட்டில் 105 இயந்திரங்கள் உள்ளன என்று போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று வியாழக்கிழமை வாய்மூல விடைக்கான வினா நேரத்தின் போது கூட்டு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவின் கேள்விக்கு பதிலளிக்கும் போதே போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு பதிலாக ஆளும் கட்சி பிரதம கொறடாவும் அமைச்சருமான கயந்த கருணாதிலக சபைக்கு இந்தத் தகவலை ஆற்றுப்படுத்தினார்.

தற்போதைக்கு இலங்கை தொடருந்துத் திணைக்களத்துக்கு சொந்தமான இயந்திரங்களில் பயன்பாட்டுக்கு எடுக்க கூடிய இயந்திரங்களின் எண்ணிக்கை யாது? எம் 2 மற்றும் எம் 4 ரக இயந்திரங்கள் மிகவும் முக்கியமானதாகும். அந்த ரக இயந்திரங்கள் 27ஐ பயன்பாட்டில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா? ஊழியர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் பிரான்சில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட எம் 9 ரக ஒன்பது என்ஜின்களுக்கு என்ன நடந்தது? என்று வாசுதேவ கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவை அமைச்சு சபைக்கு ஆற்றுப்படுத்திய தகவலில் தெரிவிக்கப்பட்டதாவது

தொடருந்துத் திணைக்களத்திடம் பயன்பாட்டில் இயந்திரங்கள் 105 உள்ளன. அவற்றில் எம் 2, எம் 4, எம்6, எம் 7 ரக இயந்திரங்களே அதிகமாக உள்ளன.

எம் 9 இயங்திரங்கள் ஒன்பது உள்ளன. அவற்றில் கேளாறுகள் ஏற்பட்டால் இந்திய நிறுவனம் ஒன்றால் பழுதுபார்க்கப்பட்டு சேவைக்குட்படுத்தப்படுகின்றன என்றார். (ற-31)

# பிரிவுக்குக் காரணம் அரசியல்வாதிகளே

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.17

எமக்குள் காணப்படும் பிரிவுக்கு அரசியல்வாதிகளே காரணம். அவ்வாறானவர்கள் தென்னிலங்கையிலும் இருக்கின்றார்கள், இங்கேயும் இருக்கின்றார்கள். ஆனால் மக்களுக்கிடையே எந்த விதமான பிரச்சினைகளும் இல்லை.

இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் கூரே தெரிவித்தார்.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய பரிசளிப்பு விழாவில் நேற்றுக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

அரசியல்வாதிகள் தலைவர்களாக இருப்பதற்கு முரண்பாடுகள் தேவைப்படுகின்றன. பாதிக்கப்பட்ட மக்களுக்குதற்போது தேவையாக இருப்பது அபிவிருத்தியே. நாம் எல்லோரும் ஒன்றாக சேர்ந்து இந்த மக்களுக்கு அபிவிருத்தியைக் கொண்டுவர வேண்டும்.

நாட்டில் அனைவரும் ஒற்றுமையாக இருப்போமானால் ஒரு தேசம் ஒரு தலைவன் இருப்பான். தூண்டுதல்கள் காரணமாக மக்களாகிய நாம் பல துண்டுகளாக பிரிந்து இருந்தால் பல தலைவர்கள் இருப்பார்கள். அதையே அவர்கள் எதிர்பார்கின்றார்கள்.

போர்க் காலத்தில் இங்கே உள்ள தமிழ் இளைஞர்கள் யுவதிகள் புலம்பெயர்ந்து வெளிநாடுகளுக்கு சென்றார்கள். பிரான்ஸ்,ஜேர்மன், சுவிஸ்லாந்து போன்ற நாடுகளில் வசிக்கின்றார்கள். அங்கிருந்து இங்கே பணம் அனுப்புகின்றார்கள். பத்து வருடங்களுக்கு இங்குள்ள உறவுகளுக்கு பணம் அனுப்புவார்கள். பின்னர் அவர்களின் பிள்ளைகள் இங்கே பணம் அனுப்ப் மாட்டார்கள். அவர்களுக்கு தங்கள் தாய் நாடு இலங்கை என்று தெரியாது. உறவினர்களை, நண்பர்களைத் தெரியாது.

அப்படியொரு நிலை இங்கே உருவாகும். நாம் இந்த அழகிய நாட்டிலே ஒன்றாக இருக்க வேண்டும் நலமாக வாழ வேண்டும் என்றே நான் நினைக்கின்றேன்.

இங்கு மாணவர்களின் விருதுகளைப் பார்த்த பின்னர் நான் ஒன்றைச் சொல்ல ஆசைப்படுகின்றேன். சிறிய பாடசாலையானபோதும் பெரிதாகச் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்துள் ளீர்கள். எங்களாலும் முடியும் என்பதை காட்டியிருக்கின்றீர்கள் அதற்கு உதவிய ஆசிரியர்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் அனைவரையும் பாராட்டுகின்றேன்.என்றார். (ற-ரி2,101)

# பொருளாதார நெருக்கடியை அரசு எதிர்கொள்ள நேரிடும்

## எச்சரிக்கின்றார் தினேஸ் குணவர்த்தன

கொழும்பு, நவ.17

சவூதி அரேபியாவில் அரசியல் ரீதியான நெருக்கடி ஏற்பட்டுள்ளது. ஊழல் மோசடி குற்றச்சாட்டின் காரணமாக அந்நாட்டின் இளவரசர்கள் பலர் கதை செய்யப்பட்டு விசாரணைக்கு உட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் தொடர்புடைய நிறுவனங்கள் வர்த்தக ரீதியாக வீழ்ச்சி காண்கின்றன. அங்கு பணிபுரியும் இலங்கையர்களுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள் என. இதனால் இலங்கை பொருளாதாரத்திற்கும் பாதிப்பும் ஏற்படும். இதற்கு முகங்கொடுக்க நிதியமைச்சர் தயாராக இருக்க வேண்டும்.

இவ்வாறு கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற குழு தலைவர் தினேஸ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று 2018 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் மீதான இறுதி நாள் விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்தாவது

இந்த வருடத்தில் மட்டும் அரசு சார்பாக பொருளாதார ரீதியாக ஐந்து கொள்கைகளை தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வெளியிட்டுள்ளார். இந்தக் கொள்கைகள் வெளியிடப்பட்டாலும் இன்னும் ஒன்றும் நடக்கவில்லை.

வரலாற்றில் இதுவரை நடக்காத மத்திய வங்கி மோசடி நடந்தது. இதனால் பொருளாதார ரீதியான நெருக்கடிக்குள் அரசு தள்ளப்பட்டுள்ளது. இந்த மோசடியால் உருவான அவநம்பிக்கையில் இருந்து அரசுக்கு இதுவரை மீள முடியாமல் உள்ளது. இந்த மோசடியால் வெளிநாட்டு முதலீடுகளுக்கும் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. வங்கிகளின் வட்டி வீதமும் அதிகரித்துள்ளது.

தலைமை அமைச்சரால் ஐந்து கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. அவை ஒன்றும் நிறைவேறவில்லை. வோட்ஸ் வோகன் நிறுவனம் கொண்டு வரப்படும் என்றார். அது நடந்ததா?. நாட்டு மக்களை பொய் கூறி திசைத்திருப்பியுள்ளனர். நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் அரசு செயற்பட வேண்டும். வங்கிகளின் நம்பகதன்மையை அரசு அதிகரிக்க வேண்டும். வங்கிகள் மீதான நம்பகதன்மை இல்லாத காரணத்தால் சர்வதேச ரீதியாக ஆபத்து ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டு முதலீடுகள் வீழ்ச்சி கண்டுள்ளன. வெளிநாட்டு முதலீடுகளின் மீது நம்பிக்கை வைத்து உள்நாட்டு முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கையூட்டும் பணிகள் எதையும் அரசு முன்னெடுக்கவில்லை. அரசுக்கு கொள்கையொன்று இல்லை.

நிதியமைச்சரின் கூற்றை இராணுவ தளபதி எதிர்த்துள்ளார். அந்நிய செலாவணி நெருக்கடியில் நாம் உள்ளோம். இது அரசின் இலக்குக்குச் செல்லாத முடியாத வரவு செலவுத்திட்டமாகும்.

இலவச கல்வி சட்டமூலம் திருத்த வேண்டுமாம். இலவச கல்வி என்பது எமக்கு ஆடம்பரமான ஒன்று. அதை ஏன் திருத்தம் செய்ய போகின்றீர்கள். எதற்காக திருத்தம் என்பது தொடர்பில் எதுவும் கூறவில்லை. சாகுபடி நிலங்கள் தொடர்பான சட்டமூலத்தை திருத்தப் பார்க்கின்றனர். இதனால் ஏழைகளுக்கு மீள் எழும் வாய்ப்பு இல்லாமல் போகும்.

சுதந்திர சந்தை பொருளாதாரத்தால் நாட்டின் நலன்புரிக்கு பாதிப்பு ஏற்படும். என்றார். (ற-31)

# மதில் சரிந்து விழுந்ததில் ஒருவர் சாவு

யாழ்ப்பாணம், நவ.17

மதில் சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்தார். இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதியில் நேற்று நடந்துள்ளது. அரியாலையைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான முத்துலிங்கம் சுடர்சீலன் (வயது42) என்பவரே உயிரிழந்தார்.

மதிலில் திருத்த வேலைகள் செய்து கொண்டிருந்தபோது மதில் சரிந்து விழுந்தது என்றும், அதில் அவர் தலையில் படுகாயமடைந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் அவர் சேர்க்கப்பட்ட போதும் சிகிச்ச பயனின்றி உயிரிழந்தார். இறப்பு விசாரணை அதிகாரி ந.பிரேமகுமார் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். அதன்பின்னர் உடல் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (ற-8,ரி1)




தொடருந்து வரும் சமயம் மூடப்பட்டுக் கொண்டிருந்த கடவையூடாகப் பயணிக்க முயன்ற முச்சக்கர வண்டி உள்ளே சிக்கிக் கொண்டது. கிளிநொச்சி மாவட்டச் செயலகம் முன்பாக உள்ள தொடருந்துக் கடவையில் இந்தச் சம்பவம் நடந்தது. அவசர அவசரமாக ஒரு வழியாக கடவையை கடந்து முச்சக்கர வண்டியைக் கொண்டு சென்றார் சாரதி. வடக்கில் தொடருந்து விபத்துக்கள் அதிகரித்துள்ள நிலையில் சாரதிகள் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியமாகும். (ற-35)

# நாட்டின் கடன் தொகை 10.2 திரில்லியன் ரூபா

கொழும்பு, நவ.17
மக்கள் விடுதலை முன்னணி தலைவர் உண்மையான கடன் தொகை குறிப்பிடப்படவில்லை என்று கூறுகின்றார். ஆனால் நான் வரவு - செலவுத் திட்டத்தில் மூன்றாண்டுக்குச் செலுத்த வேண்டிய கடன் தொகையைக் குறிப்பிட்டேன். நாட்டின் மொத்த கடந்த தொகை 10.2 திரில்லியன் ரூபாவாகும்.

இவ்வாறு தெரிவித்தார் நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர.

நாடாளுமன்றில் நேற்று வரவு- செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பின் இறுதிநாள் விவாதம் நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தற்போது கூட்டு எதிர்கட்சியினர் வரலாற்றை மறந்துள்ளனர். மன்னிக்கவும். இவர்களை எதிர்க்கட்சி என்று கூறுவதை விட கூட்டுகும்பல் என்று கூறுவது சிறந்தது என்று நினைகின்றேன். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் சபையில் உரையாற்றியிருந்தார். ஆனால் அவர் நிதி அமைச்சராக முன்வைத்த வரவு -செலவுத் திட்டங்களை மறந்துள்ளார்.

அவர் தனது வரவு - செலவுத்திட்டத்தில் அத்தியாவசிய பொருள்களின் விலைகளை அதிகரித்தார். மக்களுக்கான சலுகைகளை இல்லாமல் செய்தனர். வாகனங்களின் வரியை அதிகரித்தனர். ஆனால் தனது மகனுக்காக "ரேஸ்" கார் வரியை நீக்கினர். முழு நாட்டை சீரழித்த வரவு - செலவுத்திட்டத்தையே முன்வைத்தனர்.

நாம் அப்படியல்ல. நாட்டு மக்களுக்கு செவிகொடுக்கும் அரசாகும். அரசியல் ரீதியான மறுசீரமைப்புகளை முன்னெடுத்து வந்தாலும் பொருளாதார மறுசீரமைப்பும் அவசியமாகும். பதவிக்கு வந்த பிறகு கருத்துச் சுதந்திரம் வழங்கப்பட்டது. அடிப்படை வசதிகளை ஏற்படுத்தினோம். முன்னைய ஆட்சியின்போது பொருளாதார ரீதியில் பெரிய பாதிப்புகள் ஏற்பட்டன. இதனை நாம் சுமக்க வேண்டியுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் உள்நாட்டு மாத்திரம் மையமாக வைத்து பொருளாதாரக் கொள்கை வகுக்கப்பட்டது. மறைமுக வரியை விடவும் நேரடி வரியை அதிகரிக்கத் திட்டமிட்டுள்ளோம். முதலீடுகளை அதிகமாக நாட்டுக்கு கொண்டு வரவுள்ளோம். பசுமை பொருளாதாரத்தைக் கொண்டு வரவுள்ளோம். மூலதனச் சந்தையை விரிவாக்கவுள்ளோம். போட்டிதன்மை அதிகரிப்பதன் ஊடாக பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். போட்டியிட நாம் தயாராக வேண்டும் - என்றார். (ঢ-31)



## மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உதவிகள்

சாவகச்சேரி, நவ.17
தென்மராட்சியில் மழையால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் தெரிவுசெய்யப்பட்ட 20 குடும்பங்களுக்கு நேற்று தறப்பாள், நுளம்பு வலைகள் என்பன வழங்கப்பட்டன.

326 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன என்றும், முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குத் தற்போது உதவிகள் வழங்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி2,9)

## விபத்து தொடர்பான வழக்கில்
# பொலிஸ் அதிகாரிக்கு நீதிமன்று எச்சரிக்கை
### உரியவாறு சாட்சியமளிக்கவில்லை என

யாழ்ப்பாணம், நவ.17
குறுக்கு விசாரணையின்போது சாட்சியங்களை உரிய முறையில் வழங்காத பொலிஸ் அதிகாரியை யாழ்.நீதிவான் மன்ற நீதவான் எச்சரித்தார். வழக்கையும் ஒத்திவைத்தார்.

2008ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8ஆம் திகதி கோப்பாய் பிரிவுக்குட்பட்ட திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் நடந்த விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். வானும், மோட்டார்சைக்கிளும் விபத்துக்குள்ளாகின. வான் சாரதிக்கு எதிராக யாழ். நீதிவான் மன்றில் கோப்பாய் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்தனர்.

அந்த வழக்கு நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதவான் எஸ்.சதீஸ்கரன் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. எதிரி மன்றில் முன்னிலையாகியிருந்தார்.

விபத்து நடத்த காலப்பகுதியில் கோப்பாய் பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பிரிவுக்குப் பொறுப்பான பொறுப்பதிகாரி சாட்சியமளித்தார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளோட்டியை வீதியில் சென்றவர்கள் மருத்துவனையில் சேர்த்தனர். நீண்ட நேரத்தின் பின்னரே சம்பவ இடத்துக்குச் சென்று விசாரித்தேன். அவதானக் குறிப்புகளையும், மாதிரி வரைபடங்களையும் கீறிக் கொண்டேன். கண்கண்ட சாட்சியங்களிடம் சாட்சியங்களைப் பதிவு செய்தேன். மருத்துமனைக்குச்சென்றபோது விபத்துக்குள்ளானவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றார். பின்னர் அவர் உயிரிழந்து விட்டார் என்று சாட்சியமளித்துடன் எதிரிக் கூண்டில் நின்ற எதிரியையும் அடையாளம் காட்டினார்.

எதிரி தரப்புச் சட்டத்தரணி குறுக்கு விசாரணைகளை மேற்கொண்டார்.

வழக்கில் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளின் வாகன இலக்கம் ஏன் குறிப்பிடப்படவில்லை என்று கேட்டார். மோட்டார் சைக்கிளுக்கு வாகன இலக்கம் இல்லாததால் அடிச் சட்ட இலக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி தெரிவித்தார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் மோட்டார் வாகனப் பரிசோதகரால் பரிசோதிக்கப்பட்டு வீதியில் செலுத்துவதற்கு உகந்தது என்ற சான்றிதழ் தரப்பட்டதா என்று சட்டத்தரணி கேள்வி எழுப்பினார். சான்றிதழ் ஆங்கிலத்தில் எழுத்துக்கள் தெளிவில்லாது உள்ளது என்று சாட்சி குறிப்பிட்டார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சகைக்கிள் வீதியில் செலுத்துவதற்கு உகந்தது இல்லை என்று சான்றிதழில் உள்ளது என்று சட்டத்தரணி குறிப்பிட்டார். அது தனக்குத் தெரியாது என்று சாட்சி கூறினார்.

விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உண்டா? மோட்டார் சைக்கிளுக்கு காப்புறுதி, வரிப் பத்திரங்கள் உண்டான என்று பரிசோதித்தீர்களா? என்று எதிரி தரப்புச் சட்டத்தரணி கேள்வி எழுப்பினார். அவற்றை மோட்டார் சைக்கிள் சாரதியின் மனைவியிடம் கேட்டேன். கொண்டுவந்து தருவதாகக் கூறினார். பின்னர் அவற்றைத் தரவில்லை என்று சாட்சி கூறினார்.

சாட்சி உரிய முறையில் சாட்சியம் அளிக்கத் தவறுகின்றார் என்று எச்சரித்த நீதவான் வழக்கை எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். அன்று குறுக்கு விசாரணை தொடரும் என்றும் நீதவான் கட்டளையிட்டார். (ঢ-37)

## சட்டவிரோதமாக மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் கைது

பருத்தித்துறை, நவ.17
சட்டவிரோதமான முறையில் மணல் ஏற்றிய குற்றச்சாட்டில் ஒருவர் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். குடத்தனைப் பகுதியைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

வல்லிபுரத்தில் இரு கன்ரர் வாகனங்கள் மணல் ஏற்றிச் சென்றபோது காங்கேசன் துறை குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டன. ஒருவர் கைதுசெய்யப்பட்டார். ஏனையோர் தப்பியோடினர் என்று பொலிஸார் தெரிவித்தனர். கைப்பற்றப்பட்ட கன்ரர் வாகனங்கள் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் பருத்தித்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ற-ரி2,26)

## வாள்வெட்டுச் சம்பவம்; இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், நவ.17
யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வாள் வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் மூவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்று ஒருவரை விளக்கமறியலில் வைத்தது.

யாழ்ப்பாண பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு வாள்களுடன் நடமாடினார்கள் என்ற குற்றச்சாட்டில் மூன்று இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். விசாரணைகளின் பின்னர் அவர்களில் இருவர் விடுவிக்கப்பட்டனர். நல்லூர், கோயில் வீதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞர் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

அவரிடம் இருந்து பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் நேற்று அதிகாலை மூன்று இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்டவர்கள் நல்லூர், கல்வியங்காடு, உரும்பிராய் ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் 21 மற்றும் 20 வயதுகளைக் கொண்டவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் நேற்று யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நீதிவான் எஸ்.சதீஸ்தரனிடம் முற்படுத்தப்பட்டனர். நேற்றுக் கைது செய்யப்பட்ட இளைஞர்களை பிணையில் செல்ல நீதிவான் அனுமதித்தார். ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ঢ-37)

## மாணவருக்குப் புலமைப் பரிசில்

கொழும்பு, நவ.17
மீத்தொட்டமுல்லை குப்பைமேடு சரிந்ததில் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு நேற்றுப் புலமைப் பரிசில் வழங்கப்பட்டது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று இந்த நிகழ்வு நடைபெற்றது,

நகர, திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சு, தேசிய சேமிப்பு வங்கி மற்றும் ஏஐஏ லங்கா காப்புறுதி நிறுவனத்தின் அனுசரணையில் இப்புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. நிகழ்வில் நகர, திட்டமிடல், நீர்வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம், இராஜாங்க அமைச்சர் சு.தர்ஷனி பெர்ணாந்துப்புள்ளே, அமைச்சின் செயலாளர் சந்திரசிறி ஆகியோர் கலந்துகொண்டனர். (ঢ)



# பரீட்சைத் திணைக்களத்தில் என்ன நடக்கின்றது?

## உண்மையைக் கல்வி அமைச்சர் தெளிவுபடுத்தவேண்டும் என்கின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்

கொழும்பு, நவ. 17

பரீட்சைகள் திணைக்களத்தில் பெரும் பிரச்சினைகள் தொடர்ந்து ஏற்படுகின்றது. கல்விப் பொதுத்தராதர சாதாரண தரத்தின் விஞ்ஞான பாட வினாத்தாள் வெளியானது முதல் இலங்கை கல்வி நிர்வாக சேவையில் 2017ஆம் ஆண்டுக்கான பரீட்சை வினாக்கள் வெளி நபரொருவரின் புத்தகமொன்றில் வெளியிடப்பட்டது வரை பல்வேறு பிரச்சினைகள் பரீட்சைகள் திணைக்களத்தில் ஏற்பட்டிருந்தன. இந்தச் சந்தர்பங்களில் தற்காலிகமாகத் தீர்வுகள் காணப்பட்டது. அந்தப் பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வுகள் எட்டப்பட்டிருக்கவில்லை. இந்த நிலையில் பரீட்சைகள் திணைக்களத்தில் உண்மை நிலையை கல்வி அமைச்சர் தெளிவுபடுத்தவேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கல்வி அமைச்சர் பரீட்சைகள் திணைக்கள நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்ய குழுவொன்றை நியமித்துள்ளார். முன்னாள் பரீட்சைகள் ஆணையாளர் புஷ்பகுமார கல்வி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். இரகசியப் பிரிவின் ஆணையாளரொருவரும் இடைநிறுத்தப்பட்டுள்ளார். இந்த இடமாற்றமும், இடைநிறுத்தமும் பரீட்சைகள் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வாக அமையாதென்பதால் அமைச்சர் நியமித்த குழுவின் தீர்மானம் மற்றும் பரிந்துரைகள் உள்ளடங்கியுள்ள அறிக்கையை நாட்டு மக்களுக்கு வெளியிடவேண்டும். அதற்குப் பொறுப்பானவர்கள் தொடர்பாகவும் முறையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

சாதாரண தரம், உயர்தரம், புலமைப் பரிசில் பரீட்சைகள் மட்டுமன்றி பல்வேறு அமைச்சுகள் மற்றும் திணைக்களங்களில் ஆள் சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான போட்டிப் பரீட்சைகள் அனைத்தும் பரீட்சைகள் திணைக்களத்தாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

பரீட்சைகள் திணைக்களம், மக்களது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட நிறுவனமாகும். கடந்த காலத்தில் பரீட்சைகள் திணைக்களத்தில் கடமையாற்றிய மூத்த அதிகாரிகள் அரச செலவில் பரீட்சைகள் தொடர்பான பட்டபின் படிப்பு மற்றும் ஏனைய பாடத்திட்டங்கள் தொடர்பாக வெளிநாடுகளில் பயிற்சி பெற்றிருந்த நிலையில் அவர்கள் கல்வி அமைச்சின் ஏனைய பதவிகளுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

பரீட்சைகள் தொடர்பாக பிரச்சினைகள் ஏற்படும் சந்தர்ப்பங்களில் ஊடகங்கள் மற்றும் நாடாளுமன்றத்துக்கு பல்வேறு தகவல்கள் வெளியிடப்பட்டதே தவிர நடவடிக்கை எடுக்கப்படவில்லை. பரீட்சைகள் திணைக்களத்தில் ஏற்பட்டுள்ள நிலைக்குப் பொறுப்பான நபர் தொடர்பாக தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டு பரீட்சைகள் திணைக்களத்தின் நம்பகத்தன்மை மற்றும் பரீட்சை செயற்பாடுகளை வலுப்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்வதாக, அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

(5,31)

## ரணிலுடன்...

உறுதிமொழிகளைப் பெற்றுக்கொண்ட பின்னரே வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதிக்கு மேலதிகமாகக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரினதும் அபிவிருத்தித் திட்ட முன்மொழிவுகளுக்குத் தலைமை அமைச்சரின் அலுவலகத்தால் 2 கோடி ரூபா நிதி வழங்கப்படும் என்பது அதில் முக்கியமான உறுதிமொழி.

வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பதா, எதிர்ப்பதா அல்லது நடுநிலை வகிப்பதா என்பது தொடர்பில் ஆராய, கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு நேற்று மதியம் கூடியது.

வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுக்கவேண்டும் என்று கட்சியின் தலைவர் இரா.சம்பந்தன் வலியுறுத்தினார். ஆனால் கூட்டத்தில் இருந்த பெரும்பாலான உறுப்பினர்கள் அதற்கு கடும் எதிர்ப்பு வெளியிட்டனர்.

அரசு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. மக்கள் விரக்தி அடைந்துள்ளனர். இவ்வாறானதொரு நிலையில் நாம் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரிப்பது பொருத்தமாக இருக்காது என்று வாதிட்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா, வடக்கு - கிழக்கு மக்களுக்கு வரவு - செலவுத் திட்டத்தில் அபிவிருத்திக்கு அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்பதால் நாம் கட்டாயம் ஆதரிக்கவேண்டும் என்று குறிப்பிட்டார்.

அவரின் இந்தக் கருத்தால் கூட்டத்தில் கடும் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இரண்டு மணி நேரத்துக்கு மேலாகக் கூட்டம் தொடர்ந்த போதும் முடிவு எடுக்கப்படாமல் மதியம் 1.30 மணிக்கு நிறைவுக்கு வந்தது. மீண்டும் 3.30 மணிக்கு கூட்டம் கூடியது.

வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாக இருந்தால் தலைமை அமைச்சர் ரணில் சில விடயங்களில் தமக்கு வாக்குறுதி வழங்க வேண்டும் என்று அப்போது வலியுறுத்தப்பட்டது.

இதையடுத்து உடனடியாகவே தலைமை அமைச்சருடன் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நிலைப்பாட்டைத் தெரியப்படுத்தினார்.

காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம், அரசியல் கைதிகள் விவகாரம், வடக்கில் தொழிற்சாலைகளை நிறுவுதல், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி வேலைகளில் புறக்கணிப்பு, கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான 2 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு சகல நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்படாமை உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்பார்க்கிறார்கள் என்று தெரிவித்தார்.

அரசு ஏற்கனவே வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமையாலும் வரவு - செலவுத் திட்டத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்துகின்றனர் என்று இரா.சம்பந்தன் குறிப்பிட்டார்.

"பிரச்சினைகளை ஒரே இரவில் தீர்க்க முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் நாம் கரிசனையுடனேயே உள்ளோம். 2கோடி ரூபா ஒதுக்கீட்டைச் சகல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். ஏனைய விடயங்கள் தொடர்பிலும் தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும். தொடர்புடைய அமைச்சர்களுடன், கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்திக்கச் செய்து பிரச்சினை தீர்க்கப்படும்" என்று ரணில் உறுதிவழங்கினார்.

இதனையடுத்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவு - செலவுத் திட்டத்தை ஆதரித்து வாக்களித்தனர். (உ-5,31)

## திங்கட்கிழமை...

ரிய மத்தியவங்கி பிணைமுறி மோசடி விவகாரத்தில் கட்டளையிடும் நபராக தலைமை அமைச்சரே செயற்பட்டார் என்றும், அது தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் மகிந்த அணி சுட்டிக்காட்டியிருந்தது.

அரச தலைவர் ஆணைக்குழுவில் முன்னிலையாக சாட்சியமளிக்க தான் தயார் என்று தலைமை அமைச்சர் அறிவித்திருந்தார். சத்தியக்கடதாசி ஊடாக சில தகவல்களையும் அவர் ஆணைக்குழுவுக்கு வழங்கியிருந்தார். (உ-5,31)

## சந்தேகநபர்களை...

வில்லை. கடந்த மாதம் 22ஆம் திகதி அரியாலை கிழக்கு மணியம்தோட்டம் வசந்தபுரம் முதலாம் குறுக்கு வீதிப் பகுதியில் 24 வயதுடைய டொன்பொஸ்கோ டினேசன் என்ற இளைஞர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இந்தக் கொலை தொடர்பான விசாரணைகள் யாழ்ப்பாண தலைமையக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பொலிஸ் மா அதிபரின் பணிப்பின் பேரில் கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கொலைக்குப் பயன்படுத்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் துப்பாக்கி, முச்சக்கரவண்டி மற்றும் மோட்டார் சைக்கிள் என்பவற்றை கொழும்பு குற்றப் புலனாய்வு பிரிவினர் யாழ். நகர் பண்ணை வீதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாமில் இருந்து மீட்டிருந்தனர்.

நீண்ட விசாரணைகள், கொலை நடந்த இடத்துக்கு அருகிலிருந்த கடையிலிருந்து பெறப்பட்ட மறைகாணி (சி.சி.ரி.வி) காணொலிகள் என்பவற்றின் அடிப்படையில் அதிரடிப் படையைச் சேர்ந்த 2 புலனாய்வாளர்கள் கைது செய்யப்பட்டனர். நீதிவானின் உத்தரவை அடுத்து விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கெதிரான அடையாள அணிவகுப்பு நேற்று யாழ். நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் முன்னிலையில் இடம்பெற்றது. சந்தேகநபர்களான மல்லவ ஆராச்சிகே பிரதீப் நிசாந்த மற்றும் ரத்னாயக்க முதியான் சலாகே இந்திக புஸ்பகுமார ஆகியோர் யாழ்ப்பாண சிறைச்சாலை உத்தியோகத்தர்களால் முழுவதும் மூடப்பட்ட நிலையில் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

கொல்லப்பட்ட இளைஞர் அமர்ந்திருந்த மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்ற இளைஞர் சாட்சியாக முற்படுத்தப்பட்டபோதும் அவர் சந்தேகநபர்களை அடையாளம் காட்டவில்லை.

சந்தேகநபர்கள் இருவரும் அடையாள அணிவகுப்பின் பின்னர் திறந்த நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது அவர்களை இம்மாதம் 30 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கட்டளையிட்டார். அத்துடன் கைப்பற்றப்பட்ட சான்று பொருள்களைப் பகுப்பாய்வுகளுக்காக அரச இரசாயன திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறும் கட்டளையிட்டார். (உ-103)

## வாள் வெட்டுச்...

வடக்கு மாகாண மூத்த பிரதி பொலிஸ் மா அதிபரை அழைத்து நேற்று அவர் இந்தப் பணிப்பை வழங்கினார்.

யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாக அதிகரித்துள்ள வாள்வெட்டுச் சம்பவங்களை அடுத்து நீதிமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுக் கூட்டம் ஒன்றை நீதிபதி ஏற்பாடு செய்திருந்தார். அதில் அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந். வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலித்த பெனார்ன்டோ, யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரொசான் பெனார்ன்டோ, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் செனவிரட்ன, பொலிஸ் அத்தியட்சகர் அம்பேபிட்டிய மற்றும் யாழ்ப்பாண தலைமை பொலிஸ் நிலைய தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஹெமாவிதாரன ஆகியோர் கலந்துகொண்டிருந்ததனர்.

சட்டம் ஒழுங்குக்கு அச்சுறுத்தலாகவுள்ள வாள்வெட்டுக் கலாச்சாரத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பொலிஸ் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உடனடியாகப் பயன்படுத்துமாறும் நீதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

இதேவேளை வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களுக்குப் பிணை கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை நீதிபதி இளஞ்செழியன் ஒத்திவைத்தார். சந்தேகநபர்களுக்குப் பிணை வழங்குவதற்கு அரச சட்டவாதி கடும் எதிர்ப்புத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது வாள்வெட்டுச் சம்பவங்கள் மற்றும் குழு மோதல்கள் அதிகரித்துள்ளன. சாதாரண மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது. அவர்கள் அச்சத்தில் பொழுதைக் கழிக்கின்றனர். இவ்வாறான நிலையில் சந்தேகநபர்களுக்கு பிணை வழங்கக்கூடாது என்றார் அவர்.

கைக்குண்டு வைத்திருந்தமை, வாள்வெட்டுடன் தொடர்புடைய 6 வழக்குகள், கொலை வழக்கு ஒன்றுடன் தொடர்புள்ளமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் கீழ் இந்த 3 சந்தேகநபர்களும் விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பிணை வழங்குவது சமூகத்தின் பாதுகாப்பை மேலும் கேள்விக்குள்ளாகிவிடும் என்று தெரிவித்தார் அரச சட்டவாதி நாகரட்னம் நிஷாந்.

இதையடுத்து நீதிபதி மா.இளஞ்செழியன். பிணை மனுவை எதிர்வரும் ஜனவரி மாதம் 23ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (உ-4,37)

## கூட்டமைப்புக்குள்...

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து ஈ.பி.ஆர்.எல்.எவ். வெளியேறுவது தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் பதிலளித்தனர்.

"கூட்டமைப்பின் கதவு திறந்தேதான் உள்ளது. யாரும் வரலாம். யாரும் போகலாம். எமது கதவு மூடப்படவில்லை. எம்முடன் நேரடியாக இணைய விரும்புவர்கள், எமது கொள்கைகளை ஏற்று இணையலாம்" என்று குறிப்பிட்டனர். (உ-5)

## இடைக்கால...

அதற்கு எதிராகப் போராடுவதைவிட அல்லது வெளியிலிருந்து விமர்சிப்பதை விட நாம் எல்லோரும் உள்ளுக்குள் இருந்து உரிமைகளைப் பெறப் போராடுவதே உத்தமம். இந்த அரசமைப்புத் தோல்வியடையுமானால் அது எம்மால் தோல்வி அடைந்ததாக இருக்கக்கூடாது. அது மற்றைய தரப்பினால் தோல்வியடைந்ததாகத்தான் இருக்கவேண்டும். அப்படியானால் மட்டுமே எமக்கு மாற்றுவழி திறக்கும். பன்னாட்டு சமூகம் எம்மைக் கைவிடாது.

இவ்வாறு எதிர்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று மாலை நடைபெற்ற தமிழ்ப் பத்திரிகை ஆசிரியர்களுடனான சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தச் சந்திப்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்களான, மாவை.சோ.சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், த.சித்தார்தன் ஆகியோருடன் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனும் கலந்துகொண்டனர். எதிர்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்ததாவது:

வழிநடத்தல் குழுவில் நம்பிக்கையுடன் பங்குபற்றிக் கொண்டிருக்கின்றோம்: தற்போது சமர்பிக்கப்பட்டுள்ளது இடைக்கால அறிக்கையே. இறுதி வரைவு நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட்டுப் பொது வாக்கெடுப்புடன் நிறைவேற்றப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. இறுதி வரைவுக்கு எமது தமிழ் பேசும் மக்களின் அனுமதியுடனேயே ஆதரவு வழங்குவோம். தமிழ் மக்கள் ஏற்காத தீர்வு இறுதி வரைவில் இல்லை எனில் ஆதரிக்கமாட்டோம். இந்தக் கருமத்தில் நாங்கள் நம்பிக்கையுடன் செயற்படுகின்றோம்.

அரசமைப்பு வழிநடத்தல் குழுவிலிருந்து நானும், சுமந்திரனும் வெளியேற வேண்டும் என்று சுரேஸ்பிரேமசந்திரன் தெரிவித்திருந்தார். ஆனால் நாங்கள் வெளியேறவில்லை. நம்பிக்கையுடன் பயணிக்கின்றோம். அந்த அணியினர் ஒதுங்கி நின்று தற்போது எம்மை விமர்சிக்கின்றார்கள். இது தொடர்பில் நாம் அலட்டிக் கொள்ளமாட்டோம்.

இடைக்கால அறிக்கையில் மத்தியிலும், மாகாணத்தில் ஆட்சி அதிகாரங்கள் இருக்கின்றது எனக் கூறப்பட்டுள்ளது. அதி உச்ச அதிகாரப் பகிர்வுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அந்த அதி உச்ச அதிகாரப் பகிர்வு கூட்டாட்சி என்ற சொல்லுக்கு ஒப்பானது.

பல நாடுகளில் கூட்டாட்சி என்ற சொல் பயன்படுத்தாமல் அதற்கு ஒப்பான அதனை விடவும் மேலான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. இடைக்கால அறிக்கையிலும், மத்தியிலும், மாகாணத்திலும், உள்ளூராட்சி சபையிலும் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அந்த அதிகாரங்கள் மீளப்பெறமுடியாதவாறு இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதனூடாக உள்ளக சுயநிர்ணய உரிமை வருகின்றது. அவ்வாறான தீர்வு வருகின்றபோது அதனை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். கூட்டாட்சி என்ற சொல் இல்லை என்று அதனை நாம் நிராகரித்துவிடமுடியாது.

புதிய அரசமைப்பில் ஒருமித்த நாடு என்பது கூட்டாட்சி என்றுதான் பொருள். இடைக்கால அறிக்கை வந்தவுடன் மகிந்த அதற்கு எதிராக அறிக்கை வெளியிட்டார். மறைமுகமாக கூட்டாட்சியை கூட்டமைப்பு பெற முயற்சிக்கின்றது என்று அதில் குறிப்பிட்டார். இதிலிருந்து இடைக்கால அறிக்கையில் கூட்டாட்சி இருப்பது தெரிகின்றது. இடைக்கால அறிக்கையில் மறைமுகமாகக் கூட்டாட்சியே வலியுறுத்தப்பட்டுள்ளது. பயனற்ற நியாயமற்ற தீர்வை ஏற்கமாட்டோம். அதனை மைத்திரி, ரணிலிடம் கூறிவிட்டோம்.

**வடக்கு - கிழக்கு இணைப்பு**

வடக்கு - கிழக்கை பொது வாக்கெடுப்பின் ஊடாக இணைக்கலாம் என்ற பரிந்துரை முன்வைக்கப்பட்டுள்ளது. இந்தக் கருமத்தை பொதுவாக்கெடுப்பில்லாமலும் முடிவுக்கு கொண்டு வரலாம். நாம் அதற்கே முயற்சிக்கின்றோம். பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அது தோல்வியில் முடிந்தால் பின்னர் ஒன்றும் செய்யமுடியாது - என்றார். (உ-5)

# 8,825 விவசாயிகளுக்கு நெற்செய்கைக்கு ரூ. 61 மில்லியன் மானியம் வழங்கப்படும்

## யாழ்ப்பாண மாவட்ட கமநல சேவைத் திணைக்கள ஆணையாளர் தகவல்

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரைக்கும் 8 ஆயிரத்து 825 விவசாயிகள் 2017-2018 ஆம் ஆண்டு காலபோகத்தில் 11ஆயிரத்து 282 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்வதற்காக பதிவுகளை மேற்கொண்டதன் அடிப்படையில் 61 மில்லியன் ரூபா மானியம் வழங்கப்படவுள்ளதாக மாவட்டக் கமநல சேவைத் திணைக்கள ஆணையாளர் இ.நிசாந்தன் தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
யாழ்ப்பாண மாவட்டத்தின் 15 கமநல சேவை



நிலையங்களின் ஊடாகவே குறித்த எண்ணிக்கை விவசாயிகள் காலபோக நெற்செய்கைக்கான பதிவுகளை இதுவரை மேற்கொண்டுள்ளனர்.
இவர்களுக்கான விண்ணப்பப் படிவங்கள் அனைத்தும் பூர்த்தி செய்து அனுப்பப்பட்டு கொடுப்பனவுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.
இதேநேரம்காலபோகபசளைமானியத்துக்கான பதிவுகளைத் தவற விட்டவர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்பாகவும், மேட்டுப் பயிர்ச் செய்கையில் மிளகாய், வெங்காயம், உருளைக் கிழங்கு, சோயா, சோளம் பயிர்களுக்கான பசளை மானியத்துக்கு எதிர்வரும் 24 ஆம் திகதிகளுக்கு முன்பாகவும் தங்களிற்குரிய கமநல சேவை நிலையங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். என்றார். (எ-101)

## நெடுங்குளத்தில் நீர் தேங்கி நிற்பதால் நெல் வயல்கள் அழிவடையும் நிலை

கொழும்புத்துறை, நவ.17
கொழும்புத்துறை நெடுங்குளத்தில், கடலுக்கு வடிந்தோடும் பிரதான கால்வாயில் உள்ள தடைகள் காரணமாக நீர் தேங்கி நிற்பதால் அந்தப் பகுதியிலுள்ள நெல் வயல்கள் அழிவடையும் நிலை காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.
நெடுங்குளத்தில் இருந்து கொழும்புத்துறை கடலுக்குச் செல்லும் பிரதான கால்வாயின் மேல் செல்லும் வீதிகளின் பாலங்கள் அமைப்பின் போது குறித்த கால்வாயின் கீழ்மட்டத்து க்கு உயரமாக நிலப்பகுதி அமைக்கப்பட்டமையால் பெரு மழையினால் நிரம்பிய குளத்தில் இருந்து நீர் வடிந்தோட முடியாது காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பாக அந்தப் பகுதி விவசாயிகள் சம்மேளனத்தால் நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை, யாழ்ப்பாண மாநகர சபை அதிகாரிகளிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ-135)

## எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலய அதிபர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

சாவகச்சேரி, நவ. 17
தென்மராட்சிக் கல்வி வலயத்தின் எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர் சேவை வகை 11 ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து கல்வி வலயத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
வகை 11 ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் அதிபர் சேவை வகை 111 ஐச் சேர்ந்தவர்களின் விண்ணப்பங்கள் கருத்திற் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.
விண்ணப்பப் படிவங்களை வலய நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் அறிவித்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## டெங்கைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த நடவடிக்கை

### 22ஆம், 23ஆம் திகதிகளில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
வடக்கு மாகாணத்தில் இந்த வருடம் இது வரையான காலப்பகுதியில் 6 ஆயிரத்து 999 பேர் டெங்கு நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளனர் என்று வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் நேற்றுத் தெரிவித்தனர்.
இதனைக் கட்டுப்படுத்த எதிர்வரும் 22ஆம், 23 ஆம் திகதிகளில் ஒருங்கிணைந்த பணியை முன்னெடுப்பதற்கும் நேற்றுத் தீர்மானிக்கப் பட்டது.
வடக்கில் அதிகரிக்கும் டெங்கைக் கட்டுப்படுத்துவது தொடர்பான அவசர கலந்துரையாடல் யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் வடக்கு மாகாண தலைமைச் செயலாளரின் ஏற்பாட்டில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ஜீ.குணசீலன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.
அதில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. அதி உச்சமாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 4 ஆயிரத்து 870 பேரும், வவுனியா மாவட்டத்தில் 816பேரும், மன்னாரில் 518 பேரும், கிளிநொச்சியில் 460 பேரும் முல்லைத்தீவில் 335 பேரும் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டனர்.
யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது அதிகளவில் டெங்கு பரவும் இடங்களாக சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சண்டிலிப்பாய் ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகள் காணப்படுகின்றன.
மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் டெங்குத் தொற்றுக் கட்டுப்பாட்டில் உள்ள போதிலும் யாழ்ப்பாணத்திலேயே அதிகளவில் காணப்படுவதால் உள்ளூராட்சி சபைகள், மாவட்டச் செயலகம், சுகாதாரத் திணைக்களம் என்பன இணைந்து சிறப்புப் பணிகளை முன்னெடுக்கவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.
இதன்படி எதிர்வரும் 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் ஒருங்கிணைந்த பணியை முன்னெடுப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.
டெங்குத் தொற்றுக் காரணமாக வடக்கில் இது வரை 7 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் நேற்றைய கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ4,101)




## யாழ்ப்பாணம் றோட்டறிக் கிளையின் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம், நவ. 17
பிரித்தானியா அஸ்கொட் றோட்டறிக் கழகத்தின் நிதி அனுசரனையுடன் யாழ்ப்பாணக் கிளையின் ஏற்பாட்டில் சுண்டுக்குழிப் பகுதியில் மருத்துவ முகாம் இடம்பெற்றது.
பழைய பூங்கா வீதியில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் றோட்டறிக் குடிலில் கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற மருத்துவ முகாமில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார் உட்பட பல நூற்றுக் கணக்கானவர்கள் கலந்து கொண்டனர். மருத்துவ பரிசோதனைகளின் பின்னர், இனங்காணப்பட்ட குறை போசாக்குடையவர்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டதுடன், மருத்துவரின் பரிந்துரைப்படி மருந்துகளும் வழங்கப்பட்டன. (எ)

## தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் தேங்கி நின்ற வெள்ளம் வழிந்தோடச் செய்யப்பட்டது

### பிரதேச செயலரின் கோரிக்கையினால்

தென்மராட்சி நவ. 17
தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் வழிந்தோட முடியாமல் தேங்கிநின்ற வெள்ளம் பிரதேச செயலரின் வேண்டுகோளின் பிரகாரம் கடந்த செவ்வாய்க்கிழமை வழிந்தோடச் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.
தென்மராட்சி தெற்குப் பிரதேசத்தில் மறவன்புலோ, தச்சன் தோப்பு, கைதடி, நுணாவில், நுணாவில் மேற்கு, கைதடி கிழக்கு போன்ற பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் மேலதிகமாகக் காணப்படும் வெள்ளம் கைதடிப் பாலம் ஊடாக வண்ணாத்திப் பாலத்துக்குச் செல்கின்றது. கைதடி முதன்மைச் சாலையில் அமைக்கப்பட்டு வரும் பால வேலைகளுக்காக வெள்ளம் புகாதபடி நிர்மாணப் பணிகளில் ஈடுபட்டு வருவோர் தடைகளை ஏற்படுத்தியிருந்தனர். அண்மையில் பெய்த மழையினால் வெள்ளம் வழிந்தோட முடியாது வயல்களில் தேங்கியது. இதனால் தமது வயல்களில் பயிர்கள் அழிவடையும் ஆபத்தில் உள்ளன என நெற்செய்கையாளர்கள் பிரதேச செயலகத்தில் முறையிட்டனர்.
இதனையடுத்து கடந்த திங்கட்கிழமை சாலை மேம்பாட்டுத் திணைக்கள அலுவலர், கமநல சேவைகள் நிலைய அலுவலர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் சென்று பார்வையிட்ட பிரதேச செயலர் வெள்ளம் வழிந்தோடும் வரை தடுப்பாகப் போடப்பட்டுள்ள அணைகளை அப்புறப்படுத்துமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டிருந்தார். இதனையடுத்து வெள்ளம் வழிந்தோடக் கூடிய வகையில் சீரமைக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)



வடமராட்சி நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மாணவர் நாடாளுமன்ற அமர்வு அண்மையில் வித்தியாலய அதிபர் ஆர்.சிவசங்கர் தலைமையில் இடம்பெற்றது.

## யாழ்ப்பாணம் அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வைரவிழா

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணம் அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் வைர விழா வித்தியாலய முதல்வர் எஸ்.மோகனராஜன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை(13) மாலை இடம் பெற்றது.
நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சார்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவ கலாநிதி ஜீ.குணசீலன் கலந்து கொண்டார்.
சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் என்.தெய்வேந்திரராஜா, சிவன் அறக்கட்டளை நிதியத்தின் ஸ்தாபகர் கணேஸ்வரன் வேலாயுதம், கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.சிவனேசன் மற்றும் பலர் கலந்து கொண்டார்.



வைர விழா சிறப்பு மலரை சுகாதார அமைச்சர் வைபவ ரீதியாக வெளியிட்டு வைத்தார்.
நிகழ்வில் க.பொ.த சாதாரண தரப் பரிட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மதிப்பளிக்கப் பட்டனர். (எ-56)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்

| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 500 | 400 |
| கணவாய் | 700 | 500 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 500 | 700 |
| சுறா | 500 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 400 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 600 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 400 | – |
| ஒரா | 300 | 300 | 400 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 300 | 200 |
| சூடை | 100 | 120 | 160 | 200 |
| ஒட்டி | 100 | 200 | 300 | 300 |
| திருக்கை | 250 | 200 | 400 | 300 |
| மதனம் | 150 | 150 | 250 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 400 | – |
| வாளை | 100 | 150 | 300 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 120 | 80 | 70 | 80 | 80 |
| கத்தரி | 200 | 240 | 180 | 240 | 220 |
| மரவள்ளி | 60 | 50 | 50 | 50 | 50 |
| பயிற்றை | 200 | 240 | 300 | 240 | 200 |
| பாகல் | 300 | 320 | 350 | 300 | 260 |
| க.கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 80 |
| பெ.வெங்காயம் | 320 | 130 | 120 | 130 | 180 |
| சி.வெங்காயம் | 350 | 240 | 300 | 320 | 260 |
| பூசணி | 60 | 80 | 50 | 80 | 60 |
| தக்காளி | 120 | 140 | 200 | 120 | 160 |
| வாழைக்காய் | 80 | 50 | 70 | 80 | 60 |
| கீரை | 50 | 50 | 40 | 20 | 50 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 40 | 30 | 50 |
| ப.மிளகாய் | 550 | 800 | 800 | 600 | 550 |
| புடோல் | 80 | 120 | 120 | 100 | 100 |
| கோவா | 160 | 160 | 140 | 140 | 140 |
| வெண்டி | 100 | 120 | 160 | 120 | 120 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 180 | 180 |
| லீக்ஸ் | 200 | 200 | 200 | 220 | 220 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 80 | 80 | 100 | 90 | 160 |
| தேசிக்காய் | 100 | 100 | 150 | 60 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 30 | 15 | 20 |
| கறிமிளகாய் | 280 | 300 | 250 | 200 | 340 |
| கரட் | 160 | 200 | 200 | 140 | 260 |
| முருங்கைக்காய் | 160 | 240 | 400 | 120 | 200 |

# பொலிஸாரை அச்சுறுத்தியவருக்கு மறியல் நீடிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கின் போது பொலிஸ் உத்தியோகத்தருக்கு அச்சுறுத்தல் விடுத்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரின் விளக்கமறி யல் நீடிக்கப்பட்டது.
கொலை வழக்கில் முதலாவது சந்தேகநபராக கைது செய்யப்பட்ட பூபாலசிங்கம் இந்திரகுமார் ஊர்காவற்துறை நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து ஊர்காவற்துறை பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பெயரைக் கூறிக் கொலை அச்சறுத்தல் விடுத்திருந்தார். அது தொடர்பில் விசாரணை களை மேற்கொண்ட ஊர்காவற்துறைப் பொலிஸார் ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.
குறித்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை ஊர்காவற்துறை நீதிவான் மன்றில் விசார ணைக்கு வந்தது. அவர் மீதான வழக்கு விசாரணை இன்னமும் நிறைவடையவில்லை என்று பொலிஸார் மன்றில் தெரிவித்தனர். அதனையடுத்து அவருக்கு எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியல் நீடிக்கப்பட்டது. (4-37)

# நயினாதீவு ஐயப்பனுக்கு மண்டல பூசை

யாழ்ப்பாணம், நவ. 17
நயினாதீவு 8ஆம் வட்டாரம் மலையிற் புலம் ஐயனார் ஆலய சிறி சபரீச ஐயப்பனின் மண்டல பூசையும் மகர ஜோதி திருவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் இடம்பெறவுள்ளது.
இன்று மண்டலபூசை ஆரம்பமாகி சுவாமிகளுக்கு மலர்மாலை அணியும் நிகழ்வு இடம்பெறும். எதிர்வரும் 27ஆம் திகதி மண்டல பூசை நிறைவு பெறும். ஜனவரி மாதம் முதலாம் திகதி மகர ஜோதிப் பெருவிழா இடம்பெறும் என்று ஆலய தலைவர் மு.மகாலிங்கம் தெரிவித்தார். (4)

# பொது நூலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 17
"இலங்கையின் வரலாற்றில் பௌத்த மதமும் தமிழும் தமிழர்களும்" என்னும் தலைப்பில் அ.சி. உதயகுமார் தலைமையில் உரை இடம்பெறும். அதனைத்தொடர்ந்து கலந்துரையாடலும் இடம்பெறும்என்று யாழ் பொதுசன நூலக வாசகர் வட்டத்தினர் தெரிவித்தனர்.
நூலக குவிமாட கேட்போர் கூடத்தில் நாளை பிற்பகல் 3 மணியளவில் நிகழ்வு இடம்பெறும். அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (4)

# சாவகச்சேரியில் தேசிய வாசிப்பு மாதத்துக்கான பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், நவ.17
2017ஆம் ஆண்டின் தேசிய வாசிப்பு மாதத்துக்கான பரிசளிப்பு விழா மிருசுவில் பொது நூலகத்தின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை பி.ப சாவகச்சேரி பிரதேச சபை பொது மண்டபத்தில் (கொடிகாமம் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக) இடம்பெறவுள்ளது.
சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் முகுந்தினி கோடீஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தரும் வாழ்நாள் பேராசிரியரும் பொ.பாலசுந்தரம் பிள்ளையும், சிறப்பு விருந்தினராக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செல்வராணி ஜெகதீசனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு சாவகச்சேரி பிரதேச சபை தெரிவித்துள்ளது. (எ)

# வாள் வெட்டு சந்தேகநபர் நீதிமன்றில் சரண்

## விசாரணை செய்யுமாறு யாழ். நீதிவான் உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணம் முதன்மை வீதியில் அண்மையில் இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் முதன்மைச் சந்தேகநபராகத் தேடப்பட்டு வந்தவர் யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் நேற்றுச் சரணடைந்தார்.
அவரை யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைத்த நீதிவான் வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பிலும், ஏனைய குற்றவாளிகள் தொடர்பிலும் உரிய விசாரணைகளினை நடத்துமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.
சட்டத்தரணி தி.கணதீபன் ஊடாக குறித்த சந்தேகநபர் மன்றில் சரணடைந்தார்.
குறித்த பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் இரண்டு பேர் படுகாயமடைந்து யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஏற்கனவே ஒரு சந்தேகநபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் உள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.
குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பிலான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்தன. (4)

# தனியார் பேருந்தில் 21 கிலோ கேரளா கஞ்சா புதனிரவு மீட்பு

*சந்தேகநபர் வீட்டிலிருந்தும் 3,440 போதை மாத்திரைகள் மீட்பு*



மன்னார், நவ. 17
தலைமன்னாரில் இருந்து நேற்று முன்தினம் இரவு கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் பேருந்தில் இருந்து சுமார் 21 கிலோ கேரளா கஞ்சாப் பொதிகளும் கைது செய்யப்பட்ட சந்தேகநபரின் வீட்டில் இருந்து ஒரு தொகை போதை மாத்திரைகளும் மீட்கப்பட்டன என்று பேசாலை பொலிஸார் தெரிவித்தனர்.
தலைமன்னாரில் இருந்து கொழும்பு நோக்கி பயணிக்கும் தனியார் பேருந்து ஒன்றில் கஞ்சாப்பொதிகள் கொண்டு செல்லப்படுவதாக மன்னார் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.
மன்னார் பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக பேசாலை பொலிஸ் நிலையப் பொலிஸ் பரிசோதகர் ஆர்.டி.எம். சிறில் தலைமையிலான குழுவினர் குறித்த பேருந்தை வங்காலைப்பாடு சந்தியில் இடை மறித்து சோதனையிட்டனர்.
இதன் போது பொலிஸார், குறித்த பேருந்தில் இருந்து சுமார் 21 இலட்சம் ரூபாய் பெறுமதியான 21 கிலோ 451 கிராம் எடை கொண்ட கேரளா கஞ்சாப்பொதிகளை மீட்டதோடு பேருந்தில் இருந்த நபர் ஒருவரையும் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டனர். அத்துடன் தலைமன்னாரில் உள்ள அவரது வீட்டுக்குச் சென்று சோதனைகளையும் மேற்கொண்டனர்.
அதன் போது குறித்த வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் சுமார் 3,440 போதை மாத்திரைகளையும் மீட்டனர்.
தற்போது குறித்த சந்தேக நபர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.
விசாரணைகளின் பின் குறித்த நபரை மன்னார் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட வுள்ளதோடு, மீட்கப்பட்ட கஞ்சாப்பொதிகள் மற்றும், போதை மாத்திரைகள் என்பன மன்றில் ஒப்படைக்கப்படவுள்ளன என்று பேசாலை பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ-56)

# அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 10 இந்திய மீனவர்களுக்கு மறியல்

யாழ்ப்பாணம் நவ 17
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்ற ச்சாட்டில் பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து இந்திய மீனவர்கள் 10 பேரை நேற்றுமுன்தினம் கைது செய்ததாக இலங்கைக் கடற்படையினர் தெரிவித்தனர்.
பருத்தித்துறை கடற்பரப்புக்குள் அத்துமீறிய குற்றச்சாட்டில் தமிழ்நாடு நாகப்பட்டினத்தைச் சேர்ந்த பத்து இந்திய மீனவர்க ளையும் அவர்கள் பயணித்த படகு ஒன்றையும் கைப்பற்றியுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர். கைது செய்த அனைவரையும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் கடற்படையினர்நேற்றையதினம்ஒப்படைத்தனர்.
கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர் அவர்களை எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறிய லில் வைக்குமாறு பருத்தித்தறை நீதிமன்று உத்தரவிட்டது. (எ-8)

# உலக நீரிழிவு தின நிகழ்வு வேம்படியில்

யாழ்ப்பாணம், நவ.17
யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் உலக நீரிழிவு தின நிகழ்வு நாளை சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.
யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகத்தின் தலைவர் தி.மைக்கல் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் முதன்மை விருந்தின ராக வடமாகாணம் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அ.திலீபன் கலந்து கொள்ளவுள்ளார். சகலரையும் வருகை தந்து பயனடையுமாறு யாழ்ப்பாணம் நீரிழிவுக் கழகம் தெரிவித்துள்ளது. (எ)

## சட்ட ஒழுங்கை மீறி பயணித்த சாரதிக்கு ரூபா 16,000 தண்டம்

சாவகச்சேரி, நவ. 17
மோட்டார் சைக்கிளுக்கான காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகன வரிப் பத்திரம் ஆகியவை இன்றி சட்ட ஒழுங்கை மீறிப் பயணித்த அச்சுவேலியைச் சேர்ந்த மோட்டார் சைக்கிள் சாரதிக்கு சாவகச்சேரி நீதி மன்றில் நேற்று 16 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.
சாவகச்சேரி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான் காப்புறுதிப் பத்திரமின்மைக்கு 10 ஆயிரம் ரூபாவும் வரிப் பத்திரமின்மைக்கு 3 ஆயிரம் ரூபாவும் அளவுக்கு அதிகமாக ஆள்களை ஏற்றிச் சென்றமைக்கு 3 ஆயிரம் ரூபாவுமாக 16 அயிரம் ரூபா தண்டம் விதித்தார் எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-9)

## யாழ். பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் புதிய தலைவராக ஜெயலக்சுமி இராசநாயகம்

யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறையின் புதிய தலைவராக கலாநிதி ஜெயலக்சுமி இராசநாயகம் கடந்த 13ஆம் திகதி பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டார்.
வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியான இவர், 1997ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகின்றார்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறை சார்ந்த முதுதத்துவமாணிப் பட்டத்தையும் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் கல்வியியல் கலாநிதி பட்டத்தையும் பெற்றவர். இவர் கல்வியியற்றுறைசார்ந்து சமுதாயக் கல்வி, கல்வித் தத்துவம், நவீன முறையில் தமிழ்மொழி கற்பித்தல் முதலிய நூல்களை உருவாக்கி வெளியிட்டமையும் குறிப்பிடத்தக்கது. (எ-8)

### சந்திகளில் நிற்போரைக் கைதுசெய்ய

# பொலிஸ் சுற்றுக்காவல் இரவில் நடைமுறைக்கு

## மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், நவ. 17
வடக்கு மாகாணத்தில் சந்திகளில் கூடிநின்று அரட்டை அடிப்பவர்கள், கும்பலாக மோட்டார் சைக்கிள்களில் செல்பவர்களை விசாரணை செய்யவேண்டும். இரவு வேளைகளில் பொலிஸ் சுற்றுக்காவல் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.
இவ்வாறு நேற்றுமுன்தினம் மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் வடக்கிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்கு பணித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.
வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக கூறப்படுகின்றது. இதேவேளை யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைய நாள்களாக வாள் வெட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. வவுனியா பேருந்து நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கஞ்சா கடத்தல் சம்பவங்கள் பல நாள்களாக அதிகரித்துள்ளன.
யாழ்ப்பாணத்தில் கடந்த சில நாள்களாகத் தொடரும் வாள்வெட்டுச் சம்பவங்களை அடுத்து இந்த உத்தரவு தமக்குக் கிடைத்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

> “ வடக்கு மாகாணத்தில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்தும் வகையில் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளதாக கூறப்படுகின்றது

வடக்கில் சமூக விரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களை, பொலிஸார் கண்டும்காணாது விட்டுள்ளனர் என்று விசனம் தெரிவித்துள்ள சமூக ஆர்வலர்கள் அண்மையில் பொலிஸார் மீது வாள்வெட்டுச் சம்பவம் இடம்பெற்றபோது மிக விரைந்து செயற்பட்ட அவர்கள் தற்போது பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களை கட்டுப்படுத்தாதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர்.
இதேவேளை வடக்கு மாகாண ஆளுநர் வடக்கின் தற்போதைய நிலைமை தொடர்பில் இலங்கை பொலிஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாக நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-8)

### உயர்தரப் பரீட்சைத் தகைமையுடன்

# பரீட்சைக்குத் தோற்றுவோரின் சந்தர்ப்பங்கள் பட்டதாரிகளால் இல்லாமற் செய்யப்படுகின்றன

யாழ்ப்பாணம்.நவ.17
ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைத் தகைமையுடன் உள்வாங்கப்படும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான சந்தர்ப்பங்களை பல்கலைக்கழகப் பட்டதாரிகள் இல்லாமல் செய்கின்றனர். என்று துறை சார்ந்த அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இது பற்றி மேலும் தெரிவித்ததாவது:
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான தகைமை ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றியிருத்தல் வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வேலை இல்லாத பிரச்சினை காரணமாக தற்போது பல்கலைக்கழகப் பட்டதாரிகளும் இதற்கு தோற்றுகின்றனர். பட்டதாரிகள் துறை சார்ந்த வேறு வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும். ஆனால் உயர்தரப் பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கு இவ்வாறான சில வேலைக்கு மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.
ஆனால் இப்போது பட்டதாரிகள், குறித்த பதவிக்கு விண்ணப்பித்து தெரிவு செய்யப்பட்டு நியமனம் கிடைத்த சில காலத்தில் வேறு வேலைக்கு சென்று விடுகின்றனர். இதனால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் வெற்றிடங்கள் இன்னமும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நிரப்பப்படாமல் உள்ளன.
யாழ்ப்பாணப் மாவட்டத்தில் 102 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் உள்ளன. ஆனால் கடந்த தினங்களில் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு 45 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களில் 20 பேர் பல்கலைக்கழக பட்டதாரிகள் ஆவர். ஆகவே இவர்கள் வேறு வேலை கிடைத்தால் வெளியேறும் சந்தர்ப்பங்கள் உள்ளன.
ஆகவே இந்த வெற்றிடங்கள் தொடர்ச்சியாக நிரப்பப்படாமல், சேவைகள் வழங்குவதில் இடர்கள் ஏற்படும். ஜீ.சி.ஈ. உயர்தரத்துடன் இருப்பவர்களை சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு உள்வாங்குவது சிறப்பாக அமையும் என்று மேலும் தெரிவித்தனர். (எ-ரி)

### தொழிலாளர்களுக்கு

## பனை, தென்னை மரம் ஏறும் இலகு கருவி வழங்க ஏற்பாடு



யாழ்ப்பாணம், நவ. 17
யாழ்ப்பாணத்தில் மரம் ஏறும் இலகு கருவியை வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கையை பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டுள்ளது. முதற்கட்டமாக ஐம்பது வரையிலான இலகு கருவிகள் தருவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.
கொழும்பு தேசிய இயந்திரவியல் ஆராய்ச்சி நிறுவனத்தினால் இந்தக் கருவிகள் தயாரிக்கப்பட உள்ளன. ஜப்பானில் இருந்து சபையால் தருவிக்கப்பட்ட பனை தென்னை மரம் ஏறும் இலகு கருவி ஒன்றின் ஒத்த வடிவில் இந்தக் கருவிகள் தயாரிக்கப்படவுள்ளன.
குடாநாட்டில் பனையில் ஏறி தொழில் மேற்கொள்ளும் தொழிலாளர்களின் வசதி கருதி கருவிகளை அவர்களுக்கு வழங்கி வைக்கவும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.
ஏற்கனவே ஜப்பானில் இருந்து தருவிக்கப்பட்ட இந்தக் கருவியை தொழிலாளர்கள் பரீட்சார்த்தமாக பயன்படுத்தியதில் வெற்றியும் கிடைத்தது. தொழிலாளர்கள் இந்தக் கருவிகளைப் பயன்படுத்தி மரம் ஏறுவதன் ஊடாக பெரிதும் நன்மையடைவார்கள் என்று சபை தெரிவித்தது. (எ-17)

## மர முந்திரிகைச் செய்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு 2018இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்.நவ.17
வடக்கு மாகாணத்தில் மர முந்திரிகைச் செய்கை தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு அடுத்த ஆண்டு முதல் நடைபெறும் என்று மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்தார்.
இது பற்றி அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாண விவசாயிகள் புகையிலைக்குப் பதிலாக மாற்றுப் பயிர் வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர். இந்த நிலையில் ஓரளவு வருமானம் தரக் கூடியதாக இருக்கும் என்று மரமுந்திரிகைச் செய்கையை அறிமுகப்படுத்தியுள்ளோம். அத்துடன் செய்கையை ஊக்குவிக்கவும் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு வழங்கத் திட்டமிட்டுள்ளோம்.
புதிதாக இந்தப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் போது விவசாயிகளுக்கு அதற்கான போதிய அறிவு வேண்டும். ஆகவே முதல் கட்டமாக மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தின் வழிகாட்டலில் முல்லைத்தீவு மாவட்டத்தில் மரமுந்திரிகைச் செய்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
ஏனைய மாவட்டங்களிலும் இந்தச் செய்கையை ஊக்கப்படுத்த அது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகள் நடத்தப்படவுள்ளன. அத்துடன் இதற்கான சிறப்பு மானிய முறைகளையும் விவசாயிகளுக்கு வழங்க மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனம் முன்வந்துள்ளது- என்றார். (எ-ரி)

# நகை திருடி சுத்துமாத்துக் கதை கூறி தப்பிய திருடன் வசமாக மாட்டினான்

### தப்புவதற்கு உதவியரே பிடித்துக் கொடுத்தார்

வவுனியா, நவ. 17
நகைக்கடையில் நகைகளைத் திருடியதோடு அங்கிருந்து தப்பிச் செல்வதற்காக, "திருடன் நகைகளைத் திருடிச் செல்கிறான் அவனைப் பிடிக்க வேண்டும் என்னை உங்கள் மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் செல்லுங்கள்" என்று வீதியில் வந்தவரிடம் கூறி அவருடன் குறிப்பிட்ட தூரம் சென்ற பின்னர் நழுவ முயன்றபோது வசமாக மாட்டினார். நகைகளும் மீட்கப்பட்டன.
இந்தச் சம்பவம் வவுனியாவிலுள்ள நகைக்கடை ஒன்றில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் இடம்பெற்றது.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:
வவுனியா பசார் வீதியிலுள்ள நகைக்கடை ஒன்றுக்குள் இரவு 8 மணியளவில் சென்ற குறித்த நபர் மோதிரம் வாங்கவேண்டும் என்று மோதிரங்களைக் காண்பிக்குமாறு கேட்டுள்ளார்.
கடையில் நின்றிருந்த ஊழியர் ஒருவர் மோதிரங்களை எடுத்துக் காண்பித்துள்ளார். சந்தேகநபர் அவற்றைத் தனது கையில் வாங்கி, பார்ப்பது போல பாசாங்குசெய்துவிட்டு 5 மோதிரங்களுடன் திடீரென்று கடையிலிருந்து வெளியே ஓடியுள்ளார். வீதியில் அந்தநேரம் மோட்டார் சைக்கிளில் ஒருவர் வந்துள்ளார்.
அவரிடம் குறித்த நபர் "திருடன் நகைகளைத் திருடிச் செல்கிறான். அவனைப் பிடிக்க வேண்டும். உங்களுடன் வருகிறேன் விரைவாகச் செல்லுங்கள்" என்று கூறியுள்ளார். அதனை நம்பிய மோட்டார் சைக்கிள் நபரும் சந்தேக நபருடன் விரைந்து பயணித்துள்ளார்.
வவுனியா குருமன்காடு சந்தியைச் சென்றடைந்தபோது, சந்தேகநபர் தன்னை இறக்கிவிடுமாறும் நகைக்கடையின் உரிமையாளரை அழைத்துக்கொண்டு தான் செல்வதாகவும் கூறியுள்ளார். அதனையும் நம்பிய மோட்டார் சைக்கிள் நபர் சந்தேக நபரை இறக்கிவிட்டார்.
எனினும் அதன் பின்னர் அவரது நடத்தையில் சந்தேகம் கொண்டுள்ளார். அதனால் மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டுக் குறித்த நபரைப் பின்தொடர்ந்து சென்று அவதானித்துள்ளார்.
சந்தேகநபர் தனது சேட்டினைக் கழற்றி திருடிய நகைகளை பாதுகாப்பாக அதில் சுற்றி மறைத்ததைக் கண்டார். சுதாகரித்துக் கொண்ட மோட்டார் சைக்கிள் நபர் அவரைக் கட்டிப்பிடித்துத் தப்பி ஓடாதவாறு செய்து கூக்குரலிட்டார். அங்கு பலரும் கூடினர். அதனால் நகைகள் திருடிய சந்தேக நபர் மாட்டினார்.
சந்தேக நபர் குருமன்காடு சந்தியிலுள்ள பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பொலிஸார் அவரைச் சோதனையிட்ட போது மோதிரங்கள் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. அவரிடம் விசாரணை தொடர்வதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.
23 வயதுடைய குறித்த சந்தேக நபர் திருடிய 5 மோதிரங்களும் 20 கிராமுடையவை. ஒரு இலட்சத்து 30ஆயிரம் ரூபா பெறுமதியானவை என்று தெரிவிக்கப்பட்டது.
(எ-4-402)

# மருத்துவ சேவையின் 41 கட்டடத் தொகுதிகள் நடப்பு வருட இறுதியில் பாவனைக்கு

யாழ்ப்பாணம், நவ.17

வடக்கு மாகாணத்தில் மருத்துவ சேவையை விரிவு படுத்துவதற்கு அமைக்கப்பட்ட 41 புதிய கட்டடத் தொகுதிகள் நடப்பு வருடத்தின் இறுதியில் பாவனைக்கு வரவுள்ளன என்று மாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப் பட்டதாவது:

நடப்பு வருடத்தில் மாகாண குறித்தொகுத்துக்கப்பட்ட நிதியாக 335 மில்லியன் கிடைத்தது. யாழ்ப்பாண மாவட்டம் 105 மில்லியன், வவுனியா மாவட்டம் 55 மில்லியன், மன்னார் மாவட்டம் 65 மில்லியன், கிளிநொச்சி மாவட்டம் 55 மில்லியன், முல்லைத்தீவு மாவட்டம் 55 மில்லியன் என்றவாறு நிதி கிடைத்தது.

மருத்துவர்களுக்கான விடுதிகள், தாதியர்களுக்கான விடுதிகள், வெளிநோயாளர் பிரிவுகள், நோயாளர் காவு வண்டிக்கான தரிப்பிடங்கள், நோயாளர்களுக்கான மருத்துவ விடுதிகள், உபகரணக் களஞ்சியங்கள், பிண அறைகள், மருத்துவ ஆலோசகர்களுக்கான விடுதிகள் உட்பட 36 கட்டடத் தொகுதிகள் அமைக்கும், சீரமைக்கும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. தேவையின் நிமித்தம் சில கட்டடத் தொகுதிகள் பாவனைக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஏனையவை மேற்பார்வைகள் நிறைவு பெற்ற பின்னர் வருட இறுதிக்குள் பாவனைக்கு கொண்டு வரம்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்டம் 11, வவுனியா மாவட்டம் 13, மன்னார் மாவட்டம் 4, கிளிநொச்சி மாவட்டம் 7, முல்லைத்தீவு மாவட்டம் 5 என்ற அடிப்படையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-ரி)

# ஆங்கிலமொழிமூலமான தனியார் முன்பள்ளிகளை வடக்கில் தடைசெய்யுங்கள்

## முன்பள்ளி ஆசிரியர் சங்கம் ஆளுநரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்.நவ.17

வடக்கு மாகாணத்தில் தற்போது ஆங்கில மொழியை அடிப்படையாகக் கொண்ட தனியார் முன்பள்ளிகள் அதிகரித்துள்ளன. அவற்றின் செயல்பாட்டை நிறுத்த வேண்டும். அத்தோடு வடக்கு மாகாண முன்பள்ளிகள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பில சரியான ஒரு நிலைப் பாட்டை உண்டாக்க வழிவகைகள் செய்ய வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கப சார்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு கோரிக்கை முன்வைக்கப்பட் டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்களின் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்கும், தேவைகளை நிறைவு செய்து கொள்ளுவதற்கும் 2016ஆம் ஆண்டில் வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

குழந்தைகளின் அடிப்படைக் கல்வியான விளையாட்டுடனான கல்வியை வழங்கி அவர்களுக்கு கல்வியின் ஆரம்பத்தை தொடக்கி வைக்கின்றோம். ஆனால் முன்பள்ளி ஆசியர்களுக்கான (எமக்கான) அடிப்படைத் தேவைகள் இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை.

கூட்டுறவுச்சங்கம் மற்றும் சனசமூக நிலையங்களின் நிதிப் பங்களிப்புடன், வலயக் கல்வி அலுவலகத்தின் வழிகாட்டலுடன் முன்பள்ளி கற்றல் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன. முன்பள்ளிகள் யாவும் வெவ்வேறான நிர்வாகங்களின் கீழ் பொதுவான நடைமுறை இல்லாமல் செயல்படுகின்றன. ஆகவே வடக்கு மாகாணத்தில் உள்ள முன்பள்ளிகள் யாவும் பொதுவான ஒரு முறைமையின் கீழ் செயற்பட வேண்டும்.

> எமது அடிப்படைச் சம்பளம் 3 ஆயிரம் ரூபா. இது தவிர முன்பள்ளி நிர்வாகம் சிறு தொகையை தந்தாலும் 6 ஆயிரம் ரூபாவே எமது மாதச் சம்பளமாக உள்ளது

நாள் முழுவதும் பல்வேறு சூழ்நிலைகளிலும் குழந்தைகளுக்குக் கல்வி வழங்குகின்றோம். ஆனால் எமது அடிப்படைச் சம்பளம் 3 ஆயிரம் ரூபா. இது தவிர முன்பள்ளி நிர்வாகம் சிறு தொகையைத் தந்தாலும் 6 ஆயிரம் ரூபாவே எமது மாதச் சம்பளமாக உள்ளது. ஆகவே எமக்கான சம்பளம் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

இந்தப் பருவத்தில் குழந்தைகள் பார்த்தல், கேட்டல் போன்ற முறைகளில் தான் கற்றுக் கொள்வார்கள். ஆகவே அந்தக் கல்வியை வழங்கும் முன்பள்ளிகளின் கட்டட அமைப்புக்கள், விளையாட்டு உபகரணங்கள் போன்ற தேவைகள் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

தாய் மொழியை முன்னிலைப்படுத்தி, விளையாட்டு, பாடல், ஆடல், போன்ற முறையில் கல்வியை வழங்க வேண்டும். நாம் அவ்வாறு தான் வழங்குகின்றோம். குழந்தைப்பருவத்தில் ஒரு குறித்த அளவிலேயே கல்வியை வழங்க வேண்டும். ஆனால் தனியார் முன்பள்ளிகள் அவ்வாறு இல்லை.

ஆகவே இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநருடனான சந்திப்பில் முன்பள்ளிகள் ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (எ-ரி)

# பல நோக்குக் கூட்டுறவுச் சங்க நிர்வாகத்தில் தொடரும் குழப்பம்

யாழ்ப்பாணம், நவ. 17

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத்தின் நிர்வாகத் தெரிவு இடம்பெற்று சில மாதங்கள் கூட நிறைவடையாத நிலையில் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகத்துக்குள் ஒருவருக்கு ஒருவர் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கொண்டுவந்தமையினால் ஏற்பட்ட நிர்வாகக் குழப்ப நிலை தொடர்ந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

ஆரம்பத்தில் சங்கத்தின் புதிய தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகத் தெரிவு கடந்த சில மாதங்களின் முன்னர் இடம்பெற்றது. நிர்வாகத் தெரிவில் சேயோன் என்பவர் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டு ஓரிரு மாதங்களிலேயே புதிய தலைவருக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டு அதில் சிலர் கையொப்பம் இட்டனர் எனவும் அவ்வாறு கையொப்பம் இட்ட நான்கு பேருக்கும் எதிராக பொதுச் சபையில் உள்ள 81 பேர் கையொப்பம் இட்டு நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டதாகவும் கூறப்படுகின்றது. இதனால் நிர்வாகத்தில் குழப்ப நிலை ஏற்பட்டது.

இது தொடர்பாக குறித்த சங்கத்தின் தலைவர் சேயோனுடன் தொடர்பு கொண்டு கேட்டபோது,

நல்லூர் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய நிர்வாகத் தெரிவின் ஊடாக நான் தலைவராக நியமிக்கப்பட்டேன்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட பின்னர் எமது சங்கத்தின் கட்டடத்துக்கு கொட்டகை போடும் வேலைத்திட்டம் ஒன்றை மேற்கொண்டேன். அதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரின் 5 இலட்சம் ரூபாய் நிதி இருந்தது. அந்த நிதியும் மேலதிகமாக நான்கு இலட்சம் ரூபா சங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட நிதியுமாக 9 இலட்சம் ரூபாய் நிதியில் அந்த வேலைத்திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்தச் சம்பவத்தை வைத்தும் வேறு சில தனிப்பட்ட முரண்பாடுகளை வைத்தும் எமது நிர்வாகத்தில் உள்ள ஒரு சிலர் மட்டும் எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணையைக் கொண்டு வர எத்தனித்தனர். அந்த தீர்மானத்தில் வெறுமனே நான்கு பேர் மட்டுமே கையொப்பம் இட்டதாக அறிகின்றேன்.

எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ள நான்கு பேருக்கும் எதிராக பொதுச் சபையில் உள்ள 81 பேர் கையொப்பமிட்டு அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான சூழ்நிலையை எதிர்கொள்ள கடந்த 5 ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டத்தை கூட்டினோம். கூட்டத்தில் எனக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணை கொண்டுவந்தவர்கள் என்னிடம் மன்னிப்புக் கோரினர். அத்துடன் தமது பிரேரணையை மீளப் பெறுவதுடன் சமாதானமாகப் போவதாகவும் என்னிடம் தெரிவித்தனர். இந்தக் கூட்டத்துக்கு 79 பேர் கலந்துகொண்டனர்.

அதில் நான் அவர்களுக்கு மூன்று மாதம் கால அவகாசம் கொடுத்தேன். அது வரை அவர்கள் குழப்பம் விளைவிக்காது விட்டால் மன்னிப்பு வழங்குவது என தீர்மானித்துள்ளேன். அதற்கிடையில் வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கவுள்ளேன். "உங்களுக்கு (எனக்கு) எதிராக எதுவும் செய்யக்கூடாது என்றால் எமது சங்கத்தில் மூத்த உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்ட கட்டாய தண்டனையிலிருந்து அவரை விடுவிக்க வேண்டும்" எனச் சிலர் என்னுடன் வந்து பேச்சு (டீல்) நடத்தினர். எனினும் நான் அதற்கு இணங்கவில்லை. இதனால் கடந்த 11ஆம் திகதி இடம்பெற்ற நிர்வாக சபைக் கூட்டத்திலும் எவ்வித முடிவையும் எடுக்கவிடாது குழப்பங்களை ஏற்படுத்தினர். வெறுமனே கடந்த கூட்டறிக்கை வாசித்தமை மட்டுமே இடம்பெற்றது. இவ்வாறான குழப்பங்கள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன.

இந்த நிலையில் மீண்டும் இன்றைய தினம் நிர்வாக சபைக் கூட்டத்தை கூட்டவுள்ளேன்-என்றார். (எ-8)

# இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசியலை வியாபாரமாகவே நோக்குகின்றனர்

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் கூறுகிறார்

வவுனியா, நவ. 17

இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் இலங்கை முஸ்லிம் அரசியலையும் வியாபாரமாகவே நோக்குகின்றார்கள். இவர்கள் பொதுபலசேனாவுடனும் டீல் பேசுகின்றார்கள். என்றார் அ. அஸ்மின்.

ஆண்டியாப் புளியங்குளம் மக்கள் சந்திப்பொன்று வாழவைத்தகுளம் பொது நோக்கு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. அங்கு பொதுமக்களுக்கான உதவித்திட்டங்களும் பகிர்ந்தளிக்கப்பட்டன.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே வடக்கு மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

முஸ்லிம்களின் வியாபாரம் உன்னதமானது. அது நபிவழி வாழ்வாதாரமுமாகும். வியாபாரம் மக்களுக்குப் பயனுள்ளதாக, மக்களால் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரமாக இருக்க வேண்டும். ஆனால் இன்றைய முஸ்லிம் அரசியல் தலைவர்கள் அரசியலையும் வியாபாரமாகவே நோக்குகின்றார்கள். அவர்கள் ஒன்றை முதலீடு செய்து அதனை பல மடங்கு இலாபமாகப் பெற்றுக்கொள்ளவே முயற்சிக்கின்றார்கள். எனவே அத்தகைய வியாபாரிகளிடமிருந்து மக்கள் நலன் என்ற அரசியலின் உன்னத நோக்கத்தை எம்மால் எதிர்பார்க்க முடியாது. அவர்கள் எமது மக்களின் நலன்களுக்காக உழைப்பார்கள் என்று எதிர்பார்ப்பதும் அர்த்தமற்றதே.

உதாரணத்துக்கு ஒன்றை மட்டும் இங்கு குறிப்பிடுகின்றேன்.

மறிச்சுக்கட்டி பிரதேசத்தின் எல்லைகள் தொடர்பில் ஒரு பிரச்சினை எழுந்தது. அரச தலைவர் ஒரு வர்த்தமானி அறிவித்தலின் மூலம் அதனை பாதுகாக்கப்பட்ட வனப்பிரதேசமாகப் பிரகடனம் செய்தார். அதற்கு முன்னரே வன்னியின் அரசியல் வியாபாரிக்கு எதிராக வில்பத்து சரணாலயக் காடுகளை, காணிகளை அபகரிப்பதாக வழக்குகள் தொடுக்கப்பட்டன. அதேபோன்று கொழும்பில் மற்றுமொரு அரசியல் வியாபாரிக்கு எதிராகவும் வழக்குகள் பதிவுசெய்யப்பட்டன. அந்த வழக்குகள் சிலவற்றை பொதுபலசேனா தாக்கல் செய்திருந்தது.

அதேபோன்று ஆர்.ஆர்.டி என்னும் அமைப்பும், இலங்கை முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடத்திய இனவாதப் பரப்புரைகள், அமைதியைக் குலைக்கும் வகையிலான செயற்பாடுகளுக்காக பொதுபலசேனாவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

சமூகத்துக்கு எதிராக பொதுபலசேனா மேற்கொண்ட அனைத்துவிதமான எதிர் நடவடிக்கைகளையும் நாம் மன்னிக்கின்றோம்.

எங்களுக்கு எதிராக நீங்கள் போட்டிருக்கின்ற வழக்குகளை வாபஸ்பெற வேண்டும் என்று டீல் பேசப்படுவதாக செய்திகள் வந்திருக்கின்றன. இப்படியாக டீல் பேசுகின்ற தலைவர்கள் எமது மக்களின் நலனுக்காக அர்ப்பணத்தோடு செயலாற்றுவார்கள் என்று நாம் எதிர்பார்க்க முடியாது.

மக்கள் சுயாதீனமாக இருந்தால் மாத்திரமே அரசியல் தலைவர்கள் மக்களுக்கு விசுவாசமாக இருப்பார்கள், இல்லாவிட்டால் மக்களின் முதுகுகளில் அவர்கள் சொகுசாகச் சவாரி செய்வார்கள். இப்போது மீண்டும் மக்கள் சுயாதீனமாகத் தீர்மானமெடுக்கும் ஒரு சூழ்நிலை உள்ளூராட்சித் தேர்தல்கள் என்னும் வடிவத்தில் வரவிருக்கின்றது. அதனை மக்கள் சரியாகப் பயன்படுத்தவேண்டும்-என்றார். (எ-21)

# அரச சாராயம் விற்றவருக்கு ரூ. 60,000 தண்டம்

யாழ்ப்பாணம், நவ. 17

சட்டவிரோதமாக அரச சாராயத்தை விற்றவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்தது ஊர்காவற்துறை நீதிமன்று.

நெடுந்தீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குடும்பத் தலைவர் இந்தக் குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது தன் மீதான குற்றச்சாட்டை மறுத்திருந்தார். அதனால் அந்த வழக்கு விளக்கத்துக்கு நியமிக்கப்பட்டது.

விளக்க விசாரணையின்போது அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டது. அதனையடுத்து தீர்ப்புக்காக இந்த வழக்கு நேற்று நீதிவான் ஏ.எம்.எம்.றியாழ் முன்னிலையில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்போதே தண்டம் விதிக்கப்பட்டது. (எ-4)

# 50ஆயிரம் வீட்டுத் திட்டத்தில் மாற்றங்கள்

## தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, நவ. 17

போரால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கில் 50ஆயிரம் செங்கல் மற்றும் சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசத்தை அரசு மேலும் நீடித்துள்ளது.

இந்த வீடுகளை அமைப்பதற்கான நியமங்களிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 13ஆம் திகதியுடன் கேள்விகோரல் விண்ணப்பங்கள் திறக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. தற்போது அதற்கான கால அவகாசம் நவம்பர் 27ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைக் கையாளும் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சானது செங்கற்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக சிமெந்திலான வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரைகளுக்கான வேண்டுகோள் அடங்கிய பின்னிணைப்பு ஒன்றைத் தனது திட்டத்துடன் இணைத்துள்ளது.

வடக்கு - கிழக்கில் சில இடங்களில் செங்கற்களைப் பெற்றுக்கொள்வது சிரமம் என்பதன் காரணமாக சிமெந்து வீடுகளைக் கட்டுவதற்கான அனுமதியை அமைச்சு வழங்கியுள்ளது.

ஆற்று மண்ணைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரை முன்னர் முன்வைக்கப்பட்ட போதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக கடற்கரை மணல் மற்றும் சாணை மணல் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மரத்தைப் பயன்படுத்துவது தொடர்பிலும் சில தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. முன்னர் முதிர்ந்த மரங்களைப் பயன்படுத்தியே அனைத்துக் கதவுகளும் போடப்பட வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ள மாற்றத்தை அடுத்து வீட்டின் முன்கதவு மற்றும் பின்கதவு ஆகியன மட்டும் முதிர்ந்த மரப்பலகைகளில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. வீட்டின் உட்கதவுகள் வீட்டு உரிமையாளரின் விருப்பிற்கேற்ப எந்த வகையான மரத்திலும் போடப்பட முடியும் எனவும் இதே போன்று மலசல கூடத்திற்கான கதவும் சாதாரண மரத்தில் இடப்படலாம் எனவும் திட்டத்தில் மாற்றியமைக்கப் பட்டுள்ளது. (5)

> ❝ ஆற்று மண்ணைப் பயன்படுத்தி வீடுகளைக் கட்டுவதற்கான பரிந்துரை முன்னர் முன்வைக்கப்பட்ட போதிலும் சில நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக கடற்கரை மணல் மற்றும் சாணை மணல் போன்றவற்றைப் பயன்படுத்துவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி ஜெ.ஸ்.கருணதாஸ்



திருமதி சு.சுதாஹரன்

எமது பாடசாலை ஆசிரியர்களாகிய **திருமதி ஜெ.ஸ்ரெலன் கருணதாஸ்** ஆசிரியர் அவர்கள் தேசிய மட்டத்தில் நல்லாசிரியர் விருதான **" குரு பிரதீபா பிரபா"** விருதினையும், திருமதி சுமதி சுதாஹரன் ஆசிரியர் அவர்கள் **மாகாண மட்டத்தில்** நல்லாசிரியர் விருதான **"பிரதீபா பிரபா"** விருதினையும் பெற்றுக்கொண்டமையையிட்டுப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:- ஆசிரியர் கழகம்**
**யா/அராலி சரஸ்வதி ம.வி, அராலி.**


## 2018 ஆம் ஆண்டிற்கான மீன் சந்தை/இறைச்சிக் கடைகளுக்கான கேள்வி அறிவித்தல்
## மாந்தை மேற்கு பிரதேசசபை

மாந்தை மேற்கு பிரதேசசபையின் எல்லைக்குட்பட்ட இறைச்சிக்கடைகளை 01.01.2018 தொடக்கம் 31.12.2018 வரை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார். என்னும் முகவரியில் (தொலைபேசி இல 023-2051853/ 023-2051854) கட்டணங்களை செலுத்தி கேள்வி பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

### 2018 ஆம் ஆண்டிற்கான கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விபரம் | மீளளிக்கப்படாத கேள்வி படிவக்கட்டணம் (VAT தவிர) | மீளளிக்கப்படும் வைப்புப்பணம் (VAT தவிர) | ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (VAT தவிர) | அனுமதிக்கப் பட்ட கொல்களம் | 1kg இறைச்சியின் அங்கீகரிக்கப்பட்ட உச்ச விலை |
|---|---|---|---|---|---|---|
| | அடம்பன் உப அலுவலகம் | | | | | |
| 01 | காத்தாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 544.500.00 | புளியங்குளம் | தனி இறைச்சி -700.00 முள்ளுடன் - 650.00 ஈரல் - 800.00 |
| 02 | அடம்பன் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 413.820.00 | | |
| 03 | வட்டக்கண்டல் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 330.000.00 | | |
| 04 | ஆண்டாங்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 330.000.00 | | |
| 05 | அடம்பன் மீன் சந்தை 01. 02. 03 | 10.00.00 | 10.000.00 | 55.000.00 | | |
| | விடத்தல்தீவு உப அலுவலகம் | | | | | |
| 06 | விடத்தல்தீவு மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 181.500.00 | பெரியமடு | தனி இறைச்சி -700.00 முள்ளுடன் - 650.00 ஈரல் - 800.00 |
| 07 | பெரியமடு மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 196.020.00 | | |
| | இலுப்பைக்கடவை உப அலுவலகம் | | | | | |
| 08 | இலுப்பைக்கடவை மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 121.000.00 | மூன்றாம்பிட்டி | தனி இறைச்சி -700.00 முள்ளுடன் - 650.00 ஈரல் - 800.00 |
| 09 | மூன்றாம்பிட்டி மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 123.420.00 | | |
| | மடு உப அலுவலகம் | | | | | |
| 10 | பெரிய பண்டிவிரிச்சான் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 363.000.00 | பெரிய பண்டிவிரிச்சான் | தனி இறைச்சி -700.00 முள்ளுடன் - 650.00 ஈரல் - 800.00 |
| 11 | காக்கையன்குளம் மாட்டிறைச்சிக் கடை | 1.000.00 | 10.000.00 | 330.000.00 | காக்கையன்குளம் | தனி இறைச்சி -700.00 முள்ளுடன் - 650.00 ஈரல் - 800.00 |

01. கேள்வி பத்திரம் வழங்கும் காலம் - 18.11.2017 மு.ப 9.00 –08.12.2017 பி.ப 4.00 மணிவரை. 11.12.2017 பி.ப 2.00 மணிவரை
02. கேள்வி பத்திரம் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி - 11.12.2017 பி.ப 2.00 மணிவரை.
03. கேள்வி பத்திரம் திறக்கப்படல் - 11.12.2017 பி.ப 2.00 மணிக்கு.
04. 11.12.2017 ஆம் திகதி பி.ப 2.00மணிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும்.
05. கேள்விப்பத்திரங்கள் இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன், மன்னார் என்னும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் மூலப்பிரதியினையும், பிரதியினை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், மன்னார் என்ற முகவரிக்கும் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல் வேண்டும்.
06. கேள்விப்பத்திரம் பெறுபவர்மாந்தை மேற்கு பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவராக இருப்பதுடன் அவரது வதிவிடத்தை கிராம அலுவலர் மற்றும் பிரதேச செயலர் மூலம் உறுதிப்படுத்திய கடிதம் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை உரியவர் நேரடியாக சமர்ப்பிப்பதுடன் அதன் புகைப்பட பிரதியையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
07. கேள்வி படிவத்தினை பெறுபவர் உள்ளூராட்சி மன்றத்தினால் தவறுனராக கணிக்கப்பட்டவராகவோ அல்லது சபைக்கு எந்தவித நிலுவைக் கட்டணங்களையும் முன்னைய காலங்களில், நடப்பு ஆண்டில் செலுத்த தவறியவர்களாக இருந்தால் கேள்வியில் சித்திபெறின் பரிசீலிக்கப்படமாட்டார்கள்.
08. ஆகக்குறைந்த கேள்வித்தொகையிலும் குறைந்த கேள்வி கோருபவர்களின் கேள்வி நிராகரிக்கப்படுவதுடன் கேள்விவைப்புப்பணமும் மீளளிக்கப்படமாட்டாது.
09. பிரதேசசபை எல்லைக்குள் வசிப்பவருக்கே முன்னுரிமை வழங்கப்படும். அதிகூடிய கேள்வித்தொகையை சமர்ப்பித்தவருக்கே குத்தகை வழங்கப்படும் அதிகூடிய தொகையை சமர்ப்பித்தவர் குத்தகையை எடுக்கத்தவறின் அடுத்த நிலையிலுள்ள கேள்வி தாரரின் கேள்வித்தொகை திருப்திப்படகூடியதாக அமைந்தால் பரிசீலிக்கப் படலாம்.
10. சபையால் குத்தகைக்கு வழங்கப்படும் இறைச்சிக்கடைகள், மீன் சந்தைகளிலிருந்து 1/2KM சுற்று வட்டத்திற்குள் குறித்த இறைச்சிவகை, மீன்வகை விற்பனை செய்தல் ஆகாது.
11. இறைச்சிக்கடைகள் மற்றும் மீன்சந்தை என்பன தற்போது இருக்கும் நிலையிலேயே குத்தகைக்கு வழங்கப்படும் அதனை சித்திகர கேள்விதாரர் பார்வையிட்ட பின்னர் திருப்திகொண்டே ஒப்பந்தம் செய்ததாக கருத்திற்கொள்ளப்படும்.
12. தெரிவு செய்யப்படும் இறைச்சிக்கடைக்குரியகேள்விதாரர்கள் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை20.12.2017 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையில் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும். தவறும் பட்சத்தில் கேள்வி நிராகரிக்கப்படும்.
13. கேள்வி நிபந்தனைகள் அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக்கோரிக்கைகளை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ நிராகரிக்கவோ சபையின் செயலாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.
14 கேள்வி சம்மந்தமான மேலதிக விபரங்களை மாந்தை மேற்கு பிரதேசசபை பிரதான அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**மாந்தை மேற்கு பிரதேசசபை, அடம்பன்.** **17.11.2017**


**வேலையாள்கள் தேவை**

**சாவகச்சேரியில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்துக்கு கணக்காளர் மற்றும் வேலையாள்கள் தேவை.**
(தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் மட்டும்)
**077 225 0149**

**வேட்பாளர்கள் தேவை**

சாவகச்சேரி நகரசபை தேர்தலில் சுயேட்சை குழுவில் போட்டியிட வேட்பாளர்கள் தேவை. பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் உடன் நேரடித் தொடர்புகொள்ளவும்.
**"சிங்கம்ஸ்"**
**டச்சு வீதி, சாவகச்சேரி**

**அமெரிக்கா லொத்தர் விசா**


இந்த வருடம் இலங்கைப் பிரஜைகளுக்கான வாய்ப்புக்கள் அதிகம் இருப்பதனால் நீங்களும் அதிஷ்டசாலியாகலாம். இனிவரும் காலங்களில் இதுபோன்ற லொத்தர் சீட்டிழுப்பு நடைபெறாமல் இருப்பதற்கு சாத்தியம் உண்டு. (விண்.முடிவு திகதி : 21.11.2017) விண்ணப்பத்திற்கான புகைப்படங்கள் எமது நிறுவனத்திலேயே பெற்று விண்ணப்பிக்க முடியும்.

**TwinStar IT Unit** Mobile:
Main Street, Chankanai. 0770435330

# இன்ரர்போல் அதிகாரிகளுக்கு கொழும்பில் கருத்தரங்கு

பன்னாட்டுப் பொலிஸாரின் (இன்ரபோல்) புலனாய்வு அதிகாரிகளுக்கான கருத்தரங்கு அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: இலங்கையின் பாதுகாப்பு முழுமையாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐ.நா. பன்னாட்டுப் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு அமைப்புக்கள் இதனை அங்கீகரித்துள்ளன. இலங்கையின் தீவிரவாதம், வகுப்புவாதம், ஐ.எஸ். மற்றும் பிரிவினை வாதம் உள்ளிட்ட எந்தவொரு, அடிப்படைவாதமும் இலங்கையில் இல்லை என்பதை, பன்னாட்டுப் பொலிஸும் பன்னாட்டு அமைப்புக்களும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதனால் அவர்கள் பாதுகாப்புக் கலந்துரையாடல்கள், கருத்தரங்குகளை நடத்துவதற்கு இலங்கையைப் பயன்படுத்தத்திட்டமிட்டுள்ளனர். பன்னாட்டுப் பொலிஸ் ஒழுங்கமைப்பில் பல முக்கியமான பாதுகாப்புக் கருத்தரங்குகள் இலங்கையில் நடத்தப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இன்னும் பல கருத்தரங்குகள் நடைபெறவுள்ளது. தெற்கு மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் மனிதக் கடத்தலுக்கு எதிரான கருத்தரங்கு நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதுபோல, பன்னாட்டுப் பொலிஸ் புலனாய்வு அதிகாரிகளுக்கான கருத்தரங்கு அடுத்த வாரம் கொழும்பில் நடைபெறவுள்ளது. பன்னாட்டு அளவிலான மோசமான போதைப் பொருள் மற்றும் மனிதக் கடத்தல், இணையக் குற்றங்கள் இலங்கையில் அண்மைக் காலங்களில் பதிவாகவில்லை -என்றார். (5)

## கண்ணீர் அஞ்சலி



எங்கள் கல்லூரியின் பழைய மாணவரும் கல்லூரியின் பல்வேறு தேவைகளுக்கும் உதவி வழங்கி கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியவருமாகிய


**சங்கரப்பிள்ளை அரியராசா**

அவர்கள் லண்டனில் 09.11.2017 அன்று இறைபதம் அடைந்தமையையிட்டு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அவரது குடும்ப உறவுகளுக்கும் அனுதாபத்தினைத் தெரிவிக்கின்றோம். அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**கல்லூரிச் சமூகம்**
**யா/இணுவில் மத்திய கல்லூரா.**

## 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம்
18 . 09 . 1956



மறைவு
18 . 10 . 2017

### அமரர் கந்தர் தங்கராஜா

கோவிலாக்கண்டியைப் பிறப்பிடமாகவும், கன்னாதிட்டி, காளிகோயிலடியை வசிப்பிடமாகவும், மலேசியாவை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுச் செய்தி கேட்டு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆறுதல் வழங்கியோருக்கும் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் அவருடைய இறுதிக்கிரியைகள் முறையாக நடத்த உதவியவர்களுக்கும், குறிப்பிடத்தவறிய அனைவருக்கும் எங்கள் மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது சகோதரர் (சந்திரன்) இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**பாடசாலை வீதி,**
**நாவற்குழி, கைதடி.**

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**
**077 189 9773**

## பிரிவுத்துயரின் இரண்டாம் ஆண்டு

தோற்றம்
18 . 09 . 1938



பிரிவு
18 . 11 . 2015

### திருமதி மெற்றில்டா சோதிமலர் இராசலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர் - யா/ திருக்குடும்ப கன்னியர் பாடசாலை)

**அன்பே சோதியாய் வீற்றிருந்தாய் அகம் மகிழ**
**அருமை அம்மாவாய் திகழ்ந்தாய் ஆசையாய் அரவணைத்து**
**ஆசை அம்மம்மாவாய் பேரன்புடன் பராமரித்தாய்**
**அத்தையாய் (அன்ரியாய்) உறவாடினாய் அகமகிழ்ந்து**
**நினைவிலே நிம்மதிபெறும் முயற்சியில் காலம் கடத்துகின்றோம்**

**அடைக்கல அன்னையின் ஆசீர்வாதத்தில் இறைவனடியில்**
**இளைப்பாறுகின்றாய் என்பதில் ஆறுதலடைகின்றோம்**

அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக யாழ்.அடைக்கலநாயகி (OLR) ஆலயத்தில் நாளை (18.11.2017) சனிக்கிழமை காலை 5.45 மணிக்கும் மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்தில் காலை 7.30 மணிக்கும் திருப்பலிகள் இடம்பெறும். அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றுக்காக செபிக்க அன்புடன் அழைக்கின்றோம்.

**368/3B, பிரதான வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**கணவன், மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள்**

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



### அமரர் துரைசிங்கம் நடராசலிங்கம்

(ஓய்வுபெற்ற அதிபர் - யா/சன்மார்க்க மகா வித்தியாலயம்)

திதி: சதுர்த்தசி (17.11.2017)

அன்னை மடியில் 18.03.1944
ஆண்டவன் அடியில் 21.11.2014

இரவும் பகலும் பொழுதின் நகர்வில்
ஓய்வெடுக்கும் அழகான பூக்களின் பிரசவமும்
கொஞ்சம் நாளடுக்கும் கடலின் அலைகள்
கரையை தொடுவதை போல
நிழலில் தெரிந்தும் உணர்வில் கலந்தும்
கண் உறங்கிடும் நேரத்தில்
விழிமூடா நினைவுகள் தந்தை எனும்
வேதத்தின் பக்கத்தில் அழியாத சாட்சிகள்......
மழைத்துளிகள் வேயாத குடிசைக்குள்
விழுந்தால் குடையென
பெரும் இலையாய் கரங்கள் தாங்கிட
குளிரிலும் உடையென உன் தேகம் பற்றி
உயிர்கள் தூங்கிட விழிமூடாமல் சுழலும்
அன்பின் நிலா அப்பா.......
இறைபதமடைந்து ஆண்டது
மூன்றானாலும்
எண்ணிய பொழுதெல்லாம் உங்கள்
புன்னகை பூத்த முகம் தோன்ற
கண்கள் நிறைகிறதே கண்ணீரால்......

என்றும் எங்கள் மனதில் நீங்காதிருக்கும் உங்கள்
ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரன் மற்றும் குடும்பத்தினர்.**

இல.3, 4/2, 42ஆம் ஒழுங்கை, கொழும்பு 06.
தொ.இல: 011 236 1106

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பராசக்தி நல்லதம்பி



புங்குடுதீவு 7ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.111, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணத்தில் வசித்து வந்தவருமான திருமதி பராசக்தி நல்லதம்பி 15.11.2017 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நல்லதம்பியின் அன்பு மனைவியும், யோகராசா (கொலண்ட்), காலஞ்சன்ெற நடேசலிங்கம் மற்றும் புஸ்பராசா, ரஞ்சிதராணி, சிவராசா, ஜீவராணி (கொழும்பு), சசிதரன் (புங்குடுதீவு தபாலகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகராணி (கொலண்ட்), சித்திராதேவி, மதிகரன், மதிவதனி, திமோதி றஞ்சிற் (கொழும்பு), சைலஜா ஆகியோரின் அருமை மாமியும், காலஞ்சென்றவர்களான பொன்னம்மா, நடராசா, செல்லத்துரை, நாகம்மா, சண்முகம் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்றவர்களான கணேசு, செல்லம்மா மற்றும் தங்கம்மா (கொழும்பு), காலஞ்சென்ற செல்வம்பிள்ளை மற்றும் இராசம்மா (கனடா), காலஞ்சென்ற தங்கம்மா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, தங்கம்மா, நமசிவாயம், லீலாவதி மற்றும் கணபதிப்பிள்ளை, காலஞ்சென்றவர்களான இராஜேஸ்வரி, சபாரெட்ணம், தங்கம்மா, பிரான்சிஸ் அசிசின் ஆன்கிரேஸ் புஸ்பம் மற்றும் தவச்செல்வம், புஸ்பராணி ஆகியோரின் அன்பு சம்மந்தியும், நிந்துசன், மிதுஷா, மோனிஷா, கலீபன், அல்மெடா, பிரவினா, நருசனன், கவீனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11 மணியளவில் புங்குடுதீவு கேரதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்


**No.111 கோயில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :குடும்பத்தினர்.**

**077 993 4726, 076 618 0447**

### அப்பாத்துரை சரவணபவான்

**(யாழ்.ஐயனார் கோயில் தர்மகர்த்தா)**



| ஜனனம் | மரணம் |
|---|---|
| 08.02.1949 | 16.11.2017 |

யாழ்/ வண்ணார்பண்ணை, ஐயனார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி மத்தி, அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட அப்பாத்துரை சரவணபவான் நேற்று (16.11.2017) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கனகமணி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - பூரணம் தம்பதிகளின் மருமகனும், பாலகௌரியின் அன்புக் கணவரும், கௌதமன் (Canada), ஜனார்த்தனன், கோபிகா (Australia), மோகனதாஸ் (U.K) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபிகா, சகிலன், மதலி ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி சரோஜாமலர் (Canada), நித்தியானந்தன் (France), நீலலோசனி, உதயகுமார் (Germany), சிவகுமார் (France) ஆகியோரின் அன்புச் சகோதரரும், ஆலாலசுந்தரம், கோகுலரமணி, விஜய நாதீஸ்வரன், மேகலா ஆகியோரின் மைத்துனரும், தக்சியா, கேசியா, ரிஷிகரன், வருண், ரெய்னா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மணற்பிட்டி மயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஐயனார் கோயிலடி,**
**அளவெட்டி மத்தி, அளவெட்டி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**021 224 2288, 077 109 5769**

# சித்திரவதை குற்றச்சாட்டை நாங்கள் நிராகரிக்கின்றோம்

## பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, நவ. 17

தமிழ்ப் போராளிச் சந்தேகநபர்கள் மீது சித்திரவதைகள் மற்றும் பாலியல் வல்லுறவுகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார் பாதுகாப்புச் செயலர் கபில வைத்தியரத்ன.

இது ஐரோப்பாவில் அரசியல் தஞ்சம் கோருவதற்காகக் கூறப்பட்ட குற்றச்சாட்டு என்றும் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆட்சிக் காலத்தில், கைது செய்யப்பட்ட 50இற்கும் அதிகமானோர் சித்திரவதை செய்யப்பட்டனர் எனவும், பாலியல் ரீதியான வதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர் எனவும், அண்மையில் ஏபி செய்தி நிறுவனம் ஆய்வு அறிக்கையை வெளியிட்டிருந்தது.



இது தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலரிடம் ஏ.பி. நிறுவனம் கேள்வி எழுப்பியிருந்தது. அதற்கு அவர் கூறியுள்ளதாவது: இந்தக் குற்றச்சாட்டுக்கள் அடிப்படையற்றவை. ஆதாரமற்றவை. பாலியல் மீறல்கள் மற்றும் சித்திரவதைகள் விடயத்தில், அரசு சகிப்புத்தன்மையற்ற கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

அரசு எல்லாக் குற்றச்சாட்டுக்கள் குறித்தும் விசாரித்துள்ளது. மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடிவடைந்து, அவை மூடப்பட்டுவிட்டன.

சிலவேளைகளில் நட்புக்கரங்களால் கூட இவை நிகழ்கின்றன. அவர்கள் கூறுவதன் அடிப்படையில் மாத்திரம், குற்றச்சாட்டுக்களை கருத்திற் கொள்ளக் கூடாது. ஏனையவர்களின் கருத்துக்களையும் அறிய வேண்டும். இதனைக் கவனத்திற்கொள்ள வேண்டும். ஏதேனும் குற்றச்சாட்டுக்கள் இருந்தால், அரசு சுதந்திரமான விசாரணையை வரவேற்கும். இந்தக்குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில், இலங்கைக்கான உதவிகள் குறைக்கப்பட வேண்டும் என்று கோருவது, நியாயமற்றது. இது ஒரு பகுதி மக்களுடன் தொடர்புடைய விடயம் அல்ல. இது எல்லோருக்குமானது. நிதி உதவிகள் ஒரு குறிப்பிட்ட மக்கள் குழுவுக்கு உரியதல்ல - என்றார். (5)

## சித்திரவதைக் குற்றச்சாட்டு

# துரித நடவடிக்கை வேண்டும் என்கின்றது அமெரிக்கா

கொழும்பு, நவ. 17

பாதுகாப்புப் படையினர் மீது சுமத்தப்பட்டுள்ள சித்திரவதை மற்றும் பாலியல் வதைக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக கரிசனை கொண்டுள்ளதாகவும், இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் மீது தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

அண்மைக்காலத்தில், தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட சித்திரவதைகள், பாலியல் வல்லுறவுகள் தொடர்பாக, ஏபி வெளியிட்ட ஆய்வு அறிக்கை குறித்து, அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் பேச்சாளர் ஒருவர், ஏபி செய்தி நிறுவனத்திடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

"இலங்கைப் பாதுகாப்புத் தரப்பினர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாக அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. சித்திரவதைகள், வல்லுறவுகள், பாலியல் வன்முறைகள், உலகில் எங்கு நடந்தாலும், அதனை அமெரிக்கா கண்டிக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, விசாரணைசெய்யும், அரசின் அர்ப்பணிப்பை நாங்கள் வரவேற்கிறோம். இத்தகைய மீறல்களுக்குப் பொறுப்பான அனைவரையும் தாமதமின்றி, பொறுப்புக்கூற வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (5)

ஊழியர் நலன்புரிச்சங்கம், மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வ.மா

ஊழியர் நலன்புரிச்சங்க 15.11.2017 ஆம் திகதிய அதிஷ்டலாப சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்

முதலாம் பரிசு- 3430, இரண்டாம் பரிசு - 3643, மூன்றாம் பரிசு - 4865

ஆறுதல் பரிசுகள்- 4623, 3310, 3605, 3515, 0996, 3669, 4399, 2214, 1921, 4956

செயலாளர், தொடர்புகளுக்கு:- 021 222 0625

Galaxy Star

வெற்றி வாரம் 212 திகதி 2017.11.15

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

07 06 22 57 58

அடுத்த ஞாயிற்றுக்கிழமை சுப்பர் பரிசுப் பொதி

ரூ. 4, 419, 856/-

விசேட இல.

3688848 | 3997079 | 6405046 | 9005396 | 2914400

2017.11.19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மதியம் நிறைவுக்கு வருகின்றது.

வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த
உயர்திரு இரத்தினம் பாலகுமார்
(இலங்கை அதிபர் சேவை வகுப்பு - I
ஓய்வுபெற்ற அதிபர் - யா/செங்குந்த இந்துக் கல்லூரி)

யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி திரு.ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக 24.10.2017 செவ்வாய்கிழமை சத்தியப் பிரமாணம் செய்து கொண்டமையையிட்டு வாழ்த்துகின்றோம். இவருடைய சேவை எல்லா மக்களுக்கும் சென்றடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்: நண்பர்கள்

CHUNDIKULI GIRLS' COLLEGE - JAFFNA

New Admissions - 2018
English Medium Nursery

- For 3+& 4+ Classes (Girls Only)
- Only limited vacancies
- For 3+ Class
  Age :- Born on or after 01.02.2014 befor 31.01.2015
- For 4 + Class
  Age:- Born on or affter 01.02.2013 before 31.01.2014
- Applications close on 4th December 2017.
- Application forms (limited number) will be available at the college office from 20th November 2017.
- Interviews will be called soon after the submission of the applications.

- Principal -

## மரண அறிவித்தல்



தோற்றம் 31 12 1928 — மறைவு 16 11 2017

### திருமதி பராசக்தி சங்கரப்பிள்ளை

மட்டுவிலைப் பிறப்பிடமாகவும் கல்வியன் காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி சங்கரப்பிள்ளை 16.11.2017 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை வைத்திலிங்கத்தின் அன்பு மனைவியும், தனேஸ்வரி, ஜெயராஜா, ஜெயராணி, கிருபாராணி, தேவமனோகரி, தவராசா ஆகியோரின் அன்புத் தாயும், முருகையா, திருஞானசம்பந்தர், சற்குணநாதன், லோகநாதன், ஜெயமலர் ஆகியோரின் அன்பு மாமியும், உஷாநந்தினி, சிவாநந்தினி, ஜனனி, சாரங்கன், அர்ச்சுதா, சஞ்சீவன், சாயீசன், தர்சிகா, பிரவீன், பிரசான், நிசாந்த் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் முற்பகல் 11 மணியளவில் செம்மணி இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்

| | | | |
|---|---|---|---|
| தனேஸ்வரி | (மகள் - | இலங்கை | - 077 550 5744) |
| மனோ | (மகள் - | இத்தாலி | - 003 954 253751) |
| தவராஜா | (மகன் - | கனடா | - 001 613 823 5759) |

கோல்டன் ஈகிள் K.T.(Pvt) LTD

பதவி வெற்றிடங்கள்

1. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் (ஆண்கள்)
2. காரியாலய லிகிதர்கள் பயிற்சியாளர்கள் (பெண்கள்)

01. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்:
a) கல்வித்தகைமைகள் :- க.பொ.த (சா.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்
b) உடற் தகைமை :- உயரம் - 5' 4" , மார்பு - 32"

குறிப்பு: சாரணர்கள், விளையாட்டுத்துறை வீரர்கள், பாதுகாப்புசேவை அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

c) வயதெல்லை :- 19 வயது முதல் 55 வயதுவரை

02. காரியாலய லிகிதர்கள் (பயிற்சியாளர்கள்):
a) கல்வித்தகைமைகள் :- 1) க.பொ.த (உ.த) சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.
2) கொம்பியூட்டர் தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.
b) வயதெல்லை :- 19 வயது முதல் 30 வயதுவரை

தேவைப்படும் ஆவணங்கள்:
1) கிராம அதிகாரியின் நற்சான்று பத்திரம்
2) தேசிய அடையாள அட்டை
3) பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
4) கல்வித் தராதரப் பத்திரம்

(மேற்கூறிய ஆவணங்களின் மூலப்பிரதியுடன் போட்டோ பிரதியும் கொண்டு வருதல் வேண்டும்)


03. சம்பளம்:
1) கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்
2) ஊழியர் சேமலாபநிதியம் & ஊழியர் நம்பிக்கை நிதியம் வழங்கப்படும். (EPF & ETF)

நேர்முகப் பரீட்சை: கீழ்க்குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பின்வரும் திகதிகளில் முற்பகல் 10.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை நேர்முகப் பரீட்சை நடைபெறும். சகலஆவணங்களுடன் சமுகம் கொடுக்கவும்.

20.11.2017 திங்கட்கிழமை, 21.11.2017 செவ்வாய்க்கிழமை 22.11.2017 புதன்கிழமை.

கோல்டன் ஈகிள் K.T.(Pvt) LTD
இல.758, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## நடராசா மனோராஜன்

திதி: சதுர்த்தசி (17.11.2017)

விண்ணில் 25. 04. 1965

மண்ணில் 18.10.2017

எம் கண்ணே மனோராஜா எங்கே நீ சென்றாய்!
கண் முன்னே நீ நிழலாடி மாதமொன்று சென்றாலும்
எம் முன்னே நீ நடமாடி அகமகிழ்ந்த காலமதை
பின்னே நாம் மறையும் காலம் வரை
மறவோம் - மறவோம்.

பழைய வீதி,
கோப்பாய் தெற்கு.

**குடும்பத்தினர்**
077 117 8225,
077 078 1600

## மரண அறிவித்தல்கள்

### சுப்பிரமணியம் இரத்தினம்

**(இளைப்பாறிய தொழில்நுட்பவியலாளர், கட்டடத் திணைக்களம்)**



பிறப்பு 20.09.1937 இறப்பு 15.11.2017

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் இரத்தினம் 15.11.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் பாசமிகு மகனும், சிவகுருநாதன் - ஞானாவரணம் தம்பதிகளின் அன்பு மருமகனும், சிவசெல்வராணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சின்னத்தங்கச்சி கந்தசாமி மற்றும் சண்முகம், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் இராமலிங்கம் ஆகியோரின் அன்பு சகோதரரும், காலஞ்சென்ற சுப்பையா, சிவசெல்வராஜா மற்றும் சிவஞானராஜா, காலஞ்சென்ற சின்னம்மா, யோகேஸ்வரி, குணம் ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி - மல்லாகம் இந்து மயான்த்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**"மிதுலை", K.K.S. வீதி, மல்லாகம்.** **தகவல்: மனைவி.**

**077 577 7825, 021 224 3701**

### திருமதி உமாபதி புஸ்பலதா

**மண்டைதீவு 2ஆம் வட்டாரம், வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கு)**



மண்டைதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வன்னியசிங்கம் வீதி, இருபாலை றோட், கோண்டாவில் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி உமாபதி புஸ்பலதா நேற்று (16.11.2017) வியாழக்கிழமை காலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (தம்பிஐயா), யோகம்மா தம்பதிகள் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - கனகம்மா தம்பதிகளின் அருமை மருமகளும், காலஞ்சென்ற உமாபதியின் பிரியமான மனைவியும், கல்யாணி (சுவிஸ்), சசிதரா (ஆசிரியை - கோண்டாவில் இராமகிருஷ்ணா வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், இளங்கோ (சுவிஸ்), செந்தூரன் (வேலணை ப.நோ.கூ.சங்க முன்னாள் கிளை முகாமையாளர்) ஆகியோரது அன்பு மாமியாரும், அபிரா, அக்ஷயா, ஐஸ்வரியா, அபிஷயன், அக் ஷரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், பரமேஸ்வரி, விஜயலட்சுமி, அரங்கநாயகி ஆகியோரின் சகோதரியும், கனகரத்தினம், கனகலிங்கம், உலகேஸ்வரி, விஷயலட்சுமி, காந்தமலர், நடனேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வன்னியசிங்கம் வீதி, கோண்டாவில் கிழக்கில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மண்டைதீவு.**
**2ஆம் வட்டாரம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**கோண்டாவில் கிழக்கு**

## கண்ணீர் அஞ்சலி

யாழ். மாவட்ட செயலகத்தில் நிர்வாகப்
பிரிவில் கடமையாற்றும்
**திருமதி கிருஷாந்தி விக்கினேஸ்வரன்**
அவர்களின் அன்புத் தாயார்

### இராஜேஸ்வரி கமலநாதன்



அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக்கொள்வதுடன் மாவட்டச் செயலகததின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**யாழ்/ மாவட்ட செயலக நலன்புரிக் கழகம்**

## கண்ணீர் அஞ்சலி

வேலணை தெற்கு. கமக்கார அமைப்பின்
முன்னாள் தலைவரும். வேலணை
கமநலசேவை முன்னாள் குழு உறுப்பினரும்
மற்றும் வேலணை பெருங்குளம் முத்துமாரி
அம்மன் ஆலய முன்னாள்
முகாமையாளருமாகிய

### ஆறுமுகம் சிவராசா

நேற்று 16.11.2017 வியாழக்கிழமை காலமானார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**வேலணை தெற்கு,**
**கமக்காரர் அமைப்பு,**
**6 ஆம் வட்டாரம், வேலணை.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆத்மா சாந்தி சிரார்த்த தின அழைப்பும்

### அமரர் ச.செல்வராசா

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாரதி
கோண்டாவில்)



தோற்றம் 15.01.1943

மறைவு 28.11.2016

திதி: சதுர்த்தசி

பாய் வீதி ஐயனார் கோயிலடி நாவற்குழி மேற்கைச் சேர்ந்த அமரர் ச. செல்வராசா அவர்களின் முதலாம் ஆண்டு சிரார்த்த தின நிகழ்வும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும் இன்று (17.11.2017) வெள்ளிக் கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

ஐயனார் கோயிலடி
நாவற்குழி மேற்கு.

**குடும்பத்தினர்.**
077 592 7326/ 077 389 1446

## மரண அறிவித்தல்

### மூத்தார் கணபதிப்பிள்ளை



மயிலிட்டி வடக்கு, விளங்காவத்தையைப் பிறப்பிடமாகவும், கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட மூத்தார் கணபதிப்பிள்ளை நேற்று (16.11.2017) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மூத்தார் - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கொத்திப்பிள்ளையின் ஆருயிர்க் கணவரும், சிறீதரன், சாந்தினி, காலஞ்சென்ற சரோஜினி மற்றும் சத்தியபவானி, சத்தியபாமா (ஆசிரியர் - யா/ தந்தைசெல்வா தொடக்கநிலைப்பள்ளி), சத்தியவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜமுனாராணி, இரவீந்திரன், விஜய்குமார், நாகேஸ்வரன், சதீசன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான நாச்சன், ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், கபிலா, மேனன், சிவதனுஜன், மதுஷன், பிரியங்கா, ஜனார்த்தனன், பிரவீனா, கோகுலநாத், தர்ஜிகன், நிருபா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை செம்பொன் வாய்க்கால் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கொல்லங்கலட்டி,**
**தெல்லிப்பழை.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

**077 925 8158**

## விஜேவீர கொலைக்கு பொறுப்பேற்கும் துணிச்சல் யாருக்கும் இல்லை

லால்காந்த தெரிவிப்பு

விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் இல்லாமல் அழித்தது தாங்களே என்று பலர் இப்போது உரிமை கொண்டாடுகின்றனர். ஆனால் மக்கள் விடுதலை முன்னணியின் நிறுவுனர் றோகண விஜேவீரவின் கொலையை பொறுப்பேற்கும் துணிச்சல் யாருக்கும் இல்லை.

இவ்வாறு ஜே.வி.பியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார். ஜே.வி.பியின் நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர நினைவு நாளை முன்னிட்டு விகாரமா தேவிப் பூங்காவில் நடந்த கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முற்போக்கு இலங்கையர்கள் எவரும் நவம்பர் 13ஆம் திகதியை மறக்கமாட்டார்கள். எமது நிறுவகத் தலைவர் றோகண விஜேவீர அன்றுதான் கொல்லப்பட்டார். அப்போதைய ஆட்சியாளர்களால், ஆயிரக் கணக்கானவர்கள் அப்போது கொல்லப்பட்டனர். 60 ஆயிரத்துக்கு அதிகமான ஜே.வி. பியினர் கொல்லப்பட்டனர் என நம்பப்படுகிறது.

விடுதலைப் புலிகளையும் அதன் தலைமையையும் இல்லாமல் அழித்தது தாங்களே என்று பலர் இப்போது உரிமை கொண்டாடுகின்றனர். மகிந்த ராஜபக்ச, தானே போருக்குத் தலைமை தாங்கினார் எனக் கூறுகிறார். விடுதலைப் புலிகளுக்கு முடிவு கட்டியது தானே என்று கோத்தபாய ராஜபக்ச கூறுகிறார். தானே அதனைச் செய்தார் எனச் சொல்கிறார் சரத் பொன்சேகா. வெற்றிக்கு உரிமை கோரி இன்னும் பலர் நூல்களை எழுதியுள்ளனர்.

1980ஆம் ஆண்டுகளின் இறுதியில் ஆயிரக்கணக்கான ஜே.வி.பியினர் கொல்லப்பட்டனர். ஆனால் எவரும் அதற்குப் பொறுப்பேற்கவில்லை. ஏனென்றால் நாங்கள் முற்போக்கான இயக்கமாக முன்நோக்கிச் செல்கிறோம்.

வடமத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு மேஜர் ஜெனரல் ஜனக பெரேரா போட்டியிட்டிருந்தார். எமது கட்சியின் பரப்புரைக்கு நான் அப்போது தலைமை தாங்கியிருந்தேன். பரப்புரையின்போது, ஜனக பெரேரா அலைபேசியில் என்னுடன் தொடர்பு கொண்டு, என்னைச் சந்திக்க முடியுமா என்று கேட்டார். அவருடன் நடந்த சந்திப்பின் போது, தான் றோகண விஜேவீரவைக் கொலை செய்யவில்லையென்றுகூறினார். அவரதுகொலையில் தனக்குத் தொடர்பில்லை என்று தெரிவித்தார். விஜேவீரவைக் கைது செய்தது மட்டுமே தான் என்றும், அவரைச் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தாம் ஒப்படைத்து விட் டார் எனவும் அவர் கூறினார். இந்த விடயத்தில் தனது பெயர் சம்பந்தப்பட்டுள்ளதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும்கூறிய அவர், அந்தக் குற்றத்துக்குக் காரணமான தனது அரசியல் அல்லது இராணுவத் தலைவர்களைக் காட்டிக் கொடுக்கத் தயாராக இருக்கவில்லை. நேற்று ரதுபஸ்வெல துப்பாக்கிச் சூடு குறித்து விசாரணை தொட ங்கப் பட்டுள்ளது.

1987இல் இந்திய - இலங்கை உடன்பாட்டுக்கு எதிரான போராட்டத்தின் போது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூடு குறித்து எப்போது விசாரணை நடத்தப் படும்? என்று கேள்வி எழுப்பினார்.

(5)



திருகோணமலையிலிருந்து கொழும்புக்கு மண் ஏற்றிச் சென்ற டிப்பர் பாதையை விட்டு விலகிக் குடை சாய்ந்தது. இந்த விபத்து மூதூர், இறால் குழிக்கும் உப்பாறுக்கும் இடைப்பட்ட ஏ-15 மட்டக்களப்பு திருகோணமலை பிரதான வீதியில் நேற்று நடந்துள்ளது. (ற-ரி5)

# போதை வர்த்தகர்களுக்கு அரசியல்வாதிகள் உதவி

## சாடுகின்றார் ஷிப்லி பாறூக்

மட்டக்களப்பு, நவ.17
தமது நலன்களுக்காக அரசியல்வாதிகள் போதைப் பொருள் வர்த்தகர்களுக்கு உதவுகின்றனர் என்று குற்றஞ்சாட்டியுள்ளார் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஷிப்லி பாறூக்.
பொது அமைப்புக்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தில் பதில் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. றமீஷா தலைமையில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது
போதைப் பொருள் வர்த்தகம் என்பது உடனடிப் பணக்காரர்களாகும் இலக்கை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. பொலிஸ் நிலையங்களின் போதைப் பொருள் விற்பனை, பாவனை பற்றிய குற்றச் செயல் தரவுகளின்படி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடி, ஏறாவூர், ஓட்டமாவடி உள்ளிட்ட முஸ்லிம் பிரதேசங்களே முன்னிலை வகிக்கின்றன.
இந்த மாவட்டத்திலே 26 சத வீதமாக வாழ்கின்ற முஸ்லிம்களில் சமூக விரோத போதைப் பொருள் பணக்காரர்களும், அரசியல்வாதிகளில் ஒரு சிலரும் இந்த மனித குலத்திற்கெதிரான குற்றச் செயலுக்குத் துணைபோகின்றனர் என்பது வெறுக்கத்தக்க ஒரு விடயமாக உள்ளது.
சமீபத்தில் கேரளக் கஞ்சாவைக் கடத்தி வந்த ஒருவரைப் போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் சுமார் 3 கிலோகிராம் கஞ்சாவுடன் கைது செய்திருந்தவேளையில் அரசியல்வாதி ஒருவரின் தலையீட்டால் கஞ்சா கடத்தியவர் வசம் வெறும் 50 கிராம் கஞ்சாவே இருந்தது என்று பொலிஸாரை பணிக்கும் அரசியல் அதிகார முறைகேடு இடம்பெற்றிருப்பது கேவலமான ஒரு அரசியல் முன்னெடுப்பாகும்.
சமூகத்தைப் பற்றி கவனத்தில் எடுக்காத இழிநிலை அரசியல்வாதிகளால் ஒட்டு மொத்த மனித சமூகமும் சீரழியவேண்டித்தான் வரும்.
அரசின் மூலமாக கிடைக்கின்ற ஒதுக்கீடுகள் கட்சி, பிரதேச இன மத வேறுபாடுகளுக்கப்பால் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பதிலும் அபிவிருத்தி, நீதி நியாயம் இந்த நாட்டின் அனைத்து குடிமக்களுக்கும் கிடைக்க வேண்டும். என்றார். (ற-ரி4,46)

# தீ விபத்தில் கடை நாசம்

பொலநறுவை,நவ.17
பொலநறுவை ஹிகுரான்கொடவிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுத் தீ விபத்து ஏற்பட்டது. அதில் வர்த்தக நிலையத்துக்குப் பெரும் சேதம் ஏற்பட்டது.
ஹிகுரான்கொட விமானப் படையினர் மற்றும் மக்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.
வர்ணப் பூச்சுக்கள், கட்டட பொருள்கள் விற்பனை செய்யும் வர்த்தக நிலையத்திலேயே விபத்து நடந்துள்ளது. (ற-ரி4)

# மாணவர்களுக்கு மருத்துவ முகாம்

மட்டக்களப்பு, நவ.17
மட்டக்களப்பு கல்வி வலயத்துக்குட்பட்ட மயிலம்பாவெளி பிரதேச பாடசாலை மாணவர்களுக்கான பற் சிகிச்சை மருத்துவ முகாம் நேற்று நடைபெற்றது.
மயிலம்பாவெளி விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அதிபர் கே.சிறிதரன் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில், மயிலம்பாவெளி விக்னேஸ்வரா வித்தியாலய மாணவர்களுடன் மயிலம்பாவெளி பிரதேச பாடசாலை மாணவர்களும் பங்கேற்றனர்.
பற்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் பரிசோதனைகள் செய்யப்பட்டு கிசிக்சைகளும் வழங்கப்பட்டன.
மருத்துவ முகாமில் செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலக மருத்துவர்களான திருமதி கே.கிஷாந்தி, மருத்துவர் மெலோரின், மருத்துவர் துசித்தா, மருத்துவர் முபிஸ்,பாடசாலை பற்சிகிச்சை பிரிவு பற்சிகிச்சையாளர் எ.எம்.எப். சப்ரீன், பொதுசுகாதார பரிசோதகர் மொஹமட் பைரூஸ் மற்றும் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற-ரி4)

# ஹற்றனில் தீ 19 பேர் காயம்

ஹற்றன், ,நவ.17
ஹற்றன், செனன் கே.ஜி பிரிவிலுள்ள லயன் குடியிருப்பொன்றில் நேற்று தீ விபத்து ஏற்பட்டது. அதில் மூன்று குடியிருப்புகள் சேதமாகியுள்ளன. 19 பேர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
நான்கு வீடுகளைக் கொண்ட லயன் குடியிருப்பில், ஒரு குடியிருப்பு முற்றாக சேதமாகியுள்ளது. இரண்டு வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன எனத் தெரிவிக்கப்பட்டது. ஹற்றன் பொலிஸார் தீயணைப்புப் பிரிவினர் மற்றும் பொதுமக்கள் இணைந்து தீயைக் கட்டுபாட்டுக்குள் கொண்டு வந்தனர். சம்பவத்தில் பாதிப்படைந்தவர்கள் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.தீ விபத்துத் தொடர்பில் ஹற்றன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)



# மருத்துவமனை முன்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம்

திருகோணமலை, நவ.17
திருகோணமலை, தம்பலகாமம் அரசினர் பிரதேச மருத்துவமனைக்கு முன்பாக அந்தப் பகுதி மக்கள் கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தினர்.
மருத்துவமனை 24 மணித்தியாலமும் திறக்கப்பட்டு சேவைகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மருத்துவர் பற்றாக்குறை, தாதியர் பற்றாக்குறை மற்றும் நோயாளர் காவு வண்டிகள் பற்றாக்குறை போன்ற தேவைகள் நிறைவு செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியே ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
மருத்துவமனையைத் தர முயர்த்தக் கோரியும், நோயாளர்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் பல கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் முன்வைத்தனர்.
பிரதேசத்தைச் சேர்ந்த மதகுருமார்கள், பெண்கள், இளைஞர்கள் உட்பட பொதுமக்கள் எனப் பலரும் இணைந்து போராட்டத்தை முன்னெடுத்தனர்.(ற-ரி5)

# திருமலை விபத்தில் இருவர் படுகாயம்

திருகோணமலை,நவ.17
திருகோணமலை, மட்டக்களப்பு பிரதான வீதியில் நேற்று இடம் பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சேறுநுவர பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
இந்த வீதியின் தங்க நகர் நோக்கிப் பயணித்த முச்சக்கர வண்டியை மோட்டார் சைக்கிள் ஒன்று முந்திச்செல்ல முற்பட்ட போதே விபத்து நடந்துள்ளது. விபத்தின்போது முச்சக்கரவண்டியின் சாரதியும், மோட்டார் சைக்கிளின் சாரதியுமே படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சேறுநுவரப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ற-ரி5)

# ஆசிரியர் நியமனம் வழங்க கோரி ஆர்ப்பாட்டம்

அம்பாறை, நவ.17
கிழக்கு மாகாண ஆசிரியர் நியமனம் தொடர்பில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு பிரதமர் அலுவலகத்துக்கு முன்னாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தப் படவுள்ளது.
அம்பாறை மாவட்டப் பட்டதாரிகள் சங்கத்தின் செயலாளர் ஏ.ஆர்.எச். அப்துல் ரகுமான் இவ்வாறு தெரிவித்தார்.
கிழக்கு மாகாண பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம் வழங்குவதற்கு நடத்தப்பட்ட திறந்த போட்டிப் பரீட்சையில் அநீதிகள் இழைக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட பட்டதாரிகளையும் ஆசிரியர் நியமனத்துக்குள் உள்ளீர்க்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.
எதிர்வரும் 20ஆம் திகதியன்று. கவனயீர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

# ஆற்றுமணல் கடத்த முயற்சித்தவர் கைது

மட்டக்களப்பு,நவ.17
மட்டக்களப்பு கரடியனாறு பிரதேசத்தில் சட்டவிரோதமாக ஆற்றுமணல் ஏற்றிச் செல்ல முயற்சித்த குற்றச்சாட்டில் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கனரக வாகனம் மற்றும் டிரக்டர் ஆகியவற்றில் மணல் ஏற்றிச் செல்ல முயன்றபோது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. அதேவேளை மணல் அகழ்வில் ஈடுபட்ட இருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டு பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர் என்றும் அவர்களை இன்று நீதிமன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி4)

# இந்தியர் கைது

கொழும்பு, நவ.17
அனுமதி இன்றி நாட்டில் தங்கி இருந்த இந்தியர் ஒருவர் புலதிசி புர, சுங்காவில பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.
கைது செய்யப்பட்டவர் 31 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது. அவரை நீதிமன்றில் முற்படுத்து வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-33)

# தங்க நகைகளைக் கடத்தியவர் கைது

கொழும்பு,நவ.17
ஒருதொகை தங்க நகைகளை இலங்கைக்கு கடத்தி வந்த குற்றச்சாட்டில் நபரொருவர் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டார். சந்தேகநபரின் பயணப் பொதியில் இருந்து 127.36 கிலோகிராம் நிறையுடைய 6லட்சத்து 36ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் மீட்கப்பட்டன என்று சுங்க திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் சுனில் ஜயரத்ன தெரிவித்துள்ளார். (ற-ரி4)

# ரொஹிங்யர்களுக்கு எதிரான தனிநபர்களுக்கு அமெரிக்கா தடை

வொஷிங்டன், நவ. 17
மியன்மாரில் ரொஹிங்ய இஸ்லாமியர்கள் துன்புறுத்தப்பட்டுகின்றமைக்கு பின்னணியில் உள்ள தனிநபர்களுக்கு அமெரிக்கா தடை விதிக்கும் என்று அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் டில்லர்சன் தெரிவித்தார்.


அமெரிக்க அயலுறவுத்துறை அமைச்சர் டில்லர்சன் ஒருநாள் பயணமாக நேற்று மியன்மார் சென்றார். அங்கு ரொஹிங்யர்களின் விவகாரம் தொடர்பில் அவர் பலரையும் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் உரையாற்றுகையிலேயே டில்லர்சன் இவ்வாறு தெரிவித்தார்.



"ஒட்டுமொத்தமாக மியன்மார் நாட்டின்மீது பொருளாதாரத் தடைகள் விதிக்க வேண்டும் என அறிவுறுத்தல்கள் வருகின்றன. ஆனால், இது அதற்கான நேரம் இல்லை. நடந்த சம்பவங்கள் கொடூரமானவை. மனித உரிமைகள் மீறப்பட்டது தொடர்பாக நம்பகமான விசாரணை வேண்டும். இந்த வன்முறைக்கு காரணமான தனிநபர்கள் மீது தடை விதிப்பது தொடர்பாக அமெரிக்கா பரிசீலனை செய்யும்.

நம்பகத் தன்மை மிகுந்த ஆதரங்கள் கிடைத்தால் ரொஹிங்யர்கள் வதைக்கப்பட்டதன் பின்னணியில் உள்ள தனிநபர்களுக்குத் தடை விதிக்கப்படும்" என டில்லர்சன் மேலும் தெரிவித்தார். (ம)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்




மண்ணில் 08.06.1936
விண்ணில் 18.10.2017
திதி, சதுர்த்தசி
கடந்த 18.10.2017 அன்று சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்
கார்த்திகேசு பொன்னையா
அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (17.11.2017) வெள்ளிகிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
ஈஞ்சடி,
சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
குடும்பத்தினர்.



# சீனாவில் கடும் பனியால் 30 வாகனங்கள் மோதல்

பீஜிங், நவ. 17
சீனாவில் நிலவிவரும் கடும் பனிமூட்டத்தால் நெடுஞ்சாலையொன்றில் .30 வாகனங்கள் ஒன்றோடொன்று வரிசையாக மோதிய விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர்.
சீனாவின் கிழக்குப் பகுதியில் உள்ள அன்ஹயி மாகாணத்தில் தற்போது பனிப்பொழிவும், பனிமூட்டமும் கடுமையாக உள்ளது. அங்குள்ள புயாங் நகரில் உள்ள தேசிய விரைவு நெடுஞ்சாலையில் சுமார் 30 வாகனங்கள் ஒன்றுடன் ஒன்றுமோதி விபத்துக்கு உள்ளாகின. 18 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். 19 பேர் காயமடைந்து மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தனர். அவர்களில் சிலரின் நிலமை கவலைக்கிடம் என்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

பதினெட்டாம், பதின்மூன்றாம் ஆண்டு நினைவலைகள்







| | | | | |
|---|---|---|---|---|
| செல்வன்<br>பாலகிருஷ்ணன் பிரதீபன்<br>தோற்றம் : 17.04.1981 | செல்வன்<br>சிவநாதன் ரவிசங்கர்<br>தோற்றம் : 02.02.1981 | செல்வன்<br>சுந்தரலிங்கம் சிவோத்தமன்<br>தோற்றம் : 23.03.1981 | செல்வன்<br>பூரணமூர்த்தி கந்தர்வன்<br>தோற்றம் : 11.05.1981 | செல்வன்<br>மரியரட்ணம் குணரட்னம்<br>தோற்றம் : 04.08.1981 |

17.11.1999 : மறைவு
17.05.2004

இந்நாளில் ஹாட்லியின் மைந்தர்கள் ஆகிய நாம் உங்களை பெருமையுடன் நினைவு கூருகின்றோம்
இன்று 17.11.2017 வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் ஹாட்லிக் கல்லூரியில் நடைபெறும் நினைவு நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் இரத்த தான நிகழ்விலும் பெற்றோர், ஆசிரியர், உற்றார், உறவினர், நண்பர்கள், பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். அத்துடன் இன்றையதினம் காலை 9.30 மணியளவில் இன்பர்சிட்டி கடற்கரையில் நினைவுகூரல் நிகழ்வு நடைபெறும் என்பதனையும் அறியத்தருகின்றோம்.
"ஹாட்லியின் மைந்தர்கள் நினைவு நிதியம்" ஏற்பாட்டாளர்கள்.
மேலதிக விபரங்களுக்கு : அ.டொமினிக் - 0774 666 259 / அ.குமரன் - 0777 480 094 / சு. கோகுலகுமார் - 0773 122 198
E-mail : hartleyboys@gmail.com

# வடகொரிய மக்களால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டவரே அமெ. அதிபர் ட்ரம்ப்

## வடகொரிய ஊடகம் கடும் காட்டம்




பியாங்யாங், நவ. 17
வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன்னை, 'குண்டர்', 'குள்ளமானவர்' என்று விமர்சித்த குற்றத்துக்காக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மீது கடும் விமர்சனத்தை வைத்துள்ளது வடகொரியாவின் அரச ஆதரவு பெற்ற பத்திரிகையொன்று.
வடகொரியாவின் பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறிய அணுவாயுதச் சோதனைகளுக்கு அமெரிக்கா முதல்எதிரியாக உள்ளது. அமெரிக்காவுக்கு ஜப்பான், தென்கொரியா உள்ளிட்ட நாடுகள் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. இதனால் அமெரிக்காவுக்கும் அதன் நட்பு நாடுகளுக்கும் எதிராக வடகொரியா போர் அறிவிப்புச் செய்துள்ளது.
ட்ரம்ப், அண்மையில் ஆசியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்திருந்தார். ஜப்பான், தென்கொரியா, சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்ற அவர் வடகொரியாவுக்கு எதிரான பிடிகளை இறுக்குமாறு ஏனைய நாடுகளை வலியுறுத்தினார். குறிப்பாக சீனாவுக்கு அதிக அழுத்தங்களைக் கொடுத்தார். இது வடகொரியாவுக்கு பெரும் பின்னடைவாக அமைந்தது.
இதையடுத்து, ட்ரம்பை "முதியவர்" என்று விமர்சித்தார் வடகொரிய அதிபர் கிம் ஜோங் உன். இதற்குப் பதிலடியாக கிம் ஜோங் உன்னை, "குண்டர்", "குள்ளர்" என்று ட்ரம்ப் விமர்சித்தார். "சர்வாதிகாரத்தால் உலகை மிரட்டிப் பணியவைக்க முடியாது. அணு ஆயுதம் தொடர்பாக வடகொரியா விடுத்துவரும் மிரட்டலுக்கு எவரும் அஞ்சப் போவதில்லை. சீனாவுக்கும் வடகொரியா முதன்மை எதிரியாக விளங்கப்போகிறது என்பதை சீன அதிபர் ஜிஜின் பிங் உணரும் வேளை வரும்" என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். இதையடுத்தே வடகொரிய அரச ஊடகமான 'ரோடாங் சின்முன்' ட்ரம்ப்பை கடுமையாகக் கண்டித்து கடும் கருத்துக்களை வைத்துள்ளது.
"வடகொரியாவின் மாபெரும் தலைமையின் மதிப்புக்கு இழுக்குச் சேர்க்கிற வகையில் விமர்சித்த குற்றம், மன்னிக்க முடியாத மோசமான குற்றம். அவர் (டிரம்ப்) கொடூரமான குற்றவாளி என்பதையும், கொரிய மக்களால் சாவுத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர் என்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## இந்தியா செல்கிறார் பிலிப்பைன்ஸ் அதிபர்

மணிலா, நவ. 17
இந்தியத் தலைமை அமைச்சர் மோடியின் அழைப்பையேற்று பிலிப்பைன்ஸ் அதிபர் டுடேர்தே விரைவில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார்.
ஆசியான் அமைப்பின் 31ஆவது உச்சி மாநாடு பிலிப்பைன்ஸ் மணிலாவில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது. இந்த மாநாட்டில் இந்தியத் தலைமை அமைச்சர் மோடியும் கலந்துகொண்டார். அன்றைய தினம் மோடிக்கும் டுடேர்தேக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றது. இந்தச் சந்திப்பில் இந்தியாவுக்கு வர டுடேர்தேக்கு மோடி அழைப்பு விடுத்தார் இதையடுத்தே டுடேர்தே விரைவில் இந்தியா செல்லவுள்ளார். (ம)



## 560 கோடி ரூபாவுக்கு விற்பனையான வைரம்

சுவிற்சர்லாந்தின் ஜெனீவா நகரில் நடைபெற்ற ஏல விற்பனையொன்றில் வைரமொன்று இலங்கை மதிப்பில் சுமார் 560 கோடி ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. ஆப்பிரிக்காவின் அங்கோலா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரமே உலகில் மிகப் பெரிய வைரம் என்று கூறப்படுகிறது. வெட்டியெடுக்கப்படுவதற்கு முன்பு இது 404 கரட்டுகளைக் கொண்டிருந்தது. ஜெனிவாவில் உள்ள கிறிஸ்டி என்னும் நிறுவனம் இந்த ஏலத்தை நடத்தியது. இந்த வைரம் 560 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டது. (ம)



## வரலாற்றில் முதன்முறையாக மின்சாரத்தில் இயங்கும் கப்பல்

பீஜிங், நவ. 17
உலக வரலாற்றில் முதன் முறையாக மின்சாரத்தின் மூலம் கப்பலை இயக்கி சீனா சாதனை படைத்துள்ளது.
ரயில்வே, விண்வெளி மற்றும் அறிவியல் என அனைத்துத் துறைகளிலும் சீனா மிக விரைவாக முன்னேறி வருகிறது. கார் உள்ளிட்ட வாகனங்கள் மட்டுமே மின்சாரம் மூலம் இயக்கப்பட்டு வரும் நிலையில் வரலாற்றில் முதல்முறையாக சரக்குக் கப்பலை மின்சாரத்தின் மூலம் இயக்கி வியக்க வைத்துள்ளது சீனா. குயாங் நதியில் நேற்றுமுன்தினம் இந்தச் சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. முழுமையாக வெற்றி பெற்ற சோதனையாக இது அமைந்தது என்று சொல்லப்படுகிறது. (ம)





உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## நாமலின் வீம்பு

எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமானஇரா.சம்பந்தனுக்கும்நாமல்ராஜபக்சவுக்கும் இடையிலான நேரடியான கருத்து மோதல் தொடர்கிறது. அதிகாரப் பகிர்வு கிடைக்கும் என்பதைக் காரணமாகக் காட்டி, தமிழர்களின் அன்றாடப் பிரச்சினைக்குரிய தீர்வுகளைக் கோராது இருக்க முடியாது என்பதை சம்பந்தன் ஐயா ஏன் உணரவில்லை என்று தனது கீச்சகப் பக்கத்தில் எழுதியதன் மூலம் நாமல் இந்தக் கருத்து மோதலை ஆரம்பித்து வைத்தார். தமிழர்கள் சிங்களவர்களைச் சீண்டிவிட்டுவிட்டு, பின்னர்சிங்களவர்கள்இனவாதம் பேசுகிறார்கள்என்றுகூப்பாடுபோடுவதில்,அதாவதுவேலியில்போனஓணானை வேட்டிக்குள் பிடித்து விட்டுவிட்டு குத்துதே குடையுதே என்று கூப்பாடு போடுவதில்என்னநியாயம் இருக்கிறது என்றுதற்போது கேள்வி எழுப்பியிருக்கும் நாமல், தனது கீச்சகப் பதிவு மூலம் மூத்த தலைவரான சம்பந்தனைச் சீண்டினார் என்பதுதான் உண்மை.

நாமலின் சீண்டலுக்குக் காட்டமான பதில் ஒன்றைச் சம்பந்தன் வழங்கியிருந்தார். அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டுவிட்டால் ஏனைய பிரச்சினைகள்தீர்ந்துவிடும் என்றசாரப்பட அவரது பதில் அமைந்திருந்தது. "எம்மை விமர்சிப்பவர்கள் நியாயபூர்வமான அரசியல் தீர்வு சம்பந்தமாகவும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும்தங்களுடைய நிதானமான, ஆக்கபூர்வமானஒத்துழைப்பை நல்குவார்களாக இருந்தால், சகலபிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு. பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் அந்தவிதமான ஆதரவை நல்கும்படியாகக்கேட்டுக் கொள்கிறேன்"என்றுதனதுபதிலில்சம்பந்தன்தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும்போதே, சிங்களவர்களைச் சீண்டிவிட்டு பின்னர் அவர்களை இனவாதிகள் என்கிறார்கள் என்பதையும் நாமல் குறிப்பிட்டிருக்கிறார். ஜி.ஜி.பொன்னம்பலம் 50இற்கு 50 கேட்டது முதற்கொண்டு, பழைய அரசியல் வரலாறுகளை இழுத்து அவர் வழங்கியுள்ள பதிலில் இருந்து அவர் அரசியலில் இன்னும் கற்றுக்குட்டியாகவே இருக்கிறார் என்பதும் சிங்கள, பௌத்த மேலாதிக்கவாத நிலையில் இருந்தே தமிழர்களின் பிரச்சினையை அணுகுகிறார் என்பதும் தெளிவாகத் தெரிகின்றது.

இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்குசிங்களவர்கள்மட்டுமே தடையாக இருக்கிறார்கள் என்று கூறுவது கபடத்தனமானகருத்து என்று தெரிவித்திருக்கிறார்நாமல். மேலும்ஒவ்வொருசந்தர்ப்பத்திலும்தமிழ்த்தலைமைகள்விட்டுக்கொடுப்பற்றநிபந்தனைகளை முன்வைத்தமைதான் இழுபறிகளுக்குக் காரணம் என்றும் அவர் குற்றஞ்சாட்டியிருக்கிறார். அவரது இந்தக் கருத்தைக் கேட்கும்போது அழுவதா, சிரிப்பதா என்று தெரியவில்லை. அவரது அரசியல் அறிவுமட்டத்தை எண்ணும்போது எதிர்கால இலங்கையின் அரசியல்தலைவர்களும் இப்படித்தானா என்று 'ஓ'வென்று கத்தி அழத் தோன்றுகின்றது.

தமிழர்தரப்பின்விட்டுக்கொடுப்புகளின்ஊடாகஅடையப்பட்ட பண்டா–செல்வா, டட்லி– செல்வா ஒப்பந்தங்களில் இருந்து ஒரு தலைப்பட்சமாக வெளியேறிய சிங்களவர்கள், நிரந்தரத் தீர்வுக்கான தடையாக இருக்கிறார்களா அல்லது, தீர்வு ஒன்று இன்று கிடைக்கும். நாளை கிடைக்கும் என்று இப்போது வரைக்கும் காத்திருக்கும் தமிழர்கள் நிரந்தரத் தீர்வுக்குத் தடையாக இருக்கிறார்களா என்பதை அவர் அரசியல் வரலாற்றை நன்கு கற்பதன் மூலம் புரிந்துகொள்ள முன்வரவேண்டும்.

ஒவ்வொருஅமைதி உடன்படிக்கையிலும்தமிழர்கள்கேட்டதை விடவும் குறைந்தளவு அதிகாரங்களைத் தருவதற்கே கொழும்பு அரசு முன்வந்தது. அதையும் ஏற்றுக்கொண்டுதான்தமிழ்த் தலைவர்கள்உடன்படிக்கையில்கையெழுத்திட்டார்கள். கடைசியாகத் தனித் தமிழீழம் கேட்டுப் போரிட்ட விடுதலைப் புலிகள்கூட, உள்ளகசுயநிர்ணயஉரிமையின்அடிப்படையிலானதீர்வு ஒன்றை ஏற்றுக்கொண்டார்கள். அப்படியிருக்கும்போதுதமிழ்த்தலைமைகள்விட்டுக்கொடுப்பற்றநிபந்தனைகளைமுன்வைத்தமைதான் இழுபறிகளுக்குக் காரணம் என்று முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கிறார்.

பாவம் அவர் சட்டத்துறையில் படித்தமை குறித்தே சர்ச்சைகள் இருக்கும்போது, அரசியல் வரலாற்றை அவர் சரியாகத் தெரிந்து கொள்ளவில்லை என்று அவர்மீது நொந்துகொள்வது முறையில்லைத்தான். இருந்தாலும் அரசியல் வரலாற்றைத் தெரிந்துகொள்வது குறைந்தபட்சம் எதிர்காலத்தில் நாடாளுமன்றத்தில் சரியான வாதங்களை முன்வைக்கவாவது அவருக்கும் உதவும்.

அதேநேரத்தில், நாமல் என்னதான் அரசியல் கற்றுக்குட்டியாக இருந்தாலும்,அவர்ஆரம்பத்தில்எழுப்பியஅரசியல்தீர்வுதள்ளிப் போகிறது என்பதற்காக அன்றாடப் பிரச்சினைகளை அரசிடம் வலியுறுத்தாமல்தமிழ்த்தேசியக்கூட்டமைப்புஇருப்பதுஅல்லது அன்றாடப்பிரச்சினைகளைவெறும் கோரிக்கைகளாக மட்டுமே அரசிடம் முன்வைத்துவிட்டுப் பேசாமல் இருப்பது என்பது ஏற்புடையதல்ல. இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிகாட்டல் வரைபடம்ஒன்றுகாலஅட்டவணையோடுதயாரிக்கப்பட்டுச்செயற்படுத்தப்படவேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித ஆணையாளரே வலியுறுத்தியிருக்கிறார். அந்த வழிகாட்டல் வரைபடத்தில் ஆரம்பத்தில் இந்தஉடனடிப்பிரச்சினைகளுக்கானதீர்வுகள்தான் இடம்பெற்றிருக்கவேண்டும். ஆனால், அது நடக்கவில்லை என்பது கண்கூடு. எனவே தீர்வுக்கான முயற்சிகள் ஒருபுறம் இருக்க, மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெறுவதற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுக்கு அழுத்தம் கொடுத்தேயாகவேண்டும், வெறும்கடிதங்களைஎழுதுவதற்கு அப்பால்.


# வேடம் கலைந்தது

திராஜ்

2015 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்து மூன்றரை மாதங்கள் கடந்து முடிந்திருந்தன. அதே ஆண்டு டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் வடக்கு மாகாணசபையின் கேட்போர் கூடத்தில் இரகசியமாக ஒரு கூட்டம் நடந்தது. மாலை மங்கும் வேளையில் ஆரம்பமான அந்தக் கூட்டம் இரவு வரையில் நீடித்தது. கூட்டத்தில் பங்கேற்றவர்கள் கூட்டம் முடிந்து ஒவ்வொருவராக வெளியே வந்ததும், ஊடகங்கள் அவர்களை மொய்க்க ஆரம்பித்தன.

விபசார வழக்கில் கைதாகுபவர்கள் எப்படித் தங்களது முகங்களை மறைத்துக்கொண்டு ஊடகங்களிடமிருந்து ஒளிந்து ஓடி ஓட்டம்பிடிப்பார்களோ அப்படித்தான், அந்தக் கூட்டத்திலிருந்து வெளியே வந்த பலர் ஊடகவியலாளர்களை எதிர்கொள்ளாது தப்பிச் சென்றனர். ஒரு சிலரை ஊடகங்கள் சுற்றி வளைத்துக் கேள்விகள் தொடுத்தபோது மௌனத்தையே பெரும்பாலும் தமது பதிலாக்கி விட்டுச் சென்றனர்.

அந்தக்கூட்டத்தில்வடக்குமாகாணமுதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனும் பங்கேற்றிருந்தார். அதில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அதிருப்தியாளர்கள். அப்படிச்சொல்வதை விட, சம்பந்தன் மற்றும் சுமந்திரனின் அதிருப்தியாளர்கள் என்றும் கூறலாம். பொது அமைப்புக்கள்என்றபெயரில்கூட்டத்தில் குந்தியவர்கள் பலர், கடந்த காலங்களில் தமிழ் சிவில் சமூகத்தினர் என்ற கோதாவில் கூட்டமைப்புக்குஎதிரானபோக்கில் செயற்பட்டவர்கள். சுருங்கச் சொன்னால் காங்கிரஸ்கஜேந்திரகுமாரின் 'விசிலடிச்சான் குஞ்சுகளாக'ச் செயற்பட்டவர்கள் அவர்கள்.



### கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணி தமிழ் மக்கள் பேரவை

அந்தக் கூட்டமும், கூட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு எதிரான மாற்று அணி என்று அப்போது அடையாளப்படுத்தப்பட்டது. கூட்டமைப்புக்கு குடைச்சல் கொடுக்கும் அணி என்றும் வர்ணிக்கப்பட்டது. அரசியல் கதிரைகளை கைப்பற்றுவதில் தோற்றுப் போனோர், எப்படியாவதுபதவிக்கதிரைகளைபற்றிக்கொள்வதற்காக உருவாக்கிய அமைப்பு அது. - தமிழ் மக்கள் பேரவை- என்று அடையாளப்படுத்தப்பட்டது.

விழுந்தடித்துக் கொண்டு - கோயிலில் கற்பூரம் கொழுத்தி சத்தியம் செய்யாத குறையாக, பேரவை, மக்கள் இயக்கம் என்று அறிக்கை விட்டார்கள். பேரவையால்வெளியிடப்பட்ட அறிக்கையிலும் சரி, அதன் இணைத்தலைவராக இருத்தப்பட்டு அழகு பார்க்கப்பட்ட முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் வெளியிடப்பட்ட அறிக்கையிலும் சரி, பேரவை ஒரு மக்கள் இயக்கம்; ஒரு போதும்தேர்தல் அரசியலில் அந்த அமைப்பு ஈடுபடாது என்று சொல்லப்பட்டது.

### தறிகெட்டுச் செல்லும் தமிழர் தலைமைகளை நேர்சீர் செய்வதே தமிழ் மக்கள் பேரவையின் நோக்கம் எனத் தெரிவிப்பு

இந்த வாக்கு திரும்பத் திரும்பச் சொல்லப்பட்டுக் கொண்டே வந்தது. தறிகெட்டுச் செல்லும் தமிழ் மக்களின் தலைமைகளை சீர் செய்து நேரிய பாதைக்குக் கொண்டு வருவதே பேரவையின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

மறுபுறத்தில் தமிழ் மக்கள் பேரவையானது, தேர்தலில் தோற்றுப்போனவர்களின் கூட்டு என்றும், அவர்கள்அரசியலுக்குவருவதற்காகவேஅமைக்கப்பட்ட அமைப்பு என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் பகிரங்கக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. அதுவும் திரும்பத் திரும்ப அது அழுத்தமாகச் சொல்லப்பட்டு வந்தது.


தமிழ் மக்கள் பேரவையில், அது ஆரம்பிக்கப்படும்போது, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற மூன்று அரசியல் கட்சிகள் இடம்பெற்றிருந்தன. பேரவையில் கோலோச்சும் நிலையில், தமிழ்க் காங்கிரஸும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வுமே இருந்தன. இந்த இரண்டு கட்சிகளும் நாடாளுமன்றத் தேர்தலில் தோற்றுப் போன - மிகக் கடுமையாக அடிவாங்கிய கட்சிகளாக இருந்தன.

இழந்துபோன அல்லது கிட்டாது போய்விட்ட பதவிக் கதிரைகளை, முதலமைச்சரைப் பயன்படுத்தி மீண்டும் கவ்விக் கொள்வதே அந்த இரண்டு கட்சிகளினதும் நோக்கம் என்று தெளிவாகக் கூறப்பட்டது. ஆனால் முதலமைச்சரோ, வெளுத்தது எல்லாம் பால் என்பது போல, "சீச்சீ, அவர்கள் எல்லாம் அப்படியல்ல. பேரவை மக்கள் இயக்கம்தான். அவர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்ற உறுதிமொழி தந்ததால்தான், நான் அதில் இணைந்து கொண்டேன் என்று கூறினார். போதாக்குறைக்குக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனைச் சந்தித்து இதனைத் தெளிவுபடுத்தினார்.

பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே தோற்றுப்போன இரண்டு கட்சிகளுக்கும் களம் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் என்பதை அந்த அமைப்பினது கடைசிக் கூட்டம் உறுதிப்படுத்திவிட்டது. கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்துடன், அந்த அமைப்பின் மக்கள் இயக்கம் என்ற வேடம் துயிலுரியப்பட்டு விட்டது. கூட்டமைப்புக்கான போட்டி அணிதான் பேரவை என்பதைக் கிட்டத்தட்டப் பகிரங்கமாக அறிவித்துவிட்டார்கள்.

### தமிழ் மக்கள் பேரவையில் அங்கம் வகிக்கும் ஒரு தரப்பினரது அதிருப்தி நிலை

இதற்கு மேலாக கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பேரவையின் கூட்டம் பலத்த சலசலப்புக்கு மத்தியிலேயே நடைபெற்றுள்ளது. பேரவையில் இடம் பெற்றிருந்தமதத்தலைவர்கள்,புளொட்அமைப்பு, வேறு சில சிவில் அமைப்புக்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்கவில்லை. அவர்கள் பங்கேற்கவில்லை என்று சொல்வதைவிட, அதைப் புறக்கணித்தார்கள்; அதிலிருந்து விலகிக் கொண்டார்கள் என்று கூறுவதேபொருத்தம். மக்கள்இயக்கம்என்றவேடத்தை பேரவை தாங்கியிருந்ததாலேயே அந்த அமைப்பில் இணைந்து செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். ஆனால்கடந்த ஞாயிற்றுக்கிழமைக் கூட்டம், உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்



தொடர்பானது என்று அறிவிக்கப்பட்டமையினால், குறிப்பிட்ட அந்தத் தரப்புக்கள் விலகிக் கொண்டன.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் வழமை போன்று தான் எழுதிக் கொண்டு வந்த உரையை பேரவையில் வாசித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறி தனிவழி செல்ல முயன்ற சுரேஷ்பிரேமச்சந்திரனின் 'மண்டையில்' குட்டுப்போடும் வகையில் முதலமைச்சரின் அந்த உரை அமைந்திருந்தது. கிழக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தும் மற்றொரு இணைத்தலைவரான வசந்தராஜாவின் உரையும், முதலமைச்சரின் உரையைத் தழுவியதாகவே இருந்தது.

> இழந்துபோன அல்லது கிட்டாது போய்விட்ட பதவிக் கதிரைகளை, முதலமைச்சரைப் பயன்படுத்தி மீண்டும் கவ்விக் கொள்வதே அந்த இரண்டு கட்சிகளினதும் நோக்கம் என்று தெளிவாகக் கூறப்பட்டது. ஆனால் முதலமைச்சரோ, வெளுத்ததெல்லாம் பால் என்பது போல, "சீச்சீ, அவர்கள் எல்லாம் அப்படியல்ல. பேரவை மக்கள் இயக்கம்தான். அவர்கள் அரசியலில் ஈடுபடமாட்டார்கள் என்ற, உறுதிமொழி தந்ததால்தான் நான் அதில் இணைந்து கொண்டேன்" என்று கூறினார்.

### தமிழ் மக்கள் பேரவையின் தலைமைத்துவங்கள் மத்தியில் கருக்கொண்ட கருத்து வேறுபாடுகள்

இணைத்தலைவர்களின் உரைகள் முடிந்ததும் முதல் ஆளாக எழுந்த சுரேஷ், முதலமைச்சரின் உரையைக் கண்டித்தார். முதலமைச்சர் தமது உரையில் தெரிவித்த கருத்துக்களை மீளப்பெற வேண்டும் என்றார். அவருக்குப் பக்கப் பாட்டு பாடும் வகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும், அதே கருத்தை வெளியிட்டார். நிலமை கையைமீறிப் போவதை உணர்ந்த் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், 'நைசாக' அங்கிருந்து கழன்றார். மலசலகூடம் செல்வதாக எழுந்து வெளியே வந்த முதலமைச்சர், அப்படியே கூட்டத்திலி ருந்தும் வெளியே வந்துவிட்டார். பின்னர் தனது உதவியாளரைத்தான் உள்ளே அனுப்பி தான் தம்முடன் கொண்டு வந்த கோப்புக்களை எடுப்பித்துக் கொண்டார்.

வெளியில் வந்த முதலமைச்சர் வாகனத்தில் ஏறியதும் செய்தியாளர்கள் மொய்த்துக்கொண்டனர். அவரும் தான் உள்ளே பேசிய பேச்சின் சாரம்சமாக, பேரவை, தேர்தல் அரசியலில் போட்டியிடாது என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார்.

ஆனால் பேரவைக் கூட்டம் முடிந்த பின்னர், காங்கிரஸ் கஜேந்திரகுமாரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ்பிரேமச்சந்திரனும் புதிய அரசியல் கூட்டுத்தொடர்பிலும், அதற்கான பேரவையின் ஆதரவு தொடர்பிலும் கருத்துத் தெரிவித்தனர். அன்று வெளியிடப்பட்ட பேரவையின் ஊடக அறிக்கையும், புதிய அரசியல் கூட்டுக்கான தமது பின்புல ஆதரவை தெளிவாகக் கோடிட்டுக் காட்டியிருந்தது.

> பேரவை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கமே தோற்றுப்போன இரண்டு கட்சிகளுக்கும் களம் ஏற்படுத்திக் கொடுப்பதுதான் என்பதை அந்த அமைப்பினது கடைசிக் கூட்டம் உறுதிப்படுத்திவிட்டது.

முதலமைச்சர் வெளியேறிய பின்னர் அல்லது வெளியேற்றப்பட்ட பின்னர், உள்ளூராட்சித் தேர்தலுக்கான வழிநடத்தல் குழுவை பேரவை நியமித்திருந்தது. தமது பேரவை சார்பில் உதயமாகும் புதிய அரசியல் கூட்டுக்கு வேட்பாளர்களைத் தேடிப் பிடித்துக் கொடுப்பது தொடக்கம் தொகுதிப் பங்கீடு வரைக்கும் வழிநடத்தல் குழுவே விடயங்களைக் கையாளும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### பேரவையின் கொள்கை நிலைப்பாடு குறித்த முதலமைச்சரது கருத்துக்களில் சறுக்கல் போக்கு

கஜேந்திரகுமார் - சுரேஷ் ஆகியோரது அறிவிப்பின் பின்னரும் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனோ, தேர்தல் அரசியலில் பேரவை ஈடுபடாது என்று சொல்லிக்கொண்டிருந்தார். முதலமைச்சரின் நிலைப்பாட்டிலிருந்து பேரவை விலகல் கோணத்தில் செல்வதை பேரவையினர் உணர்ந்தனர்.

அதேபோன்றதொரு நிலையையே முதலமைச்சரும் உணர்ந்தார். இதில் முந்திக் கொள்ள நினைத்த முதலமைச்சர் விக்னேஸ் வரன், பேரவையின் தேர்தல் அரசியல் முடிவுக்கும் தனக்கும் தொடர்பில்லை என்ற தொனிப்பட அறிக்கை வெளியிடத் தயாரானர்.

முதலமைச்சரின் வீட்டிலிருந்த கறுப்பாடு ஒன்றின் ஊடாக, அந்தத் தகவலை அறிந்த பேரவையின் மூத்த தலைகள் சில, இரவோடு இரவாக முதலமைச்சர் வீட்டுக்கு ஓடிச்சென்றன.

முதலமைச்சர் அந்த அறிக்கையை வெளியிட்டால் தமது இருப்பே கேள்விக் குறியாகிவிடும் என்பதால், இரவோடு இரவாக முதலமைச்சரை சமாதானப் படுத்தும், மூளைச் சலவை செய்யும் வேலையைஅவர்கள்முன்னெடுத்தனர். நீண்ட நெடிய போராட்டத்தின் பின்னர், முதலமைச்சர் அந்த அறிக்கை வெளியிடுதலைச் சற்றுத் தள்ளிவைக்கச் சம்மதித்தார்.

அதேவேளை, தான் வளர்த்த பேரவையே தறிகெட்டுப் போயுள்ளது என்று மற்றவர்கள் தூற்றக் கூடாது என்பதற்காகசமாளிப்புஅறிக்கைஒன்றைகேள்வி-பதில் வடிவத்தில் முதலமைச்சர் வெளியிட்டார்.

கூட்டமைப்புத் தலைமையை மாத்திரம் சாடினார். கூட்டமைப்பின் பிளவை நியாயப்படுத்தும் விதத்திலும் அவரது கருத்து அதில் இழையோடியிருந்தது. முதலமைச்சரின் இந்த அறிக்கையின் பின்னரும் அவரைச் சமாளித்து தமது தேர்தல் அரசியலுக்கு அவரைப் பச்சைகொடி காட்டவைப்பதற்கான முயற்சிகளைபேரவையின் முக்கிய புள்ளிகள் மட்டுமல்ல, புதிய தேர்தல் கூட்டின் தலைவரும் முன்னெடுத்தார்.

ஒருவேளை முதலமைச்சர் இந்தப் பேச்சுக்களில் மசிந்து, தனது பழைய நிலைப்பாட்டைத் தூக்கி எறிந்துவிட்டு தானும் ஒரு சாதாரண அரசியல்வாதிதான் என்பதை நிரூபிக்கக் கூடும்.

எதுஎப்படியிருந்தபோதிலும், பேரவை ஆரம்பிக்கப்படும்போது அதன்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு 23 மாதங்களில் நிரூபிக்கப்பட்டு விட்டது. இனி மக்கள் தான் தீர்ப்பு வழங்கவேண்டும்.



## ஆசிரியருக்கான கடிதம்

### வீட்டுத் திட்ட உதவிகளால் முழுப்பயன் கிட்ட வேண்டும்

போரினால்பாதிக்கப்பட்டமக்களுக்குவீட்டுத் திட்டம்வழங்கல்தொடர்ந்தும்பலதடைகளுடனேயே முன்னகர முயற்சிக்கின்றது. இந்த ஆண்டுக்கென வழங்கப்பட வேண்டிய வீட்டுத்திட்டம், உரியபயனாளிகளுக்குஇதுவரை கிடைக்கவில்லை. வீட்டுத்திட்டம் கிடைத்தாலும்அது பயனாளிகளுக்குப் பயனுள்ளதாக அமைய வேண்டியது அவசியம்.

அந்த வகையில் தற்போது வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு50ஆயிரம்கல்வீடுகள்அமைப்பதற்குகேள்விகோரல்நடைமுறைஆரம்பிக்கப்பட்டதான தகவலை அறியக்கூடியதாக உள்ளது. கேள்வி கோரல் மூலம் வழங்கப்படும் வீடமைப்பு ஒப்பந்தங்கள், ஒப்பந்தகாரர்களால் நடைமுறைப்படுத்தப்படும்போது அதில் பயனாளி திருப்தியடைய சந்தர்ப்பம் உள்ளதாஎன்பதேகேள்விக்குரியவிடயமாகும். ஒருவீட்டைஅமைப்பதற்குபயனாளிகட்டடம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகளுக்கு பயன்படுத்தப்படும். கட்டடப் பொருள்களது தரம், கலவை விகிதம், நிர்மாண வேலைகளில் திருப்தி என்பவை திருப்திகரமான அமைந்தால்மட்டுமேஎமக்கெனக்கட்டப்படும் வீடு குறிப்பிட்டதொரு காலத்துக்கு எமக்குப் பயனுள்ளதாக அமையும் என திருப்திப்படுவார்கள். எந்தவொரு ஒப்பந்தகாரரும் தனது இலாபத்தைக் கணிப்பிட்டுப் பாராது கேள்வி கோரல்சமர்ப்பிப்பதில்லை. உரிய பயனாளிகள் குறிப்பிட்ட தொகையில் அமைக்க முடியாதுஎனக்கருதும்வீடொன்றைஒப்பந்தகாரர் தாம்பொறுப்பேற்றுச்செய்துமுடிக்கமுன்வருவது கேள்விக்குரிய விடயமாகும்.

மேற்கொள்ளப்படும் நிர்மாணப் பணிகள் அரசதரப்பினாலோ, பயனாளிகள் தரப்புக்களாலோ மேற்பார்வை செய்யப்பட்டாலும் நிர்மாணப்பணிதிருப்திகரமாகஅமையாது. இது தொடர்பாக விமர்சனங்கள் வெளிவருவதுகுறித்துநாம்அறிந்துள்ளோம். எனவே கேள்விகோரல்மூலம்நிர்ணயவிலைபெறப்பட்டாலும்வீடமைப்புப்பணிகள்பயனாளிகள் மூலம் செயற்படுத்தப்படுவதோடு வேலை உரிய காலத்தில் தடையின்றி முடிவடைய நிபந்தனைகளைவிதித்துஅரசுமேற்பார்வையும் செய்தல் பொருத்தமாகும். இது தவிர வீட்டமைப்பின்அளவுபிரமாணங்கள், இரண்டிற்கும் மேற்பட்ட அங்கத்தவர் உள்ள குடும்பங்களுக்குபோதுமானதாகஇருப்பதில்லை. எனவே பயனாளிகளுக்கு குறிப்பிட்டளவு விஸ்தீரண அதிகரிப்பை அவர்களது இயலுமையைஉறுதிப்படுத்திவழங்குவதன் மூலம் அவர்களுக்கான வீடுகள் சுகாதார வசதிகள் உள்ளதாகவும் அமைக்க இயலும். இவற்றைக் கவனத்தில் கொண்டு அரச அதிபரோ, ஆளுநரோ, வீடமைப்பு அமைச்சின் நிர்வாகப் பகுதியினரோ மனிதாபிமான அடிப்படையில் நெகிழ்ச்சித் தன்மையைக் கடைப்பிடிப்பதன் மூலம் பயனாளிகளைத் திருப்தியடையச் செய்யும் வகையில் வழங்கப்பட வேண்டும்.

க.நா.சபாரத்தினம், மாதகல்

# 'வில்வம்'

## அருளுடைய கற்பக மூலிகை

கி.சுதர்சினி

வில்வை, குசாபி, கூவிளம் போன்ற தமிழ் பெயர்கள் கொண்டு அழைக்கப்படும் வில்வ மரம் மூலிகைத் தாவரமாக சிறப்புறுகிறது. இதனுடைய பொதுப் பெயர் 'வில்வம்' என்றே குறிப்பிடப்படுகிறது. தாவரவியல் பெயர் 'ஏஞ்சல் மார்மி லோஸ்' (Angle marmelos) என்பதாக அமைந்துள்ளது.

**பரம்பலும் தனிச் சிறப்பும்**

இலங்கை, இந்தியா மற்றும் அயன மண்டல பிரதேசத்தை சேர்ந்த ஆசிய நாடுகளில் காணப்படும் தாவர இனமாக விளங்குகிறது. இவை இமயமலை அடிவாரத்தில் இருந்து தென்னிந்தியாவின் கடைக்கோடி வரை வியாபித்து நிற்கின்றன. பல ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழர்கள் செறிந்து வாழ்கின்ற பிராந்திய நிலப்பரப்புகள் சார்ந்தும் வளர்ச்சியடைகின்ற அரிய மரங்களில் ஒன்றாக திகழ்கிறது. மதம் சார்ந்து நோக்கின், சைவ சமயத்தவருடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. 30 இற்கு மேற்பட்ட திருக்கோயில்களின் தலவிருட்சமாக விளங்கி தனிச் சிறப்புப் பெறுகிறது. குறிப்பிட்ட ஒரு நோய்க்கான மருந்தாக அமையாது, எல்லா நோய்களுக்குமான தீர்வு தருவியாக விளங்குகிறது.

3 கூட்டிலைகளை மாற்றடுக்கில் கொண்டு, உருண்டையான மணம் உள்ள சதைக்கனிகளை பெற்ற முட்கள் உள்ள பெரிய மரமாக இயற்கையின் படைப்பிலக்கண வடிவம் பெறுகிறது. எண்கூட்டிலைகளை கொண்ட அரிய வகை வில்வம், மகா வில்வம் அல்லது பிரம்ம வில்வம் என்று அழைக்கப்படுகிறது. முள்ளற்ற வில்வ வகைகளும் அரிதாக காணப்படுகின்றன.

**இனப்பெருக்கம்**

விதை மூலமும், காற்றுப்பதியம் மூலமும், ஒட்டுக்கன்றுகள் மூலமும் இவற்றின் இனப்பெருக்கத்தை மேற்கொள்ள முடியும். இந்துக்கள் மரபு வழியில் பசுஞ்சாணம் கலந்த மண்ணினுள் 3 நாள் விதையை வைத்து அமாவாசை தினத்தில் மணலினுள் புதைத்து, 45 நாள்களின் பின் வளர்ச்சியடைந்த கன்றுகளை பெற்றுக் கொள்கின்றனர். இது இலையுதிர் வகை சார்ந்த மரமாகும்.

> **"பொருள்களின் உண்மையான இயல்புகளை நாம் சரியான முறையில் கருத்தில் கொண்டால், ஒவ்வொரு மரமும் தங்கத்தினாலோ வெள்ளியினாலோ ஆக்கப்பட்டிருப்பதை விடவும் அது பச்சையாக இருக்கும் தன்மையிலேயே அதி உன்னதமானதாக விளங்கும்."**

**வழிபாட்டுச் சிறப்பு**

"பார்ச்சுஸ்ரீன் ட்ரீ" என குறிப்பிடப்படும் அதிர்ஸ்டகரமான வில்வமரத்தை பூஜை செய்து வழிபடுவதன் மூலம் கடன் தொல்லைகள் அகன்று, செல்வம் பெருகும் என்ற நம்பிக்கையை மக்கள் கொண்டுள்ளனர். வில்வ மரம் எங்கு வளர்க்கப்படுகின்றதோ அங்கு மகாலட்சுமி வாசம் செய்வாள் என்பது நம்பிக்கை. சிவபெருமானின் அம்சமாக விளங்கும் வில்லையின் சிறப்பை சிவராத்திரி காலங்களில் அறிந்து கொள்ள முடிவதுடன், வழிபாடு இயற்றி இறை அருளை வேண்டுகிறோம்.



**வில்வ மர அவயவங்கள் தரும் மருத்துவப் பயன்**

சித்த மருத்துவத்தில், பித்தத்தை தணிக்கும் மிக முக்கியமான மூலிகை மருந்தாக இது விளங்கு கிறது. "பழங்களின் ராஜா" எனப் போற்றப்படுகிறது. வில்வ மரத்தின் பூ, இலை, பிஞ்சு, பழம், வேர்ப்பட்டை, பிசின் என அத்தனை அவயவங்களும் மருத்துவ பயனை நிறைவாகக் கொண்டுள்ளன. வில்வ மரத்தின் பாகங்கள் இயல்பாகவே பூச்சி கொல்லி ஆற்றலும், பூஞ்சை எதிர்ப்புத்தன்மையும் உடையவை.

**வில்வம் இலை**

வில்வம் இலை நுரையீரல் தொடர்பான நோய்களைத் தீர்க்கும் இயல்பு கொண்டது. நாட்பட்ட இருமல், சளி, ஆஸ்துமா போன்ற நோய்களுக்கு காலைவேளை உணவுக்கு முன்னர், 7 தொடக்கம் 8 வில்வ இலைகளை சாப்பிட்டு வர நோய் குணமடையும். குருதியில் உள்ள சிவப்பணுக்களை அதிகரிக்கச் செய்யும். உணவு சமிபாட்டு கோளாறு, வாயுத் தொல்லை போன்றவற்றை வில்வ இலை கட்டுப்படுத்தும்.

**வில்வம் பழம்**

வில்வம் பழத்தில் புரதச்சத்து, தாது உப்புக்கள், மாசத்து, சுண்ணாம்பு, இரும்பு மற்றும் கொழுப்பு சத்துக்கள் நிறைவாக காணப்படுகின்றன. வயிற்றுப்போக்கு, சீதபேதி ஆகியவற்றுக்கு சிறந்த மருந்தாக விளங்குகிறது. பழத்தின் உள்ளே இருக்கும் கூழ் போன்ற பசையை நல்லெண்ணையில் ஊறவைத்து உடலில் பூசி குளித்து வர, சொறி சிரங்கு போன்ற தோல்நோய்கள் கட்டுப்படும். பழத்திலிருந்து ஜாம், பழச்சாறு, பழக்கூழ், பானங்கள், இனிப்புகள் போன்றன தயாரிக்கப்படுகிறது.

**வில்வம் விதை**

வில்வம் விதையில் இருந்து வில்வ எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இது முடி வளர்ச்சிக்கு பயன்படுகிறது.

**வில்வம் பட்டை**

வில்வம் பட்டை காய்ச்சலை கட்டுப்படுத்துவதுடன் நெஞ்சு வலி, மூச்சடைப்பு ஆகியவற்றையும் கட்டுப்படுத்துகிறது.

**வில்வம் பழத்தோல்**

வில்வம் பழத்தின் மேல் தோல் ஓடு போல் காணப்படும். அதை நெருப்பில் காட்டி தலையின் வழுக்கை உடைய இடங்களில் பூசி வர நல்ல பலன் கிடைக்கும்.


**வில்வ விருட்ச விநாயகர் வழிபாடு**

"ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஐம் வில்வ ரூபிண்யை
சௌபாக்ய லட்சுமியை
தனதாண்ய கர்யை நமோ நம...!!!!"


# மரண அறிவித்தல்

## சின்னையா சிறிஸ்கந்தராசா

**(முன்னைநாள் நரசிங்க வைரவர் கோயில் பூசகர் - துன்னாலை வடக்கு)**



தோற்றம் 25.12.1945

மறைவு 14.11.2017

துன்னாலை வடக்கு, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும், தெற்கு இலுப்பைக்குளம் 5ஆம் ஒழுங்கை, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிறிஸ்கந்தராசா கடந்த 14.11.2017 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - நாகமுத்து தம்பதிகளின் புதல்வரும், முத்துச்சாமி - இந்திராணி தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கமலாம்பிகை (நெளுக்குளம்) யின் அன்புச் சகோதரரும், சரஸ்வதி, கமலாதேவி, இராசம்மா, கணேஸ், யோகன், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கந்தசாமி, பொன்னம்பலம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிறிகுமார் (ஆசிரியர் - வ/கனகராயன்குளம் ம.வி, ஆலயக் குரு - தான்தோன்றி நாகம்பாள் ஆலயம் - சிதம்பரபுரம், மீனாட்சி அம்பாள் ஆலயம் ஆச்சிபுரம் முத்துமாரி அம்மன் ஆலயம் - மருதங்குளம்), சந்திரகுமார் (கனடா), ஞானேஸ்வரி (ஞானம்), ஜெகதீஸ்வரி (ஈசா - கனடா), காலஞ்சென்ற சிவபாலசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புத் தந்தையும், அகிலா (ஆசிரியை - வ/இந்துக் கல்லூரி), மல்லிகாதேவி (கனடா), தனபாலன் (மின்சாரசபை - வவுனியா), நந்தகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அக்ஷயா (வ/இறம்பைக்குளம் ம.ம. வித்தியாலய மாணவி), அக்ஷயன் (வ/இந்துக் கல்லூரி மாணவன்), பிரணவி (கனடா), வைஷ்ணவி (கனடா), விஸ்ணவி (கனடா), லக்ஹிகா, விலக்ஷன் (வ/இந்துக் கல்லூரி மாணவன்), கௌதமன் (கனடா), சஜீபா (கனடா), மிதுனன் (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், கெங்காமலர் (வெளிக்குளம்), கெங்காதரன், காலஞ்சென்றவர்களான கெங்காதேவி, ஸ்ரீதரன், பாஸ்கரன் மற்றும் சசிகரன் (பொ/வைத்தியசாலை ஊழியர் - வவுனியா) ஆகியோரின் தாய் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று புதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12 மணியளவில் வெளிக்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்தஅறிவித்தலைஉற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும்ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 815 2891**

# மகரஜோதி நாயகனைப் பணிந்து அருளின் சிறப்பை பற்றுதல் செய்வோம்

“ஐந்து இந்திரியங்கள், அன்னமய கோசம்,எட்டு ராகங்கள்,மூன்று குணங்கள்,பிராணமய, மனோமய கோசங்கள், வித்யா, சுவித்யா இவற்றைக் கடப்பது என்பது விஞ்ஞான மய, ஆனந்தமய கோசங்களைக் கடப்பது. எனவே பதினெட்டு தத்துவங்களையும் கடந்தால் ஸ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பதினெட்டாம் படியின் தத்துவமாக கொள்ளப்படுகிறது. மேலும் பதினெட்டு படி என்பது பதினெட்டுச் சித்தர்களையும், தேவதைகளையும் குறிப்பதாகவும் ஒரு ஐதீகமும் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப்பூசையாகும்.

## இன்று சபரிமலை நாயகன் ஐயப்பனின் விரதமாலை அணியும் வழிபாடுகள் ஆரம்பம்

மதுரகவி அருளானந்தன்



சபரிமலை யாத்திரை மேற்கொள்ள நினைப்பவர்கள் குரு சுவாமி ஒருவரை நாடிச் செல்வர். அவர் அனுமதியைப் பெற்று, அவருடன் இணைந்து யாத்திரையை மேற்கொள்வர். இங்கு ஒருவர் தனித்தே யாத்திரை மேற்கொள்வதையும் விட, குருவுடன் இணைந்து யாத்திரை மேற்கொள்வது என்பது கிடைத்தற்கரிய பாக்கியம். இந்தப் பாக்கியம் சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் ஒவ்வொரு ஐயப்ப பக்தருக்கும் கிடைக்கிறது. கலையானாலும் சரி, கல்வியானாலும் சரி எமை நன் முறையில் வழிநடத்திச் செல்ல குருவானவர் உதவி புரிகிறார். அந்தவகையில் ஆன்மிக குருவானவர் சிறப்பிடம் பெறுகிறார். இந்து மதத்தில் குருவுக்கு மேலான இடம் வழங்கப்பட்டுள்ளது.
சமரிமலை யாத்திரை என்பது ஓர் ஆன்மிக யாத்திரை. அதனை குருவின் துணை கொண்டு மேற்கொள்வதே சாலச் சிறந்தது.

**மாலை அணிதல்**
எந்த ஒரு காரியத்தை செய்யும் முன்பும் சங்கல்பம் செய்து கொள்வது என்பது முக்கிய கடமையாக கருதப்படுகிறது. மனதில் உறுதியான சங்கல்பம் இல்லாமல் செய்யும் காரியங்கள் முழுமையடைவதில்லை. சபரிமலைக்குப் போகும் முன்பாக, மாலை அணிந்து கொள்வது என்பது சங்கல்பம் செய்து கொள்வதே. அதாவது, “சீரிய முறையில் விரதத்தைக் கடைப்பிடித்து நல்ல முறையில் யாத்திரை மேற்கொண்டு, பகவானது மேலான தரிசனம் காண்பேன்” என்று சங்கல்பம் செய்து கொண்டிருப்பதையே முத்திரை மாலை உணர்த்துகிறது.

**மார்கழி மாதத்தின் சிறப்பு**
மார்கழி மாதம் மேலான மாதம். “மாதங்களில் நான் மார்கழி மாதமாக இருக்கிறேன்” என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணன் கூறுகிறார். தவிர மார்கழி மாதம் தான் தேவர்களுக்கெல்லாம் பிரம்ம முகூர்த்த காலம். அதிகாலைப் பொழுதை நாம் இறைவழிபாடு இயற்றும் காலமாக கொண்டால், வாழ்வில் நல்ல முன்னேற்றம் கிட்டும். ஆண்டாள் “திருப்பாவை” பாடியதும் மார்கழி மாதமே. மார்கழிக் குளிரில் களிப்பதும், இரவு வெறுந்தரையில் படுப்பதும் உடல் பற்றைக் குறைக்கிறது.

**தீட்சை பெறுதல் மற்றும் தாடி வளர்த்தல்**
ஒருவன், தன்னையும் தன் உடலையும் மறக்க மறக்க இறைவனது நினைதல் அவனுள்ளாய் அதிகரிக்கிறது. தன்னையும் தன் அழகையும் மறந்து இறைவனையே நினைக்கும் போது இறைவனது அருள் அவனுக்குப் பரிபூரணமாகக் கிடைக்கிறது. இறையருள் கிடைக்க தன்னை மறக்க வேண்டும் என்பதை உணர்த்துவதே தீட்சை.

**ஐயப்பன் சுலோகம் கூறுதல்**
“சுவாமியே சரணம் ஐயப்பா” என்று ஐயப்பன் சுலோகத்தை சாதாரணமாகவே வாய்மொழிந்து கொள்ளலாம். ஆனாலும் அதனை அசைவியக்கத்தின் நயத்தோடு உரக்கக் கூறுவது சுவாசப் பயிற்சிக்கு ஒப்பானதாக விளங்குகிறது. 'பிரணாயாமம்' செய்வதால் கிடைக்கும் பலனை இதனூடே பெற்றுக் கொள்ள முடியும். அவ்விதம் கூறும்போது எமை அறியாமலேயே மனம் ஒருமைப்பட்டு பகவானின் பாத கமலங்களில் லயித்து விடுகிறது. இந்த அனுபவம் வார்த்தைகளால் விளக்கிக்கூறிவிட முடியாத இன்பத்தைத் தரும்.

**மாலை அணிந்தவர்களை ‘ஐயப்பா’ என்றும் ‘சுவாமி’ என்றும் அழைத்தல்**
ஐயப்பா விரதத்தைக் கடைப்பிடிப்போர், விரதம் மேற்கொள்ளும் ஒவ்வொருவரையும் ஐயப்ப சுவாமியாகவே உருவகப்படுத்திக் கொள்கின்றனர். இத்தகு மனோநிலை கொண்டு மேன்மைப்படுத்தப்படுகின்றனர். இது கிடைத்தற்கரிய மிக உன்னதமான நிலையாக கருதப்படுகிறது.

**இரு முடியின் தத்துவம்**
இருமுடியில், முன்முடியில் அதாவது முன்பகுதியில் சுவாமிக்கு வேண்டிய அபிஷேக பொருள்களும், நைவேத்தியப் பொருள்களும், பின் முடியில் பக்தனுக்குரிய அதாவது யாத்திரிகனுக்கு வேண்டிய பொருள்களும் கொண்டு செல்லப்படும். சபரி மலையை அண்மிக்கும் போது, பின்முடியில் உள்ள பொருள்கள் அனைத்தும் உபயோகப்படுத்தப்பட்டு பகவான் சந்நிதானத்தை அடையும் பொழுது இருமுடியில் பகவானது பிரசாதங்கள் மட்டுமே இருக்கும். பகவானை அண்மிக்கும் பொழுது யாத்திரிகர்களின் பொருள்கள் குறைவடைந்துவிடும். முடிவில் பகவானைத் தரிசித்துத் திரும்பும் பொழுது எமக்கென்று இருப்பது இறைஅருள் உடைய அருட்பிரசாதம் ஒன்றாகவே இருக்கும். இதனையே இரு முடியின் தத்துவமாக கொள்கின்றனர்.



**நெய்த்தேங்காய்**
நாம் சபரிமலைக்கான யாத்திரையை ஆரம்பிக்கும் போது, நெய் நிரப்பி எடுத்துச் செல்லும் தேங்காயை சபரி மலையில் உடைத்துப் பார்க்கும் போது அது நன்கு உறைந்து 'புரணம்' போல் காட்சியளிக்கும். குருவானவர் முக்கண்களில் ஒன்றான அகக் கண்ணைத் திறந்து அதன் ஊடே பக்தி என்ற நெய்யை எம் மனதில் நிரப்பி விடுகிறார். சிறிது காலம் செல்ல அதுவே பூரண ஞானமாக வெளிப்படுகிறது. இதுவே நெய்த் தேங்காய் கொண்டுள்ள உட்கருத்து.

**இருமுடியை தலையில் ஏந்திச் செல்லல்**
“எண் சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்” அந்த வகையிலே நாம் ஒருவரைப் புகழ்ந்து போற்றினால் “ஏன் அவரைத் தலைமேல் வைத்துத் தாங்குகிறாய்..?” என்று கேட்கும் வழக்கத்தை அறிந்து கொண்டுள்வோம்.
இங்கு, தலைமீது தாங்குவது என்பது அவ்வளவு மேலான விடயமாக கருதப்படுகிறது. தலைமீது ஒரு பொருளைத் தாங்கி வருகிறோமென்றால், அதற்கு அவ்வளவு முக்கியத்துவத்தை நாம் கொடுக்கிறோம் என்பது அர்த்தம். பரதன் ஸ்ரீராமனின் பாதுகையைத் தோளிலோ, தோள்பையிலோ கொண்டு செல்லவில்லை. மாறாக தன் தலைமீதுதான் சுமந்து நடந்து சொன்றான் என்பதை இராமாயணத்தில் பார்க்கிறோம். ஆகையால் இருமுடியைத் தலைமீது ஏந்திச் செல்வதுதான் பொருத்தமானது.

**ஜோதியின் தத்துவம்**
கடவுளுக்கு உருவமும் உண்டு. அருவமும் உண்டு. ஆக, சபரிமலையில் ஏகாந்தமாய் சின்முத்திரையுடன் கூடிய யோக வடிவில் உருவம் கொண்ட அதே மூர்த்தியே அருவமான ஜோதி வடிவமுமானவன் என்பதை உணர்த்துவதே ஜோதி. அந்த ஜோதியின் பிரகாசத்தினால்தான் சூரிய சந்திரர்கள் பிரகாசிக்கிறார்கள்.

**பதினெட்டாம் படியின் தத்துவம்**
ஐந்து இந்திரியங்கள், அன்னமய கோசம், எட்டு ராகங்கள், மூன்று குணங்கள், பிராணமய, மனோமய கோசங்கள், வித்யா, சுவித்யா இவற்றைக் கடப்பது என்பது விஞ்ஞான மய, ஆனந்தமய கோசங்களைக் கடப்பது. எனவே பதினெட்டு தத்துவங்களையும் கடந்தால் ஸ்ரீ ஐயப்பனைச் சென்று அடையலாம் என்பதே பதினெட்டாம் படியின் தத்துவமாக கொள்ளப்படுகிறது.
மேலும் பதினெட்டுப் படி என்பது பதினெட்டுச் சித்தர்களையும், தேவதைகளையும் குறிப்பதாகவும் ஒரு ஐதீகமும் உண்டு. அவர்களுக்குச் செய்யும் பூஜையே படிப்பூசையாகும்.

# இஸ்லாமால் வெறுக்கப்படும் மூடத்தனங்கள்

இஸ்லாமிய வெள்ளி

உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிகக் கண்ணியமானவர். ஆனால் இறையச்சத்தின் பின்னால் இருக்கும் மூடத்தனங்களை இறைவன் ஒருபோதும் ஏற்பதில்லை.

நபி முஹம்மது (ஸல்) மக்காவை வெற்றி கொண்டு, கஅபாவினுள் நுழைந்து கதவை தாழிட்டுத் தொழுதுவிட்டு, பின்பு கதவைத் திறந்தார். பலரும் பள்ளிக்கு வெளியில் கூடி நின்று நபி(ஸல்) என்ன செய்யப் போகிறார் என்று எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.


அந்தத் தருணத்தில் நபி(ஸல்) ஓர் உரையை நிகழ்த்தினார், 'வழிபாட்டுக்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவன் இல்லை. அவன் தனித்தவன். அவனுக்கு எவ்விதத் துணையுமில்லை. அவன் எமக்குத் தந்த வாக்கை நிறைவேற்றினான். தன் அடியாருக்கு உதவி செய்தான். அவனே இராணுவங்கள் அனைத்தையும் தனியாகத் தோற்கடித்தான். இதுவரை நடைமுறையில் இருந்து வந்த அல்லாஹ்வின் இந்த இல்லத்தைப் பராமரிப்பது, ஹாஜிகளுக்குத் தண்ணீர் புகட்டுவது ஆகிய இவ்விரண்டைத் தவிர ஏனைய அனைத்துச் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் எனது இவ்விரண்டு கால்களுக்குக் கீழ் புதைத்து விட்டேன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். ஏகப்பட்ட அறியாமைகளுக்குள் நீங்கள் கட்டுண்டுள்ளீர்கள். அவற்றை அடியோடு கை விட்டு அல்லாஹ்ற நாடாவேண்டிய தருணமிது. அறியாமைக் காலத்தில் நீங்கள் கடைப்பிடித்த மூடத்தனமான பழக்க வழக்கங்களையும் முன்னோர்களைக் கொண்டு பெருமையடித்து வந்ததையும் இப்பொழுது உங்களை விட்டு அல்லாஹ் போக்கி விட்டான் மக்கள் அனைவரும் ஆதமிடமிருந்து வந்தவர்கள் ஆதம் மண்ணால் படைக்கப்பட்டவர்" என்றார்.

நபி(ஸல்) தனது உரையின் தொடர்ச்சியாகத் திருக்குர் ஆனின் வசனத்தை ஓதிக் காட்டினார் 'மனிதர்களே! உங்கள் அனைவரையும் நாம் ஒரே ஆண், ஒரே பெண்ணிலிருந்துதான் படைத்தோம். ஒருவர் மற்றவரை அறிந்து கொள்ளும் பொருட்டு, உங்களைக் கிளைகளாகவும் கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் எவர் இறையச்சம் உடையவராக இருக்கின்றாரோ, அவர்தான் அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக மிகக் கண்ணியமானவர். நிச்சயமாக அல்லாஹ் அனைத்தையும் நன்கறிந்தவனாகவும் நன்கு தெரிந்தவனாகவும் இருக்கின்றான்'. (குர்ஆன் 49:13) என்று உரையாற்றி முடித்தார்.

ஆம் நாம் அனைவரும் மூடத்தனங்களை அடியோடு கைவிட வேண்டிய கட்டாயம் உள்ளது. இறையச்சத்தையே அல்லாஹ் விரும்புகிறார். அதன் பின்னால் உள்ள மூடத்தனங்களை அல்ல.

மொகமட் அமீர்

# வரலாற்றில் இன்றைய தினம் 17.11.2017




2006 – ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக ஊர்வலம் நடத்தியதை அடுத்து வைகோ உட்பட ஆயிரம் பேர் கைது.

1292 ஸ்கொட்லாந்து அரசரானார் ஜோன் பல்லியோல்.
1810 - பிரிட்டனின் மீது சுவீடன் போர் அறிவிப்புச் செய்தது.
1831 - பெரிய கொலம்பியாவில் இருந்து ஈக்குவடோரும், வெனிசுலாவும் பிரிந்தன.
1869 - செங்கடலை இணைக்கும் சுயஸ் கால்வாய் திறக்கப்பட்டது.
1973 - வாட்டர்கேட் ஊழல் குற்றச்சாட்டில், தான் நிரபராதி என்று தெரிவித்தார் அமெரிக்க அதிபர் நிக்சன்.
1993 - நைஜீரியாவில் இராணுவப் புரட்சி.
1996 - புலிகளுடன் அரசு பேச்சு நடத்த வேண்டும் என்று டிமெல் வலியுறுத்தல்.
1999 - நளினிக்கு வழங்கிய தண்டனையைக் குறைக்கு மாறு சோனியா பரிந்துரை.
2006 - தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை அடியோடு அழிக்க சதி என்று சிவாயிலிங்கம் தெரிவிப்பு.
2016 - சித்திரவதைகள் குறித்து பதிலளிக்க ஐ.நா. சபையிடம் அவகாசம் கேட்டது கொழும்பு.

# கார்த்திகை மாத ராசிபலன்

## நவம்பர் 17 முதல் டிசெம்பர் 15 வரை



### மேடம்:

மேட ராசி அன்பர்களே!

சூரியன் சாதகமாக இல்லாத காரணத்தால், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அரச காரியங்கள் தாமதமானாலும் நல்லபடி முடியும். ஆனால், செவ்வாய் அனுகூலமாக இருப்பதால், எதிலும் வெற்றியே ஏற்படும். எதிரிகள் பணிந்து போவர். அவர்களால் மறைமுக ஆதாயமும் உண்டாகும். எதிர்பாராத பண வரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனால், மாதப் பிற்பகுதியில் சகோதரர்களுடன் சிறுசிறு கருத்துவேறுபாடு ஏற்பட்டுச் சரியாகும். மாதம் முழுவதும் புதன் சாதகமாக இருப்பதால், எடுத்த காரியங்கள் அனுகூலமாக முடியும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். குரு அனுகூலமாக இருப்பதால், திருமண முயற்சிகள் கைகூடும். சிலருக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்கும். மாதத்தின் பிற்பகுதியில் சுக்கிரனும் சாதகமாக இருப்பதால், உறவினர்களாலும் நண்பர்களாலும் ஆதாயம் உண்டாகும். அவர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். திடீர் அதிர்ஷ்ட வாய்ப்புகளும் ஏற்படக்கூடும். ஆனால், அஷ்டம ஸ்தானத்தில் சனி இருப்பதால், வாகனத்தில் செல்லும்போது எச்சரிக்கையாக இருக்கவும்.

**உத்தியோகத்தர்களுக்கு:** உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும் என்றாலும், சக ஊழியர்களின் ஒத்துழைப்பால் மிகச் சிறப்பாக செயற்பட்டு, அதிகாரிகளின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். சிலருக்குத் தடைப்பட்ட பதவி உயர்வு, ஊதிய உயர்வு போன்ற பயன்கள் கிடைக் கும்.

தொழில், வியாபாரம் சிறப்பாக நடைபெறும். எதிர்பார்த்ததை விடவும் பணவரவு கூடுதலாகக் கிடைக்கும். ஆனால், அரச தரப்பிலிருந்து சில, தாமதங்கள் ஏற்படக்கூடும்.

**கலைத்துறையைச் சேர்ந்தவர்களுக்கு:** மாத முற்பகுதியில் எதிர்பார்த்த வாய்ப்புகள் கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டாலும், மாதப் பிற்பகுதியில் வாய்ப்புகள் கிடைப்பதில் சிரமம் இருக்காது. சக கலைஞர்களால் அனுகூலமான பயன்கள் ஏற்படக்கூடும்.

**மாணவர்களுக்கு:** படிப்பில் ஆர்வம் அதிகரிக்கும். தேர்வுகளில் மிகச் சிறப்பான மதிப்பெண்கள் பெற்று, ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பாராட்டுகளைப் பெறுவீர்கள். ஆனால், சக மாணவர்களிடம் கவனமாகப் பழகவும்.

**குடும்பத்தை நிர்வகிக்கும் பெண்மணிகளுக்கு:** குடும்பச் சூழ்நிலை மகிழ்ச்சி தருவதாக இருக்கும். அலுவலகத்துக்குச் செல்லும் பெண்மணிகளுக்கு அலுவலகச் சூழ்நிலை உற்சாகம் தருவதாக இருக்கும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும்.

# வலம்புரிச் சங்கின் மகிமை



- வலம்புரிச் சங்கை வீட்டில் வைத்து முறையாகப் பூஜித்து வந்தால் அஷ்ட ஐஸ்வர்யத்தையும் தரும் மகாலக்சுமி எம் வீட்டில் வாசம் செய்வாள் என்று வேதங்கள் கூறுகின்றன.
- தினமும் வலம்புரிச் சங்கை வழிபட்டு வந்தால் பிரம்மஹத்தி தோசம் எனும் கடுமையான தோசம் நீங்கும் என்று புராணங்கள் கூறுகின்றன.
- வீட்டில் வாஸ்து குறைபாடுகள் இருந்தால் அதற்கு சங்கில் மஞ்சள், துளசி கலந்த நீரை காலை வேளையில் வீடுகளில் தெளித்து வர வேண்டும். இதனால் அந்த வீட்டில் உள்ள பாதிப்புகள் விரைவில் நீங்கும்.
- செல்வங்கள் மற்றும் வணிகம் செழிக்க வீட்டில் சங்கை வைத்து 48 நாள்கள் பூசை செய்து வந்தால் நல்ல பயன் கிடைக்கும். கார்த்திகை மாதத்தில் வரும் சோமாவாரம் எனும் திங்கட்கிழமைகளில் நூற்று எட்டு, ஆயிரத்து எட்டு என்ற சங்குகளின் எண்ணிக்கையில் அனைத்து சிவன் கோயில்களிலும் சங்காபிஷேகம் நடத்தப்படும்.

## நாளை

**18.11.2017**
சனிக்கிழமை

**கார்த்திகை 02**

**திதி:** அமாவாசை பி.ப. 05.15 வரை
**நட்சத்திரம்:** விசாகம் மு.இ. 08.03 வரை
சுபநேரம்: 03.08–04.38 வரை
ராகுகாலம்: 09.08–10.38 வரை

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** எதிர்மறை சூழ்நிலையும் அனுகூலமாக மாறும். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணி சிறப்பாக நிறைவேறும். கொடுக்கல், வாங்கல் சீராகும்.

**இடபம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு பூர்த்தியாகும். குழந்தைகள் விரும்பிய பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மந்தநிலை உருவாகும். இலாபம் சுமார். பெண்கள் குடும்பத்தில் வீண் செலவைத் தவிர்க்கவும்.

**கடகம்:** உறவினரின் பேச்சால் சங்கடம் உருவாகும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு கூடுதல் உழைப்புத் தேவைப்படும். சுமாரான இலாபம் கிடைக்கும்.

**சிங்கம்:** நண்பரின் உதவியால் நன்மை காண்பீர்கள். தொழில் வியாபாரத்தில் வளர்ச்சிப்பணியில் ஈடுபடுவீர்கள். ஆதாயம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**கன்னி:** வீண் விவாதத்தை தவிர்ப்பது நல்லது. அதிக உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் ஓரளவு ஆதாயம் கிடைக்கும். தாயின் அன்பும், ஆசியும் கிடைக்கப் பெறுவீர்கள்.

**துலாம்:** பிறரிடம் குடும்ப விஷயத்தைப் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் செயல்படவும். மிதமான இலாபம் கிடைக்கும்.


**விருச்சிகம்:** பொது விவகாரங்களில் கருத்து சொல்ல வேண்டாம். தொழில் வியாபாரம் அதிக உழைப்பால் மட்டுமே இலாபம் கிடைக்கும்.

**தனுசு:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும்.

**மகரம்:** மனதில் நிம்மதி நிலைத்திருக்கும். தொழில் வியாபாரம் செழிக்க விடாமுயற்சியுடன் பணிபுரிவீர்கள். தாராள பணவரவு இருக்கும்.

**கும்பம்:** பிறர் விஷயத்தில் தலையிட வேண்டாம். தொழில் வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு உதவும். மிதமான பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில் வியாபாரத்தில் மந்தநிலை உருவாகும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமையை சமாளிக்க திணறுவர்.




# டிஜிட்டலில் வெளியாகும் கமலஹாசனின் படங்கள்

கமலஹாசன் நடித்துள்ள மீண்டும் கோகிலா, காக்கிச்சட்டை, காதல் பரிசு உள்ளிட்ட 6 படங்கள் டிஜிட்டலில் வெளியாகின்றன.

பழைய படங்களை நவீன தொழில் நுட்பமான டிஜிட்டலுக்கு மாற்றி மீண்டும் திரைக்கு கொண்டு வரும் வழக்கம் திரையுலகினர் மத்தியில் அதிகரித்து வருகிறது. எம்.ஜி.ஆர் நடித்த உலகம் சுற்றும் வாலிபன், ஆயிரத்தில் ஒருவன், நம்நாடு, சிவாஜி கணேசன் நடித்த கர்ணன், பாசமலர், வீரபாண்டிய கட்டபொம்மன், வசந்த மாளிகை உள்ளிட்ட பல படங்கள் டிஜிட்டலில் வந்தன.

தற்போது கமலஹாசன் நடித்த பழைய படங்களும் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் மாற்றப்பட்டு மீண்டும் திரைக்குக் கொண்டு வரப்படவுள்ளன. இதற்கு ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**கோழியின் கிறுக்கல்!!**
@Kozhiyaar
ஏறி மிதித்தாலும் தாங்கி கொள்கிறது சைக்கிள்!!

## இப்ப புரிஞ்சிடுச்சு



இந்த ஹேயார் ஸ்டைல் எங்க இருந்து வந்துச்சின்னு

மிக ஆர்வமா ஜிம்ல போய் சேர்ந்தேன். மூன்றே நாள்ல என்னாலேயே நம்ப முடியல்ல அவ்வளவு குறைஞ்சிடுச்சு...



ஆர்வம்......

## சுடோக்கு
எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 4 | 7 | | 8 | | |
| | 7 | 1 | | | 6 | | 2 | |
| | | | | 5 | | 7 | | |
| | 4 | | | | | | 7 | 3 |
| | 8 | | 2 | 4 | 7 | | 5 | |
| 6 | 5 | 7 | | | | | 8 | |
| | | 6 | | 2 | | | | |
| | 9 | | 7 | | | 3 | 1 | |
| | | 5 | | 3 | 9 | | | |

**நேற்றைய விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 9 | 5 | 4 | 1 | 6 | 2 | 3 |
| 1 | 4 | 2 | 6 | 9 | 3 | 7 | 8 | 5 |
| 6 | 5 | 3 | 2 | 8 | 7 | 4 | 1 | 9 |
| 9 | 6 | 4 | 1 | 2 | 5 | 3 | 7 | 8 |
| 8 | 2 | 1 | 7 | 3 | 9 | 5 | 4 | 6 |
| 3 | 7 | 5 | 8 | 6 | 4 | 2 | 9 | 1 |
| 2 | 1 | 7 | 9 | 5 | 6 | 8 | 3 | 4 |
| 4 | 9 | 6 | 3 | 7 | 8 | 1 | 5 | 2 |
| 5 | 3 | 8 | 4 | 1 | 2 | 9 | 6 | 7 |





# அனுபவம் புதுமை


எலி ஒன்று தன் வளையை விட்டு வெளியே வந்தது. சில நொடிகள் சுற்றும் முற்றும் பார்த்தது. எதிரே இருந்த நெற்களத்தில் விவசாயிகள் நெற்கதிர்களைத் தரையில் அடித்து பதர்களிலிருந்து நெல்லைப் பிரித்தெடுத்துக் கொண்டிருந்தார்கள். நெற்கள் ஒரு பக்கம் மலை போலக் குவிந்தன. ஏராளமான பறவைகள் மிகவும் சுதந்திரமாய்ப் பறந்து வந்து அவற்றைக் கொத்திக் கொண்டு போயின. விவசாயிகள் அவற்றைக் கண்டும் காணாததுமாய் தங்கள் வேலையிலேயே கவனமாய் இருந்தனர். இவ்வளவையும் எலி கவனித்துக் கொண்டிருந்தது. உடனே அதற்கு துணிச்சல் பிறந்தது. "அருமையான உணவுகள். இந்த மனிதர்கள் மிகவும் நல்லவர்கள். இரக்க குணம் கொண்டவர்கள் போல தெரிகிறார்கள். எத்தனையோ பறவைகள் வந்து அந்த நெற்களைக் கொத்திக் கொண்டு போவதைப் பார்த்தும் அவற்றை அவர்கள் எந்த விதத்திலும் துன்புறுத்தவில்லையே. 'எமது முதல் எதிரிகள் மனிதர்கள்' என்று அப்பா அடிக்கடி சொல்லுவாரே! அது முற்றிலும் தவறென்று எனக்கு இப்போது நினைக்கத் தோன்றுகிறது. ஒரு வேளை அப்பாவுக்கு மட்டுமே உள்ள சந்தேகக் குணமோ அது" என்று எண்ணிய எலி "சரி எது எப்படியோ! நானும் போய் இந்த நெற்களை வளையில் சேமிப்பேன். இனி மழை காலமும் வருகிறது. பின்னர் உணவுக்குத் திண்டாடாமல் இப்பொழுதே சேமித்து வைக்க வேண்டும்" என்று எண்ணி நெற்களம் நோக்கி விரைந்தது. இப்படி நினைத்த எலி வாலிபப் பருவத்தைக் கூட எட்டவில்லை. முன் அனுபவமும் கிடையாது. அதனால் அது தான் நினைத்ததே சரி என்று நினைத்தது.

எலி நெற்களம் நோக்கித் நெருங்குகையில் ஒரு விவசாயி தற்செயலாக அதனைப் பார்த்து விட்டான். குனிந்து ஒரு தடியை எடுத்து அசுர வேகத்தில் அந்த எலியை நோக்கி வீசினான். இதைக் கவனித்த எலி தடியின் தாக்குதலிருந்து தப்ப தலை தெறிக்க ஓடியது. ஆனால் 'ராக்கெட்' வேகத்தில் வந்த தடி எலியின் வால்லத் துண்டாடியது. "ஐயோ" என்று அலறியபடி எலி ஒரு துள்ளுத் துள்ளி மேலும் தலை தெறிக்க ஓடியது. தனது வளைக்குள் புகுந்த பிறகுதான் எலிக்கு உயிரே வந்தது. தனது வால் துண்டான இடத்தைப் பார்த்ததும். அதற்கு அழுகை அழுகையாக வந்தது."நான் மனிதர்கள் பற்றி தப்புக் கணக்குப் போட்டு விட்டேன். மனிதர்கள், பறவைகள் மட்டில் அமைதியாக இருந்ததைக் கண்டு நான் ஏமாந்து விட்டேன். அப்பா சொன்னதே முற்றிலும் உண்மை. மனிதர் மற்ற உயிரினங்களுக்கு எப்படியோ, ஆனால் எலிகளாகிய எமக்கு முற்றிலும் எதிரிகளே. பெரியவர்கள் அனுபவ சாலிகள். உலகில் நல்லது கெட்டது எது என்பது அவர்களுக்குத் தான் தெரியும். அவர்கள் அறிவுரைகளை மதிக்காமல் நடந்தால் என் கதிதான் எல்லோருக்கும் ஏற்படும். நல்ல வேளை என்ன புண்ணியம் செய்தேனோ! தலைக்கு வந்தது வாலோடு போயிற்று. இனி என் விருப்பப் படி எந்த முடிவும் எடுக்க மாட்டேன். பெரியவர்கள் சொல் கேட்டு அதன்படியே தான் நடப்பேன்" என்று தனக்குள் முடிவெடுத்தது எலி.

**தாய் சொல்லைத் தட்டாதே**
**தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.**

## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்








## முன்னறிகுறியும் முதலுதவிச் சிகிச்சையும்

சில மணி நேரங்களிலோ அல்லது சில நாள்களிலோ ஏற்படப்போகும் மாரடைப்புக்கு (ஹார்ட் அட்டேக்) சில அறிகுறிகள் முதலிலேயே தோன்றுகின்றன. மார்பின் நடுப்ப குதிலோ அல்லது மார்பு முழுவதும் வலி ஏற்படலாம். சிறிது நேரத்தில் இந்த வலி மறைந்து விடும். ஆனால் மறுபடியும் எந்த நேரத்திலும் இந்த வலி தோன்றலாம். எனவே வலி தானாகக் குறைந்து விட்டதென மகிழ்ச்சிடையக் கூடாது. வலி மார்பி லிருந்து கழுத்து தாடை, இடது கை அல்லது இரு கைகளுக்குமே பரவலாம். சில நேரங்களில் கைகளில் மட்டுமே வலி தோன்றலாம். இதை கைச்சுளுக்கு என்றோ தசை வலி என்றோ அலட்சியப்படுத்தலாகாது. கையைத் தலைக்கு மேலே தூக்கி னால் வலி அதிகமாகாமல் அப்படியே இருந்தால் மாரடைப்பாக இருக்கலாம். வலி உண்மையான வலியாக இல்லாமல் அடைத்தல் அழுத்துதல், பிசைதல் போன்ற உணர்ச்சிகளாக ஏற்படலாம். மாரடைப்பு ஏற்பட முன் மூச்சுத் திணறல், குமட்டல், வாந்தி மயக்கம், பிழியப் பிழிய வியர்த்தல் போன்றவை ஏற்படலாம். வலியுடன் அதிக வியர்வை இருக்குமாயின் அது அவசியம் மாரடைப்புக்கான அறிகுறிதான். உடனே மருத்துவமனைக்குப் புறப்படவேண்டும். வைத்தியர் வருவதற்குள் முதல் சிகிச்சையாக இதயத்துக்கு நேராக மேலே மார்பின் மேல் ஒரு கையை வைத்து மற்றொரு கையை அதன் மேல் வைத்துநொடிக்கு ஒருமுறை வேகமாக அழுத்தி அழுத்தி எடுக்கவும். நோயாளியின் மயக்கம் தெளியும் வரை மீண்டும் இதயத்துடிப்பு ஏற்படும் வரை இதேபோன்று தொடர்ந்து செய்யவேண்டும்.

## பால் காட்டாத பெயர்ச் சொற்கள்

1. அறிவாளி
2. அதிகாரி
3. அகதி
4. அதிபர்
5. அநாதை
6. ஏழை
7. உலோபி
8. ஊமை
9. எதிரி
10. வள்ளல்
11. வியாபாரி
12. விருந்தாளி
13. விஞ்ஞானி
14. விரோதி
15. பாவி
16. பிள்ளை
17. புலவர்
18. நீதிபதி
19. தியாகி
20. தொழிலாளி
21. நோயாளி
22. துறவி
23. ஞானி
24. வைத்தியர்
25. முதலாளி
26. மந்திரி
27. அதிபதி
28. மேதை
29. பிரயாணி
30. வள்ளல்

## நான் ஓர் அழகிய பறவை



- நான் ஓர் அழகிய பறவை.
- என்னைக் கிளி என்று அழைப்பர்
- என் உடல் முழுவதும் இளம் பச்சை நிறமாக இருக்கும்.
- என் கழுத்தில் அழகிய சிவப்பு வர் ணத்தில் ஆரம் ஒன்றுண்டு.
- என்னுடைய அலகுகள் சிவந்து வளைந்திருக்கும்.
- நானும் எனது குடும்பமும் மரப் பொந்துகளில் அதிகமாக வாழ் வோம்.
- நான் இனிய பழங்களையே அதிகம் விரும்பி உண்ணுவேன்.
- கொவ்வைப் பழம் எனக்கு மிகவும் பிடிக்கும்.
- நானும் என் தோழர்களும் பல இடங்களுக்கும் பறந்து சென்று கனிகளையும், வயல் வெளிகளில் தானியங்களையும் உண்டு மகிழ்வோம்.
- என் இனத்தில் பல வகையினர் உள்ளனர்.
- ஒவ்வொரு வகையினரும் வெவ்வேறு நிறமுடய அழகிய சிறகுகளை உடையவர்கள்.
- மிருகக் காட்சிச் சாலைகளில் வகை வகையான எம் இனத்தவர்கள் பலரைக் காணலாம்.
- என் போன்றவர்களை சிலர் பிடித்து தம் வீடுகளில் கூடுகளில் அடைத்து வளர்க்கிறார்கள்.
- எம்மை மனிதர் செல்லப் பிராணிகளாக வளர்த்தா லும் எனக்கு அப்படி வாழ்வது விருப்பமில்லை.
- சுதந்திரமாக வாழுவதையே நான் விரும்புகிறேன்.
- வீடுகளில் வளர்பவர்கள் எமக்கு தன்மைப் போல பேசக் கற்றுக் கொடுக்கிறார்கள்.
- சிறுவர்கள் "பச்சைக் கிளியோ வா வா வா பாலுஞ் சோறும் உண்ணவா" என்று அழைத்துப் பாடுவர்.
- இவர்கள் பாடலைக் கேட்டு நான் மகிழ்ச்சி அடைகி றேன்.

# நுகரும் சக்தி அதிகம் கொண்ட சுறாக்கள்




முப்பது கோடி ஆண்டுகளுக்கும் மேலாகப் பூமியில் இருந்து வரும் மீன் வகைகளில் சுறாவும் ஒன்று. இப் போது எஞ்சியிருக்கும் சுறா வகைகள் இருநூற்றைம்பது ஆகும். இருபது அடியிலிருந்து முப்பது அடி வரை வள ரும். இந்த வகைகச் சுறாக்களின் எடை 4ஆயிரத்தில் இருந்து 7ஆயிரம் பவுண்டுகள் வரை இருக்கும். 100 அடி வரை வளரும் சுறாக்களும் உள்ளன.

சுறாக்களுக்குக் கண்பார்வை கொஞ்சம் குறைவு. ஆனால் வாசனையை நுகரும் சக்தி அதிகம். அரைக் கிலோ மீற்றர் தூரத்தில் ஒரு துளி குருதி கடல் நீரில் விழுந் தாலும் போதும் சுறாமீன் விர்ரென நீரைக்கிழித்துக் கொண்டு அந்த இடத்துக்கு ஓடி வந்து விடும். ஆகவே தான் சுறாக்கள் வாழும் சமுத்திரத்தில் குளிப்பவர்கள் நீரிலே சிறுநீர் களிப்பதோ மூக்கைச் சிந்துவதோ கூடாது. உடலில் ஏதாவது காயத்தோடு கடலில் இறங்கினாலும் எங்கேயோ இருக்கும் சுறாவுக்கு அழைப்பிதழ் கொடுத்து வரவழைத்தாக ஆகிவிடும். ஆனால் மூக்குத் துவாரங் களை மூடி விட்டாலோ அவை பட்டினி கிடைக்க வேண் டியதுதான். செயலற்று விடும். இவற்றுக்கு வயிறு மாத்தி ரம் சற்று பெரிதாகவே இருக்கும். ஒரு தடவை இந்தச் சுறாவொன்றின் வயிற்றைக் கிழித்துப் பார்த்ததில் அங்கே சில போத்தல்கள் சில மரப்பலகைகள் சிலஆமை கள், ஒரு கடல் சிங்கம் இத்தனையும் இருந்தனவாம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு
02 . 04 . 1935



இறப்பு
16 . 11 . 2017

# ஆறுமுகம் சிவராஜா

வேலணை மேற்கு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 266, அரசடி வீதி கந்தரமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவராஜா (16.11.2017) வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறமுகம் சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பத்மாவதியின் அன்புக்கணவரும் சிவஞானானந்தி, சிவரூபன் (டென்மார்க்), சிவரஜனி, சிவநளாயினி (சுவிஸ்), சிவாஸ்கரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் இராசரத்தினம் (R.R), பாலராஜி (டென்மார்க்), உமைபாலன், ரவிச்சந்திரன் (சுவிஸ்), சுகந்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சிந்துஜன் (இலங்கை வங்கி, கைதடி), கௌசிகன் (லண்டன்), ரம்மியா, ரதுஷன் (டென்மார்க்), யதுஷன் (நொதேன் சென்றல் வைத்தியசாலை), பவித்திரா (மாணவி,' வேம்படி மகளிர் கல்லூரி), கோபிகா (துபாற்கந்தோர், யாழ்ப்பாணம்) ரூபாசினி (லண்டன்) ஆகியோரின் அன்புப்பேரனும் விதுஷனாவின் அன்புப்பூட்டனும் காலஞ்சென்ற வர்களான மனோன்மணி, நாகேஸ்வரி, நவரத்தினம் மற்றும் செல்வரத்தினம் (மட்டக்களப்பு), பூங்கோதை (பிரான்ஸ்), செந்தில்வடிவேல் (கனடா . முன்னாள் பிரதிப்பணிப் பாளர் திறைசேரி கொழும்பு) ஆகியோரின் அனபுச்சகோதரரும் சண்முகலிங்கம் காலஞ்சென்ற சேதுகாவலர் லலிதா, பாலகிருஷணன், மனோரஞ்சிதம், சிவஞானராணி, நாகேஸ்வரி, பவ நாதன்.சரஸ்வதி.சதாசிவம்(இளைப்பாறியஆசிரியர்யாழ்ப்பாணக்கல்லூரி),பங்கயற்செல்வன் காலஞ்சென்ற இரஞ்சிதகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறி வித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**266, அரசடி வீதி, கந்தர்மடம்.**
**021 222 3803, 077 239 5816**

**தகவல்: குடும்பத்தினர்.**
**இ. இராசரத்தினம் (R.R மருமகன்),**
**உ. ரஜனி (மகள்)**

## மரண அறிவித்தல்



# அந்தோனிப்பிள்ளை போல்

***(முன்னாள் நிறஞ்ஜினி ஸ்ரோர் உரிமையாளர்)***

யாழ். நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை போல் (முன்னாள் நிறஞ்சினி ஸ்ரோர்ஸ் உரிமையாளர்) 14.11.2017 செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை றோசமுத்து தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை மரியம்மா தம்பதிகளின் நேசமிகு மருமகனும்.மரியா அவர்களின் ஆருயிர்க் கணவரும்,றஜனி, சுபாஜினி, கெனத், மெலானி, சதாஜினி, நிறஞ்ஜினி, புஸ்பாஜினி,குணாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும், ரவிந்திரன், பற்றிக், கிருபா, றொபின், வினோஜ், ஜெறுசியன், சங்கர் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அவோண், ஜெவோண், ஜொணத்தன், அனபெல், அமலி, ஜவோண், அன்றிஜா, ஜொகான், ஜோசிவ், ஜோசுவா, ஜெஸ்வின், ஜெர்வின், ஜோஸ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான யூபறேசியா, அல்பிறேட், சிங்கராயர், றெஜினா, சாள்ஸ், அலோசியஸ், விபினமுத்து(ராணி) மற்றும் மாகிறேட் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தற்போது இல.52 மருதடி வீதி,நல்லூர்,யாழ்ப்பாணம் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிச்சடங்கிற்காக நாளை (18.11.2017)சனிக்கிழமை பி.ப 12.30 மணிக்கு மேற்படி முகவரியில் இருந்து எடுத்துச்செல்லப்பட்டு நாரந்தனையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்னர் பி.ப 4.00 மணிக்கு நாரந்தனை புனிதபேதுருவானவர்ஆலயத்தில்திருப்பலிஒப்புக்கொடுக்கப்பட்டுநாரந்தனைசேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**இல. 52, மருதடி வீதி,நல்லூர்.**
**0212219237**

## கண்ணீர் அஞ்சலி



யாழ். மாவட்ட செயலகத்திகன் சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகஸ்-தர்களின் ஒருங்கிணைப்பாளர் **திருமதி விக்கினேஸ்வரன் கிருஷாந்தி** அவர்களின் அன்புத்தாயார்.

### அமரர் இராஜேஸ்வரி கமலநாதன்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங் களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**மத்திய அமைச்சின் சமூக சேவைகள் திணைக்கள பணிப்பாளர் மற்றும் சமூக சேவை திணைக்கள உத்தியோகத்தர்கள் (கொழும்பு), யாழ். மாவட்ட சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்.**

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபை சபைக்குட்பட்ட வட்டாரம்-5, டேவிட் வீதி, ஆதன இல 14/3 கபிரியல் அந்தோனிப்பிள்ளை என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை டேவிட் வீதி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கபிரியல் அந்தோனிப் பிள்ளைகைம் பெண் மரிகிருதா பிரசித்த நொத்தாரிசு வோல்ட் பேர்னடாட் கனகரட்ணா முகதாவில் நிறைவேறிய 1067 இலக்க 1955.12.10 ஆந் திகதிய அறுதி உறுதி மூலம் வைத்தி ஆசீர்வாதம் பெண் அருளம்மாவிற்கு வழங்கியுள்ளார். ஆனால் குருநகர், இராஜேந்திரா வீதி, இல94/4 வல்லிநாகநாதி என்ற ஜெபநேசனும் பெண் செபமாலையும் குறித்த ஆதனம் தாங்களின் 2ஆம் பேரான செபமாலையின் பெற்றோர் வைத்தி ஆசீர்வாதம் பெண் அருளம்மாவும் ஆகியோரின் மூலம் தங்களால் 2ஆம் பேரான குறித்த செபமாலையின் உரித்தும் ஆட்சியுமானது என வெளிப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 3864ஆம் இலக்க 2006.07.28 ஆந் திகதிய சீதன உறுதி மூலம் அதே இடத்தைச் சேர்ந்ததங்கள் மகள் செபமாலை அன்ரனி யோசேப் பெண் கொன் செப்ராவுக்கு சீதனமாக வழங்கி தமது சீவிய உரித்துக்கு அமையவழங்கியுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 5314/15.07.2009 திருத்தல் உறுதி வல்லிநாகநாதி என்ற ஜெபநேசனும் பெண் கொன் செப்ராவும், குறித்த 3864ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன் உறுதியில் உரித்து வாசகத்தில் "வைத்தி ஆசீர்வாதம் பெண் அன்னம்மாவும்" மேற்கு எல்லையாக வலோரி பர்ணாந்தும் பெண் செபமாலையும் எனவும் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறித்த உறுதியில் வைத்தி ஆசீர்வாதமும் பெண் அருளம்மாவும், எனவும் மேற்கு எல்லை வேலன் பர்ணாந்தும் பெ்ண் செபமாலையும் எனவும் இருந்திருத்தல் வேண்டும் எனவெளிப்படுத்தி திருத்தம் செய்துள்ளார்.

ஆதன விவரம் :- வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம், யாழ்ப்பாணப் பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று குருநகர் இறை "பறையன் மணற்காடு" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் மெல்வின் ஞானப்பிரகாசம் MSI அவர்களின் வரைபட இலக்கம் 2678/2016.11.16 இல் துண்டு 01 எனக்காட்டப்பட்ட நில பர.00 குளி 16.80 ஆகும். இதற்கு எல்லை கிழக்கு செபதேயு பெண் செலினினதும், அருளப்பு புவிராஜசிங்கத்தின் ஆதனம்.

வடக்கு:-இராசையா அந்தோனிப்பிள்ளை ஆதனம்.

மேற்கு:-வேலன் பர்ணாந்துவும் பெண் செபமாலை இவர்களின் ஆதனம்.

தெற்கு:-ஒழுங்கை.

தற்போது இவ்வாதனத்தை செபமாலை அன்ரனி யோசேப்பும் பெண் கொன் செப்ராசும் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். என்வே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது செபமாலை அன்ரனி யோசேப்பும் பெண் கொன் செப்ரா என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடியஎப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-10, சந்தன மாதாகோவில் ஒழுங்கை 2ம் ஒழுங்கை, ஆதன இல 20/15என்ற இலக்கத்தைக்கொண்ட ஆதனம் அப்புத்துரை பெண் நாகரட்ணம் என்னும் பெயரில் ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

சிவியாதெரு, சின்னத்தம்பி சின்னையாவும் பெண் தங்கமுத்துவும் பிரசித்த நொத்தாரிசு சு.இரட்ணசிங்கம் முகதாவில் நிறைவேறிய 1819 / 1950.01.09 ஆம் இலக்கத்தில் அறுதி உறுதி மூலம் சுண்டிக்குளி கந்தையா அப்பாத்துரை பெண் நாகரத்தினத்திற்கு நில. பர. 7 குளி 5 9/32 அறுதியாக வழங்கியுள்ளனர். பிரசித்த நொத்தாரிசு திருமதி ச.இளங் கோவன் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 6345 / 2011.06.04 ஆம் இலக்க வெளிப் படுத்தல் உறுதியில், யாழ்ப்பாணம், இணுவில் கே.கே.எஸ் றோட், முருகோதயம் இராஜரட்ணம் நீலகண்டன் என்பவர் தான் குறிப்பிட்ட ஆதனத்தை சட்டத்தரணி செல்வி. பொன்னையா முகதாவில் 1983 ஆம் ஆண்டு ஆதனத்தை விற்றவரான நாகரட்ணம் அப்பாத் துரையிட மிருந்து கொள்வனவு செய்து அறுதி உறுதி தன்பேரில் எழுதுவிக்க ஆவன செய்ததென்றும், தான் இந்தியா சென்று தற்போது யாழ்ப்பாணம் வந்து அறுதி உறுதியை தேடிய போது காணிப்பதிவகத்தில் உறுதி பதியப்படவில்லை என்றும் தான் வாங்கிய ஆதனத்தின் தெற்கெல்லை ஆதனத்தை தனது சகோதரன் காலஞ்சென்ற இராஜரட்ணம் ஹரிகரன் பிரசித்த நொத்தாரிசு தி.சண்முகராஜா முகதாவில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1262 /1976.02.02 ஆம் இலக்க நன்கொடை உறுதியில் சொந்தக்காரன் என்றபடியால் அதன் வடக்கெல்லை ஆதனத்தை தான் கொள்வனவு செய்ததாகவும் இற்றைவரை இரண்டு ஆதனங்களையும் தனதுசகோதரனின் மனைவியே பார்த்து ஆட்சி செய்துவந்துள்ளார் என்றும் வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு திருமதி ச.இளங்கோவன் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 10259/ 2014.07.17ம் இலக்க நன் கொடை உறுதி மூலம் அதே முகவரியைச் சேர்ந்த இராஜரட்ணம் நீல கண்டனும் பெண் சுபித்ராவும் குறித்த ஆதனத்தை தங்கள் புத்திரன் இராஜரட்ணம் நீல கண்டன் அபிலாஷிற்கு நன்கொடையாக வழங்கியுள்ளனர்.

ஆதனவிபரம்: வடமாகாணம், யாழ்ப்பாணமாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை "நறுவிலியடி" இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் திரு. S.சுப்பிரமணியம் அவர்களின் வரைபட இலக்கம் 1974 /02 /18இல் துண்டு- 1 எனக் காட்டப்பட்ட நில.பர.2 குளி 8.00ஆகும். இதற்கு எல்லை
வடக்கு:-தியாகராசாபெண் கனகாம்பிகையின் ஆதனம்
கிழக்கு:- செல்லையாபொன்னம்பலத்தின்ஆதனம்.
தெற்கு:- இராஜரட்ணம் பொன்னம்பலத்தின் ஆதனம்
மேற்கு:- கையொழுங்கை

தற்போது இவ்வாதனத்தை இராஜரட்ணம் நீலகண்டன் அபிலாஷ் தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர்.எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது இராஜரட்ணம் நீலகண்டன் அபிலாஷ் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## வேலணை பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் (வ - து)

பதிவு இல. - J/1606 பதிவு திகதி - 11.04.1972

### பதவி வெற்றிடங்கள் நிரப்புதல்

கீழ்க் குறிப்பட்ட பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1) பதவி - களஞ்சிய மேற்பார்வையாளர்.**
பதவிக் குறியீடு - 207/13
சம்பள அளவுத்திட்டம் - 14230 - 120X10 - 130X10 - 16730 (13/2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை - 01
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
அ) கூட்டுறவுப் பணியாளர் 14ஆவது சம்பள அளவுத்திட்ட தொடர்புடைய துறைப்பதவியொன்றில் இரண்டு (2) வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 15ஆவது சம்பளத்திட்ட தொடர்புடைய துறைப்பதவியொன்றில் நான்கு (4) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரச் சான்றிதழ் அல்லது க.பொ.த. சாதாரணதரம்) அல்லது வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியும் தொடர்பு பட்ட துறைப்பதவியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

**2) பதவி - களஞ்சிய முகாமையாளர்**
பதவிக் குறியீடு - 208/14
சம்பள அளவுத் திட்டம் - 13875 - 115X10 - 125X10 - 16275 (13/2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை - 02
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
அ) கூட்டுறவுப்பணியாளர் 15ஆவது சம்பள அளவுத்திட்ட தொடர்புடைய துறைப்பதவியொன்றில் இரண்டு (2) வருடத்திற்கு குறையாத அனுபவம். அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புடைய துறைப்பதவியொன்றில் நான்கு (4) வருடத்திற்கு குறையாத அனுபவம்.
அல்லது
ஆ) கூட்டுறவுப்பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொத.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது கணிதம் வர்த்தக எண்கணிதம் அல்லது எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தி.

**3) பதவி - களஞ்சிய முகாமையாளர்.**
பதவிக் குறியீடு - 208/15
சம்பள அளவுத்திட்டம் - 13515 - 110X10 - 120X10 - 15815 (13/2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை - 03
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
அ) கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பகுதியொன்றில் இரண்டு (02) வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப்பணியாளர் 17 ஆவது சம்பளத்திட்ட தொடர்புபட்ட துறைப்பகுதியொன்றில் நர்ன்கு (04) வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
ஆ) கூட்டுறவுப் பணியாளர் (சாதாரணதரம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதாரணதரம்) கணிதம் அல்லது வர்த்தக எண்கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட இரு தடவைகளுக்கு மேற்படாத அமர்வுகளில் 06 பாடங்களில் சித்தியும் தொடர்புபட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

**4) பதவி - காவலாளி**
பதவிக் குறியீடு - 315/17
சம்பள அளவுத்திட்டம் - 12800 - 100X10 - 110X10 - 14900 (13/2015 இன்படி)
வெற்றிட எண்ணிக்கை - 01
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
அ) 8ஆம் தர கல்விச் சான்றிதழும் நல்ல ஆரோக்கியமும் இருத்தல் வேண்டும்.

**5) பதவி - காரியாலய அலுவலர்**
பதவிக் குறியீடு - 317/17
சம்பள அளவுத்திட்டம் - 12800 - 100X10 - 110X10 - 14900
வெற்றிட எண்ணிக்கை - 01
**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**
8ஆம் தர கல்விச் சான்றிதழ்
வயதெல்லை - 18 - 45
விண்ணப்ப முடிவு திகதி - 16.12.2017

***குறிப்பு*** :- மேற்குறிப்பட்ட பதவிக்கு கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்று நிரூபத்துக்கு அமைவான படிகள் வழங்கப்படும்.
(சுற்றுநிரூபம் 02/2012, 05/2015, 04/2017
வயதெல்லை கூட்டுறவுச் சங்க பணியாளர்களுக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
விண்ணப்பங்கள் யாவும் சுயமாகத் தயாரித்து **தலைவர் / பொது முகாமையாளர், வேலணை பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், முதலாம் வட்டாரம், வேலணை கிழக்கு, வேலணை.** என்ற முகவரிக்கு பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கவேண்டும்.

**தலைவர்,**
**பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், வேலணை.**

## மரண அறிவித்தல்

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ*

*தோற்றம்* 11 07 1958



*மறைவு* 15 11 2017

### கந்தையா லோகேஸ்வரன் (ராசன்)

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும் காளி கோயிலடி மாகியம்பதி சண்டிலிப்பாயை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா லோகேஸ்வரன் (ராசன்) 15.11.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா (சோமு) ஆச்சி முத்து தம்பதியினரின் மூத்த மகனும் காலஞ்சென்ற கனகராசா மற்றும் இராசமலர் தம்பதியினரின் மருமகனும் குசலகுமாரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற லோகேஸ்வரி மற்றும் பத்மாவதி, ஜெகதீஸ்வரன் (ஈசன்), ரதிகாந்தன் (காந்தன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கிரிசங்கர், கிரிசாந், கிரிசதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் கார்த்திகாவின் மாமனாரும் காலஞ்சென்றவர்களான கோமலகுமாரி, வசந்தகுமாரி மற்றும் யோகராசா, மகோந்திரா, உதயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**காளி கோயிலடி, மாகியம்பதி,**
**சண்டிலிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கில்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021- 2227712
Find us on facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

## மரண அறிவித்தல்



*பிறப்பு. 13. 02.1998 இறப்பு. 15. 11. 2017*

### சண்முகரட்ணம் டார்வின்

*(கொக்குவில் இந்து சென் ஜோன்ஸ் கல்லூரி 2017 A/L மாணவன்)*

மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் கொக்குவில், மேற்கு தாவடியை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகரட்ணம் டார்வின் 15.11.2017 புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகரட்ணம் மற்றும் வல்வாம்பிகை தம்பதியினரின் அன்பு மகனும் டயானந்தா, திரியம்பகி ஆகியோரின் அன்புச் சகோதரனும் க. சிவசரணம், திருமதி சி. யோகாம்பிகை அவர்களின் பாசமிகு பேரனும் திரு திருமதி சந்திரபாலு மகாராணியின் மருமகனும் (கொக்குவில்) திருமதி பரஞ்சோதிநாதன் சந்திரவதனாவின் சிறிய மகனும் சி. சத்தியசீலனின் மருமகனும் திரு திருமதி சி. சக்திதாஸன் மங்களா (டென்மார்க்) அவர்களின் மருமகனும் றிஜிவ், கிரி, விஜய், கௌரி, மதுரா (டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரயைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**0777743489 (டயானந்தன்)**

**உதயன்**
**விளம்பர தொடர்புகளுக்கு**
**advt@uthayan.com, 021 493 1111**

## யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## உற்பத்தி முகாமையாளர் பதவி

எமதுசங்கத்தில் பின்வரும் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எமது சங்கத்தினால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை அலுவலக வேலைநாட்களில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுப் பூர்த்தி செய்து 30.11.2017 ஆம் திகதி பிற்பகல் 04.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "தலைவர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் குறிப்பிடப்படல் வேண்டும்.

பதவி: உற்பத்தி முகாமையாளர் (ஒப்பந்தம்), சம்பளம்: பேசித் தீர்மானிக்கப்படும்.

தகைமைகள்:
(1) வயம்ப பல்கலைக்கழகத்தில் உணவு விஞ்ஞானமும் போசணையும் (Food Science and Nutrition) பட்டப்படிப்பு பெற்றிருத்தல் வேண்டும். அல்லது
கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தின் வெலிசறை / குண்டகசாலை இரண்டு வருட டிப்பிளோமா பயிற்சி பெற்றிருத்தல் வேண்டும்.
(2) ஆங்கிலத்தில் தேர்ச்சி (எழுத, வாசிக்க) பெற்றிருத்தல் மற்றும் சிங்களம் பேசத் தெரிந்திருப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
(3) கணினி அறிவுடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

பொது நிபந்தனைகள்:
1. நிர்வாகத்தினால் தீர்மானிக்கப்படும் பிணையைச் செலுத்துதல் வேண்டும்.
2. கல்வித்தகைமைகள், அனுபவம், வயது, வதிவிடத்தைஉறுதிப்படுத்துதல், நற்சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். இதற்கமையாத விண்ணப்பங்களும் சரிவரப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

**16.11.2017** **தலைவர்**

*ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!*

## மரண அறிவித்தல்



### திருமதி ஈஸ்வரி மனோகரன்

யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஈஸ்வரி மனோகரன் 15.11.2017 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மனோகரனின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - சரஸ்வதி தம்பதியரின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றர்களான முத்தையா - பொன்னம்மாள் தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான அருமைநாயகம், மதியாபரணம், பாலசிங்கம், பஞ்சரத்தினம், தணிகாசலம், விநாயகமூர்த்தி மற்றும் கணேஷ், முத்துராசா, நவரத்தினராசா (குண்டுமணி), தையல்நாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கண்ணன், ராதிகா, மேனகா, சிந்துஜா மற்றும் காலஞ்சென்றவர்களான வித்தியா, திவாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ராம்குமார், சுரேந்திரன், சற்குணராசா, பிரதீபா ஆகியோரின் அன்பு மாமியும் ரமானுஜா, ரோகித், அனனியா, பரணிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**0212213248**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## NIDI

**TRAINEE PROJECT MANAGEMENT FIELD OFFICERS**

Northern Institute of Development Initiatives is a non-profit company for the development of the Northern province.
It invites young graduates to be trained as project management officers. Training period is one year starting January 1, 2018.
NIDI will pay an allowance during training and full employment from January 2019.
Interviews will be held on December 1 and 2 in Jaffna.
Please email CV with full details and an electronic photo to:
admin@nidi-lanka.org

## 93 மேலதிக...

கூட்டு அரசுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஈ.பி.டி.பி., இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன ஆதரித்து வாக்களித்தன. ஜே.வி.பியும், மகிந்த அணியும் எதிராக வாக்களித்தனர். வரவு -செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீது, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார வாக்கெடுப்புக் கோரினார். சபாநாயகர் கருஜெயசூரிய வாக்கெடுப்புக்கான அறிவிப்பை விடுத்தார். உறுப்பினர்கள் அனைவரும் மின்னியல் முறையில் வாக்குகளைப் பதிவு செய்யலாம் என்றும் அதற்கு முடியாதவர்கள் கைகளை உயர்த்தி தமது விருப்பினைத் தெரிவிக்க முடியும் என்றும் சபாநாயகர் குறிப்பிட்டார். 17 உறுப்பினர்கள் சபைக்குச் சமூகமளித்திருக்கவில்லை.

சுயாதீனமாகச் செயற்படவுள்ளதாக அறிவித்த ரத்ன தேரர், முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ஆகியோரும் ஆதரவாக வாக்களித்ததோடு வரவு-செலவுத் திட்ட முன்மொழிவுகள் தொடர்பில் கடுமையான விமர்சனத்தை முன்வைத்திருந்த அமைச்சர்களான ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க, சுசில் பிரேமஜெயந்த ஆகியோரும் ஆதரவாக வாக்களித்திருந்தனர்.

வாக்களிப்பு முடிவுகள் அறிவிக்கப்பட்டதையடுத்து இன்று வெள்ளிக்கிழமை முதல் குழு நிலையில் ஒவ்வொரு அமைச்சுக்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி தொடர்பில் தனித்தனியான விவாதங்கள் ஆரம்பமாகவுள்ளதாக நிதி அமைச்சர் மங்கள சமரவீர அறிவித்தார். (உ-5.31)

## அதிகாரத்தை...

நாம் உங்களுக்குப் பல்வேறு தேர்தல்களிலும் ஆதரவளித்திருக்கிறோம். நாம் உங்களுக்கு எதிரானவர்கள் என்று கருதவேண்டாம். எமக்கு எதிராகவும் இருக்கவேண்டாம். புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு ஒத்துழைக்குமாறு, உண்மையான சுதந்திரக் கட்சி உறுப்பினர்களிடம் வேண்டுகோள் விடுக்கிறேன். இது உங்களது அடிப்படைக் கடமையாகும்" என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான ஆறாம் நாள் விவாதம் நேற்று நடைபெற்றது. முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச முன்னிலையில், இரா.சம்பந்தன் நீண்ட உரையாற்றினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

**மகிந்த பதற்றத்தை ஏற்படுத்துகிறார்**

உள்ளூராட்சித் தேர்தல்களில் அரசைத் தோற்கடிக்கவேண்டும் என்பது மகிந்த ராஜபக்சவின் அரசியல் செயற்பாடு. அதைக் குறைகூற முடியாது. அந்த இலக்கை அடைவதற்காக அரசமைப்பு உருவாக்க முயற்சி நாட்டைப் பிளவுப்படுத்துமென்று தெரிவித்து நாட்டில் இன ரீதியான பதற்றத்தை ஏற்படுத்த அவர் முயற்சிக்கின்றார். அரசமைப்புக்கு எதிரான கருத்துக்களைச் செவிமடுக்கக் கூடியதாக இருக்கிறது. இது துரதிர்ஷ்டவசமான நிலைமையாகும். இவ்வாறான கருத்துக்கள் நாட்டின் எதிர்காலப் பொருளாதாரத்துக்குச் சாதகமாக அமையாது. இதனை அவர்கள் உணரவேண்டும். அரசமைப்பின் கடந்தகால மற்றும் தற்கால அனுபவங்கள் தொடர்பில் நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண்டும்.

**அதிகாரத்தைப் பகிர மகிந்த எதிர்ப்பு**

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நாடாளுமன்றத்திலும், அதற்கு வெளியேயும் எடுத்துள்ள நிலைப்பாடானது சமூகங்களுக்கு இடையில் குரோதத்துக்கே வழிவகுக்கும். அதிகாரங்கள் பகிரப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன், அதிகாரங்கள் கொழும்பில் மாத்திரமே இருக்கவேண்டும் என அவர் கூறிவருகிறார். 18ஆவது திருத்தத்தின் ஊடாக இதனை அவர் நடைமுறைப்படுத்த முயற்சித்திருந்தார்.

இவ்வாறான செயற்பாடுகள் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கே சாதகமாகும். இவற்றால் மக்களுக்கு எந்தவித நன்மையும் ஏற்படாது. மக்கள் அதிகாரத்தில் நேரடியாகப் பங்கெடுப்பதாயின் அதிகாரம் பகிரப்படவேண்டும்.

நாட்டைப் பிளவுபடுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாக மகிந்த ராஜபக்ச கூறிவருகிறார். அவருடைய இந்தக் கருத்துப் பிழையானது என்பதைத் திட்டவட்டமாகக் கூறுகின்றேன். பிரிக்கப்படாத, ஒற்றுமையான நாட்டை உறுதிப்படுத்தும் வகையிலான அரசமைப்பே உருவாக்கப்படும் என்பதை முன்வைக்கப்பட்ட யோசனைகளில் பகிரங்கமாக நாம் குறிப்பிட்டுள்ளோம்.

பிழையான வழியில் மீண்டும் இந்த நாட்டிலுள்ள மக்களைப் பிளவுபடுத்துவதற்கு அவர் முயற்சிக்கக்கூடாது. மூத்த அரசியல்வாதியான அவரிடமிருந்து நாம் இதனை எதிர்பார்க்கவில்லை.

**சொன்னது நீங்கள் செய்வது நாங்கள்**

மக்களின் அபிப்பிராயங்களையும் வேணவாக்களையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்பை உருவாக்க ஒரு வருடத்துக்குள் நடவடிக்கை எடுப்பதாக 2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தமது தேர்தல் அறிக்கையில் தெரிவித்திருந்தார். அவ்வாறானதொரு அரசமைப்பு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பின்னர் அதை மக்களின் அனுமதிக்காகப் பொது வாக்கெடுப்புக்கு முன்வைப்பேன் என்றும் அவர் தெரிவித்திருந்தார். இங்கு யாரும் அதைத் தவிரவேறு எதையும் செய்யவில்லை. மக்களுக்கு மறைத்து எதையும் செய்யவேண்டிய அவசியம் எமக்குக் கிடையாது. பின்னர் எதற்காக தானே முன்மொழிந்தவொரு விடயத்தையே அவர் எதிர்க்கிறார்?

2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றத்தை அரசமைப்புச் சபையாக மாற்றும் தீர்மானம் சபையில் நிறைவேற்றப்பட்டது. புதிய அரசமைப்பு உருவாக்கப்படுவதை நீங்கள் எதிர்க்கும் பட்சத்தில் ஏன் அந்த நாடாளுமன்ற அமர்வுக்கு வருகைதந்து அந்தத் தீர்மானத்தை எதிர்த்திருக்கவில்லை என்று மகிந்த ராஜபக்சவிடம் கேள்வி எழுப்புகிறேன். அந்த அமர்வுக்கு வருகை தந்து இது நாட்டுக்குத் தேவையில்லை என்று ஏன் கூறியிருக்கவில்லை?

**ஆட்சி மாற்றம் இலங்கையை காப்பாற்றியது**

2015ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை தொடர்பான தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டது. அரசமைப்பு ரீதியாகத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டியதை அந்தத் தீர்மானம் வலியுறுத்துகிறது. இந்த நாடு ஏற்றுக்கொண்ட தீர்மானம் மீறப்படவேண்டும் என்று கருதுகிறீர்களா?

இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் சமாதானத்தை உறுதிப்படுத்தும் நிமித்தம் அரசமைப்பு உருவாக்கம் மற்றும் அரசமைப்பு ரீதியான சில விடயங்களைச் செய்வதாக நீங்கள் ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு உறுதியளித்துள்ளீர்கள்.

2015ஆம் ஆண்டுக்கு முன்னதாக 2012ஆம், 2013ஆம் மற்றும் 2014ஆம் ஆண்டுகளில் எமது நாட்டின் நிலமை மிகவும் மோசமாக இருந்தமை எமக்குத் தெரியும். இந்த நாடு பொருளாதாரத் தடைகளுக்கும் பெரும் சிரமங்களுக்கும் உள்ளாகும் நிலமையொன்றும் காணப்பட்டது. புதிய அரசு ஆட்சிக்கு வந்து புதியபோக்கொன்று வந்தமையினால் அவை இடம்பெறவில்லை. ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கு நாம் ஏற்கனவே வழங்கிய உறுதிமொழிகளைக் கடைபிடிப்பதற்கு நாம் கடமைப்பட்டிருக்கவில்லையா என்று நான் உங்களிடம் கேட்கிறேன்.

**மகிந்தவுடன் நல்ல உறவு**

நீண்டகாலமாக சிறந்த தனிப்பட்ட உறவைப் பேணிவரும் மகிந்த ராஜபக்ச இங்கு இருப்பதையிட்டு நான் சந்தோசமடைகிறேன். உங்களது ஒத்துழைப்பு எமக்குத் தேவை. நீங்கள் இந்த நாட்டிலுள்ள மூத்த அரசியல்வாதி. இந்த நாட்டு மக்கள் மத்தியில் பெரும் மதிப்பை நீங்கள் கொண்டிருக்கிறீர்கள். புதிய அரசமைப்பை இயற்றுவதில் நீங்கள் பங்களிப்புச் செய்ய வேண்டும் என்பது எமது விருப்பமாகும். இதற்கு ஒத்துழைப்பளிக்குமாறு நான் உங்களிடம் கோருகிறேன்.

2005ஆம் ஆண்டு தொடக்கம் 2015ஆம் ஆண்டுவரை 10 வருடங்கள் ஆட்சியில் இருந்தீர்கள். 1994ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த சந்திரிகா அரசிலும் இடம்பெற்றிருந்தீர்கள். சுமார் 20ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்துள்ளீர்கள்.

2015ஆம் ஆண்டில் அரச தலைவர் தேர்தலும் அதேபோல், நாடாளுமன்றத் தேர்தலும் நடைபெற்றிருந்தது. இந்த நாட்டு மக்கள் உங்களை அரச தலைவராகவோ அல்லது தலைமை அமைச்சராகவோ தெரிவு செய்திருக்கவில்லை. இந்த நாட்டின் நலனுக்காக இரண்டு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் என்பதை மக்கள் விரும்புகிறார்கள் என்பதே இதன் அர்த்தமாகும். அதையே மக்களின் ஆணை தெளிவாக எடுத்துக் காட்டியிருந்தது.

**மதிப்பு வைக்க விரும்புகின்றோம்**

உங்களது தந்தை டி.ஏ.ராஜபக்சவின் மீது நான் மிகுந்த மாரியாதை வைத்துள்ளேன். பல மூத்த தலைவர்கள் அப்போதைய நாடாளுமன்றத்தில் இருந்தபோதிலும்கூட டி.ஏ.ராஜபக்ஷ மட்டுமே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அரசிலிருந்து வெளியேறி எதிரணிக்குச் சென்றபோது அவருடன் சென்றார்.

பண்டாரநாயக்க அதை எதிர்பார்த்திருக்கவில்லை. அவர் பின்னால் திரும்பிப் பார்த்துவிட்டு பின்தொடர்வது தனது நிழல் என்று தாம் கருதினார் எனத் தெரிவித்திருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் இருந்து உங்களது தந்தை மீது நான் மிகுந்த மரியாதைக் கொண்டிருந்தேன். உங்களையும் அந்த உயர் மதிப்பில் வைத்திருக்க வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். புதிய அரசமைப்பு உருவாக்கத்திற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும். அது அடிப்படைக் கடமை என்பதை மகிந்த ராஜபக்சவுக்கு கூற நான் விரும்புகிறேன். அந்தக் கடமையில் இருந்து நீங்கள் விலகிவிடக்கூடாது. அதுதான் இந்த நாட்டுக்குத் தேவையான ஒன்றாக இருக்கிறது.

இந்த நாடு மீண்டும் இருளுக்குள் செல்லாமல் வெளிச்சத்துக்கு வந்து முன்னேறிச் செல்வதென்றால் நாம் புதிய அரசமைப்பை உருவாக்கவேண்டும். அது எமது மக்களை ஐக்கியப்படுத்துவதாகவும் அனைத்து இலங்கையர்களும் இலங்கை என்ற பிளவுபடாத பிரிக்கப்பட முடியாத நாட்டில் வாழ வழி செய்வதாகவும் இருக்கவேண்டும் -என்றார். (உ-5.31)

## சம்பந்தனின்...

தலைவர் இரா.சம்பந்தன், மகிந்த முன்னிலையில் எடுத்துரைத்திருந்தபோது சம்பந்தனின் உணர்வைப் புரிந்துகொள்ள முடிகிறது என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச அதற்குப் பதிலளித்திருந்தார்.

நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்ட விவாதத்தில் உரையாற்றிய இரா.சம்பந்தன், தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில் புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகள் இடம்பெற்றுவருகின்றன. அதற்கு முன்னாள் அரச தலைவர் மகிந்த முழுமையாக ஆதரவளிக்க வேண்டியது அடிப்படை உரிமையாகும் என்று குறிப்பிட்டார்.

சம்பந்தனின் உரையை அவருக்குப் பின்வரிசையிலுள்ள ஆசனத்தில் அமர்ந்திருந்து அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த மகிந்த ராஜபக்ச, சம்பந்தன் உரையாற்றிய பின்னர் தனது கருத்துக்களைச் சபையில் முன்வைத்தார்.

சம்பந்தனின் உணர்வைப் புரிந்து கொள்ள முடிகிறது எனக் கூறிவிட்டு தனது வரவு - செலவுத் திட்ட உரையை ஆரம்பித்தார். (உ-5.31)

## காணாமலாக்கப்பட்ட...

கொழும்பு, நவ. 17

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை நேற்று மீண்டும் சந்தித்துப் பேசினார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்தும் பேசிக் கொண்டிருக்காமல் மனிதாபிமான ரீதியில் முடிவுக்கு கொண்டுவரவே தாம் விரும்புகிறார் என்று அப்போது அவர் குறிப்பிட்டார்.

வடக்கு- கிழக்கைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுக்கும் அரச தலைவர் மைத்திரிபாலவுக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு அரச தலைவர் செயலகத்தில் மதியம் நடைபெற்றது.

தமது உறவுகளை எப்படியாவது தேடிக் கண்டுபிடித்துத் தாருங்கள் என்றே, காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை வைத்தனர்.

அரச தலைவர் மைத்திரிபால, இந்த விடயத்தை இரண்டு வழிகளில் தீர்க்கலாம் என்று குறிப்பிட்டார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் ஊடாக இந்தப் பிரச்சினைக்குத் தீர்வைக் காணலாம். அதற்குக் காலம் பிடிக்கும், அதனால் தமக்கு உடனடியாகத் தீர்வு வேண்டும் என்று விரும்புவோருக்கு தனியான குழுவை தேசிய நல்லிணக்க ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலர் தலைமையில் அமைத்து அதனூடாக முடிவைப் பெற்றுக் கொடுக்க முயற்சிக்கலாம் என்றார் கூறினார்.

அப்படி உடனடித் தீர்வை எதிர்பார்பவர்களின் விவரங்களை, மாவட்டச் செயலகங்கள் ஊடாகத் திரட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமாறு அரச தலைவர் உரிய அதிகாரிகளுக்குப் பணித்தார். டிசெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் இதனைச் செய்துமுடிக்குமாறும் கூறியுள்ளார். (உ-5.33)

## மைத்திரி...

அரச தலைவர் மகிந்த ராஜபக்ச சபையில் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான இறுதி நாள் விவாதம் நேற்று நடைபெற்றது. இந்த விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வரவு - செலவுத் திட்டத்தில் வரி வருமானம் அதிகரிக்கப்பட்டுள்ளது. வரி வருமானம் அதிகரித்தமையால் ஐக்கிய தேசியக் கட்சியினர் பெருமை கொள்கின்றனர். நாட்டு மக்கள் மீது வரிக்கு மேல் வரி விதித்துள்ளனர். இதனால் வொஷிங்டனிலுள்ள நிதி நிறுவனங்கள் ஆனந்தமடையும்.

மக்களின் பணத்தைச் சூறையாடும் இந்த அரசு அதிகரிக்கும் வரி ஊடாக அபிவிருத்தி எதுவும் செய்யவில்லை. வானூர்தி நிலையம், துறைமுகம், தாமரைத் தடாகம் எவையும் அமைக்கப்படவில்லை. அரச தலைவருக்கும், அமைச்சர்களுக்கும் புதிய வாகனக் கொள்வனவுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன.

நாட்டுத் தலைவர்கள் ஏனையவர்கள் மீது குற்றச்சாட்டுக்களை மட்டுமே முன்வைத்து வருகின்றனர். நாட்டிலுள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காது. அரச சொத்துக்கள் தனியாருக்கு விற்கப்படுவதற்கு எதிராகப் போராடுவோர் சிறையில் அடைக்கப்படுகின்றனர்.

எமது ஆட்சியில் போருக்காகவே கூடுதல் கடன் பெறப்பட்டது. 2009ஆம் ஆண்டு முதல் பெரிய அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. போரின் பின்னர் வடக்கு - கிழக்கில் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன.

மைத்திரி அரசே எமது நாட்டைக் கடன் பொறியில் சிக்கவைத்துள்ளது. கடந்த இரண்டரை வருடத்தில் பெற்ற கடனானது, 2009ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரை பெரிய அபிவிருத்திகளை மேற்கொள்ள 5 ஆண்டு காலத்தில் நாம் பெற்ற கடனில் 86 சதவீதமாகும். ஆனாலும் இந்த ஆட்சியில் கண்ணுக்குத் தெரியும் எந்த அபிவிருத்தியும் நடக்கவில்லை.

தற்போதைய ஆட்சி ஏற்படுத்தியுள்ள கடன் பொறியில் இருந்து மீண்டு வருவது கடினம். கடனைச் செலுத்த முடியவில்லை என்று நாம் எமது ஆட்சியின் போது கண்ணீர் சிந்தவில்லை. உலக நிதி நிறுவனங்களின் சொற்படி ஆடவுமில்லை.

மக்களுக்கு வழங்கும் உதவிகளைக் குறைக்காது பொருளாதாரத்தை கட்டியெழுப்பினோம். 30 வருடப் போர் முடிவடைந்த பின்னர் வரவு - செலவுத் திட்ட துண்டுவிழும் தொகையைக் கட்டம் கட்டமாக குறைத்தோம். எந்தக் கட்டுப்பாடும் இன்றி சூறாவளியில் சிக்கியுள்ள படகாகவேதற்போதையஆட்சியைஒப்பிடமுடியும். இந்த மோசடி ஆட்சியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும். மக்களின் மனநிலையை உணர்ந்து அரசு தேர்தலை ஒத்திவைத்து வருகிறது. விரைவில் தேர்தல் நடக்குமானால் மக்களின் நிலைப்பாடு தெரியவரும் - என்றார். (உ-5.31)

## சிறுமி...

பட்டார். இது தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டு பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

இந்தக் கூட்டு வன்புணர்வு வவுனியா மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. வன்புணர்வின் பின்னர் சிறுமியை நகரில் உள்ள ஆள்களற்ற வீடு ஒன்றில் குற்றவாளிகள் அநாதரவாக விட்டுச் சென்றனர். ஒருவாறு நேற்றுமுன்தினம் வீடு வந்து சேர்ந்த சிறுமி உறவினர்களிடம் தெரிவித்ததை அடுத்து அவர்கள் பொலிஸாரிடம் முறையிட்டனர்.

சிறுமியின் தகவல்படி முதலில் இருவரைக் கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணை செய்தனர். அவர்கள் கொடுத்த தகவலின்படி மேலும் இருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர். அந்த இருவரும் கொடுத்த தகவலின்படி மேலும் ஒருவர் தேடப்பட்டு வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வைத்தியசாலைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த மாணவி தனது வீட்டுக்கு அருகில் உள்ள முதன்மைச் சாலையில் பஸ்ஸை விட்டு இறங்கி வீட்டை நோக்கி நடந்து சென்று கொண்டிருந்த சமயம் முச்சக்கரவண்டியில் வந்தவர்களால் கடத்தப்பட்டார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்திருக்கிறது. மதிய நேரம் மாணவி தனித்துச் சென்றதைப் பயன்படுத்தி அவரைக் கடத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது.

சம்பவம் தொடர்பில் அறிந்த உறவினர்கள் நேற்று வவுனியா பொலிஸில் முறையிட்டனர். அவர்கள் பொலிஸில் முறையிடச் சென்றிருந்த நேரத்தில் பாதிக்கப்பட்ட சிறுமி தவறான முடிவெடுத்து உயிரை மாய்க்க முயன்றிருக்கிறார். இதை அடுத்து உறவினர்களால் அவர் உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவர் தற்போது ஆபத்தான கட்டத்தைத் தாண்டியிருக்கிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-ற-420)

## ஆதனப் பெயர்மாற்றம்

யாழ். மாநகரசபைக்கு உட்பட்ட வட்டாரம்-6, கொய்யாத்தோட்டம் புது வீதி, ஆதன இல 15/2 என்ற இலக்கத்தை கொண்ட ஆதனம் வஸ்தியாம்பிள்ளை அருமைநாதன் பெண் டெசி என ஆதனப்பதி வேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம், கொய்யாத்தோட்டம், இல 3/1 புது வீதி வஸ்தியாம்பிள்ளை அருமை நாதரும் பெண் டெய்சியும் அதே இடத்தைச் சேர்ந்த பாக்கியநாதர் ஹென்றி யோசேப் இம்மானுவலும் பெண் பேர்ணடேற்றும் ஆகிய இவர்களுக்கு பிரசித்த நொத்தாரிசு க.சிவலிங்கம் முகதாவில் 7939 / 23.07.1989 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்திய நிபந்தனை அறுதி உறுதி மூலம் ரூபா 200000/= ஐ ஒன்றரை (11/2) வருடத்திற்குள் வருடத்திற்கு 48% வட்டியுடன் சேர்த்து திருப்பித் தரும் பட்சத்தில் மீளதங்களது பெயரிற்கு அறுதியுறுதி முடித்துதரவேண்டும் என்ற நிபந் தனைக்கு அமைவாக அறுதியாக விற்றுள்ளார்.

பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3792 / 2006.06.29 ஆம் இலக்க உறுதிப்படுத்தல் உறுதி மூலம் யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டம், புது வீதி, இல 15/11, பாக்கியநாதர் கென்றியோசேப் இம்மானுவலும் பெண் பேர்ணடேற்றும் குறித்தகாலத்தவணை முடிவுற்றும் பஸ்தியாம்பிள்ளை அமிர்தநாதரும் பெண் டெய்சியும் குறித்த சிரத்தையுடன் வட்டியை யும் கட்டி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ செலுத்தவில்லை என்றும், அவர்களால் செலுத்த முடியாத நிலையை வெளிப்படுத்தி ஆதனத்தின் ஆட்சியை 1994.09.09ஆம் திகதியி லிருந்து தாம் பெற்றுள்ளதாகவும் குறித்த ஆதனம் தங்கள் கொள்வனவும் ஆட்சியுமென்றும் வெளிப்படுத்தியுள்ளனர்.

இதே நொத்தாரிசு முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 3793 / 2006.06.29 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் மேற்குறிப்பிட்ட முகவரியிலிருந்து தற்காலம் வவுனியா திருநாவற்குளம் இல 45 / 51 இல் வசித்து வரும் பாக்கியநாதர் கென்றியோசேப் இம்மானுவலும் பெண் பேர்ணடேற்றும் என்பவர்களிடமிருந்து கொய்யாத்தோட்டம் புது வீதி, இல 59 ஐச் சேர்ந்த அமிர்தலிங்கம் புஸ்ப-குமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரியும் அறுதியாக பெற்றுக் கொண்டுள்ளனர்.

பிரசித்தநொத்தாரிசு N.தில்லைவினாயகம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 6427 / 2011.11.16 இலக்க நிபந்தனை அறுதி மூலமாக அமிர்தலிங்கம் புஸ்பகுமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரி யும், தனபாலசிங்கம் பெண் திலகராணிக்கு நிபந்தனை அறுதியாக விற்றுள்ளனர். பிரசித்த நொத் தாரிசு க.நமநாதன் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 529 / 2014.05.03 ஆம் இலக்க அறுதி உறுதி மூலமாக துரைராசா தனபாலசிங்கமும் பெண் திலகராணியும் குறித்த அமிர்தலிங்கம் புஸ்பகுமாருக்கும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரிக்கும் மீளஅறுதியாக வழங்கியுள்ளனர். இதே நொத்தாரிசு முகதாவில் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 530 / 2014.05.03 சீதன உறுதி மூலம் அமிர்த லிங்கம் புஸ்பகுமாரும் பெண் கலிஸ்ரா இராஜேஸ்வரியும் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த பிரதீஸ் குமாரன் பெண் டிலானி நிரோஷாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளனர்.

ஆதனவிபரம் :- யாழ்ப்பாண மாவட்டம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சுண்டிக் குளி இறை "புளியடிவயலும் புளியடியிற் புலமும் முதலைக்குளம் புலமும்" இது உத்தரவு பெற்ற நில அளவை யாளர் N.தேவராஜா அவர்களின் 1169 / 1994.12.08 இலக்க வரைபடத்தில் துண்டு-1 எனச் சுட்டப்பட்ட நில.பர.01குளி 00.42 ஆகும். இதற்கு எல்லை

கிழக்கு:- ஒழுங்கை
வடக்கு:-பீ.எச்.ஜே.இம்மானுவல் பெண் பெர்ணடேற்றின் ஆதனம்
மேற்கு:- பிரான்சிஸ் யோசேப்புக்கும்-பெண் ஞானமலருக்குரிய ஆதனம்.
தெற்கு:- அருமைநாதன் பெண் டெய்சியின் ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை பிரதீஸ்குமாருக்கும் பெண் டிலானிநிரோஷாவும் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பிரதீஸ்குமாரன் பெண் டிலானிநிரோஷாஎன்னும் பெயரிற்குமாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆணையாளர்.**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20. அராலி வீதி. ஆதன இல 84/7 என்ற இலக்கம் கொண்ட ஆதனம் சொந்தக்காரர் என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை முஸ்லீம் வட்டாரம் இல.38. கலீபா அப்துல் கமீது வீதியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமட் நிஜாம் மொகிதீன். பிரசித்த நொத்தாரிசு அ.இராஜ ரட்ணம் முகதாவில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2415/2004.10.04 ஆம் இலக்க திகதியிட்டு வெளிப்படுத்தல் உறுதியில் 1920ஆம் ஆண்டிலிருந்து குறித்த ஆதனம் தனது பிதாவழிப்பேரன் சுல்தான் மொகிதீன் அவர்களுக்கு சொந்தமும் ஆட்சியுமாயிருந்து அவர் காலமாகிவிட ஏகவாரிசான தனது பிதா சுல்தான் மொகிதீன் அப்துல் கரீம் அவர்களுக்கு முதுசமும் ஆட்சியுமாயிருந்து 1966இல் தனது பிதாகாலமாகிவிட அவ் ஆண்டிலிருந்து இவ்வாதனத்தை தனது பிதா வழி முதுசமாக தான் நீண்டகாலமாக எவ்வித தடையு மில்லாது ஆட்சி செய்து வருவதாக வெளிப்படுத்தியுள்ளார். பிரசித்த நொத்தாரிசு ச.தங்கமாமயிலோன் முகதாவில் நிறைவேறிய 2306/14.03.2005 அறுதி உறுதி மூலம் இதே முகவரியைச் சேர்ந்த அப்துல் கரீம் முகமட் நிஜாம் மொகிதீன் யாழ்ப்பாணம், ஓட்டுமடம். மானிப்பாய் வீதி, இல 611 கணேசப்பிள்ளை சண்முகலிங்கத்திற்கு அறுதியாக விற்றுள்ளார். இதே நொத்தாரிசு முகதாவில் நிறைவேறிய 2355/10.06.2005 இலக்க அறுதி உறுதி மூலம் கணேசபிள்ளை சண்முக லிங்கமும் பெண் இராஜேஸ்வரியும் கொக்குவில் கிழக்கு. நாமகள் ஒழுங்கை மரியநாயகம் ஶ்ரீதரனுக்கும் பெண் பிறேமேஸ்வரிக்கும் அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விவரம்:- வண்ணார் பண்ணை மேற்கிறை "இராசாளிக் குளக்கரை வயல்" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் K.A. இளையதம்பி அவர்களின் வரைபட இல. 1043/2016.04.05 இல் துண்டு -1 எனக்காட்டப்பட்ட நெ.பர.11 குளி 08.86 ஆகும். இதன் எல்லை

வடக்கு:-அப்துல் கரீம் மகள் முசாமில்லாவின் ஆதனம்

கிழக்கு:- 15 அடி ஒழுங்கை

மேற்கு:- பரீனா பேகம் பின் ஆதனம்

தெற்கு:-இராமலிங்கம் சதீஸ்குமாரினதும், தேவராஜ் பெண் ருக்குமணியினதும் ஆதனம்

தற்போது ஶ்ரீதரன் பெண் பிறேமேஸ்வரி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதன மானது ஶ்ரீதரன் பெண் பிறேமேஸ்வரி என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை
யாழ்ப்பாணம்.

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ். மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-20 கோவில் ஒழுங்கை ஆதன இல 72 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சாகுல் கமீட் பெண் சதக்கத் உம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை சோனகத் தெரு முஸ்லீம் வட்டாரம். இல72. பாக்கியப்பா ஒழுங்கையை முன்னைய முகவரியாகவும் புத்தளம் இல 19. ஐந்தாம் குறுக்குத்தெருவை தற்போதைய வதிவிட முகவரியாகவும் கொண்ட மொஹிதீன் பிச்சைஹசன் மகள் சம்சூனா என்பவரால் பிரசித்த நொத்தாரிசு ஜனாப் ஆ.ஆ.மன்சூர் முன்னிலையில் 1990.03.12ஆம் திகதிய நிறைவேற்றப்பட்ட அறுதிச்சாதனத்தின் பிரகாரம் கொள்வனவு செய்திருந்தாரென்றும் 1990.10.30 ஆம் திகதி குடாநாட்டை விட்டு முஸ்லிம் சமூகத்தினரும் வெளியேறிய நிலையில் குறித்த ஆதனத்தின் உறுதியை எடுத்துச் செல்லவில்லை என்றும் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்தும் குறித்த ஆதனத்தின் அறுதிசாதனத்தை கண்டுபிடிக்க முடியாத நிலையில் பிரசித்த நொத்தாரிசு யோ.சத்தியநாதன் முகதாவில் உறுதி இல 978/2005.07.09 ஆம் திகதி வெளிப்படுத்துகை சாதனம் நிறைவேற்றியுள்ளார் என்றும் வெளிப்படுத்தியுள்ளார்.

இதே நொத்தாரிசு முகதாவில் 2015.07.16 ஆம் திகதியில் 985 ஆம் இலக்கத்தில் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அறுதி உறுதி மூலமாக புத்தளம் மரிக்கார் றோட் இல7/5 வதியும் யாழ்ப்பாணத்தில் மேலே குறிப்பிட்ட முகவரியைச் சேர்ந்த மொஹிதீன் பிச்சைஹசன் மகள் சம்சூனா. யாழ்ப்பாணம் நாவாந்துறை இல 56 கோவில் ஒழுங்கையில் வதியும் சின்னத்தம்பி முத்துராசாவிற்கும் பெண் தவமணிதேவிக்கும் அறுதியாக்விற்றுள்ளார்.


இதே நொத்தாரிசு முகதாவில் 986ஆம் இல 2005.07.16 திகதிய அறுதி உறுதி மூலம் சின்னத்தம்பி முத்துராசாவும் மனைவி தவமணிதேவியும், யாழ்ப்பாணம் நாவாந்துறை மண்பிட்டியில் வதியும் தியாகராசா சுதாகரனுக்கும் மனைவி லதாவுக்கும் விற்றுள்ளார். அதே நொத்தாரிசு முகதாவில் 2010.05.25ஆம் திகதியில் 2622ஆம் இல அத்தட்சப்படுத்தப்பட்ட நிபந்தனை அறுதி மூலமாக நாவாந்துறை இல 56 கோவில் வீதியில் வதியும் தியாகராசா சுதாகரனும் மனைவி லதாவும் யாழ்ப்பாணம் கொட்டடி இல 91/18. வில்லூன்றிக்கேணி வீதியில் வதியும் நாகலிங்கம் கேதீஸ்வரனுக்கும் நிபந்தனைஅறுதியாக வழங்கியுள்ளனர். இதே நொத்தாரிசு முகதாவில் 2825ஆம் இலக்க 2011.06.17ஆம் திகதி அறுதி உறுதியில் நாகலிங்கம் கேதீஸ்வரனும் மனைவி தங்கமலரும், தியாகராசா சுதாகரனும் மனைவி லதாவுக்கும் மீள அறுதியாக வழங்கியுள்ளார். மேலும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் 8322ஆம் இல 2011.11.03ஆந் திகதி அறுதி உறுதியில் நாவாந்துறை. கோவில் வீதி. இல 70V இல் வசிக்கும் தியாகராசா சுதாகரனும் பெண் லதாவும் அவ்வூர் நாவலர் வீதி இல 75 குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்குக்கும் பெண் அமலஜோதிக்கும் அறுதியாக விற்றுள்ளார்.

ஆதன விவரம்:-வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாண பகுதி. வண்ணார்பண்ணை கோவில் பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ஓறணி" இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் P. தனராஜ் அவர்களின் வரைபட இல 2781/2005.06.27 இல் துண்டு 1 எனக்காட்டப்பட்ட நிலபர 00 குளி 15.96 ஆகும். இதற்கு எல்லை
கிழக்கு:-மொகமட் அப்துல் காதர் பெண் மல்மூன்
வடக்கு:-A.P லேன்
மேற்கு:-மொகமட் மொகிடீன் பெண் பாத்துமா நாச்சியார்
தெற்கு:-ஒழுங்கை

தற்போது இவ் ஆதனத்தை குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்கும் பெண் அமலஜோதியும் என்னும் பெயரில் எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே இவ் ஆதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒருமாதத்திற்குள் உரிய ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறு உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குமாரகுலசிங்கம் அன்ரன் சுதாகர்சிங்கும் பெண் அமலஜோதி ஏன்றபெயரிற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப் பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆணையாளர்
மாநகரசபை. யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### திருமதி இராசமணி கோவிந்தபிள்ளை

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், இல 621. 6 ஆம் யுனிற் இராம்நாதபுரத்தை வசிப்பிடமாகவும். சிவநகர் உருத்திரபுரத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி கோவிந்தப்பிள்ளை (16.11.2017) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார்காலஞ்சென்றவர்களானநெடுந்தீவுமேற்கசைச்சேர்ந்தகணபதிப்பிள்ளை சேதுப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா (அதிபர் குருவிச்சட்டம்பியார்) முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கோவிந்தபிள்ளை (ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர்) அவர்களின் அன்பு மனைவியும் வசந்தி (முகாமைத்துவ உதவியாளர் பிரதேச செயலகம், கிளிநொச்சி). குமுதினி (ஆசிரியை, இராமநாதபுரம் கிழக்கு அ.த.க. பாடசாலை). பகீரதன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் நீர்ப்பாசனத்திணைக்களம், கிளிநொச்சி) ஆகி யோரின் அன்புத்தாயாரும் அன்ரன், விஜயன், நிர்மலா ஆகியோரின் அன்பு மாமியும் சோமசுந்தரம் (இந்தியா), சேதுபதி (முரசுமோட்டை). நவரத்தினம் (கனடா). முத்துக்குமாரு (இராமநாதபுரம்) காலஞ்சென்ற கோபாலபிள்ளை ஆகியோரின் அன்புச்சகோதரியும் யதுஷன், மிதுஷா. திஷானி, அக்சரா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 4 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக உருத்திரபுரம் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல. 108, சிவநகர் உருத்திரபுரம்.** **தகவல்: குடும்பத்தினர்.**

## கரீத் பேலை விடுவிக்க ரியல் மட்ரிட் தீர்மானம்

காயத்தால் அவதிப்பட்டு வரும் பேலை விற்பதற்கு ரியல் மட்ரிட் அணி முடிவு செய்துள்ளது. அவருக்குப் பதிலாக கிலியனை வாங்குவதற்கு மட்ரிட் முனைப்புக் காட்டுகிறது என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.


ரியல் மட்ரிட் அணியின் முக்கிய வீரர்களில் ஒருவராக பேல் உள்ளார். நட்சத்திர வீரர் ரொனால்டோவுடன் இணைந்து பல ஆட்டங்களில் மட்ரிட் வெற்றிபெறுவதற்கு பேல் முக்கிய காரணியாக இருந்தார். எனினும், காயம் காரணமாக அவ்வப்போது விலகுவதும் நீண்ட இடைவெளியின் பின்னர் அணிக்குத் திரும்புவதுமாக உள்ளார். தற்போதும் பேல் காயமடைந்துள்ளார். இந்த நிலையில் பேலை மீண்டும் அணிக்குள் எடுக்காது அவரது ஒப்பந்தத்தை முடித்துவைக்க மட்ரிட் திட்டமிட்டுள்ளது என்று அறியவருகிறது. பதில் வீரராக கிலியன் சேர்க்கப்படலாம் என்று ரியல் மட்ரிட்டின் வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (ம)



## வென்றார் பெடரர்

உலக சம்பியன்ஷிப் ரென்னிஸ் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் வெற்றி பெற்றார் பெடரர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் பெடரரை எதிர்த்து அலெக்சாண்டர் மோதினார். முதலாவது செற்றை 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். இரண்டாவது செற் 5:7 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அலெக்சாண்டரின் வசமானது. வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது செற்றை 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றார் பெடரர். (ம)





# தடுமாறுகிறது இந்திய அணி

இலங்கை அணிக்கு எதிராக நடைபெற்று வரும் முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி தடுமாற்றமான ஆரம்பத்தை வெளிப்படுத்தியது.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமாகும் முன்னர் மழை பெய்த காரணத்தால் மைதானமும், ஆடுகளமும் ஈரப்பதம் உடையதாகவே காணப்பட்டன.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக லோகேஸ் ராகுல் மற்றும் தவான் இருவரும் களமிறங்கினர். லக்மல் வீசிய முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் முதல் பந்திலேயே ஆட்டமிழந்தார் லோகேஸ். வழக்கமாகவே திடீர் மேலெழும்பல் தன்மையை (எக்ஸ்ரா பவுன்ஸ்) கொண்டிருக்கும் ஈடன் கார்டன் ஆடுகளம் நேற்றும் இன்னும் மிகையாக வேலைசெய்தது. ஆடுகளத்தில் சுமார் 6 மில்லிமீற்றர் அளவுடைய புற்கள் இருந்தமையும் அதற்கு முக்கிய காரணம்.

8 ஓட்டங்களுடன் லக்மலிடம் போல்ட் ஆனார் தவான். புஜாரா ஓர் முறையில் மிகவும் நிதானமாக விளையாடினார். ஓட்டமெதனையும் பெற விடாமல் கோக்லியையும் வெளியேற்றினார் லக்மல். மழை, மந்தமான வெளிச்சம், ஈரலிப்பு ஆகியன மீண்டும் இடையூறு வழங்க இந்திய அணி 3 இலக்குகளை இழந்து 17 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டம் கைவிடப்பட்டது.

90 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்பட வேண்டிய இடத்தில் வெறும் 11.5 பந்துப்பரிமாற்றங்களே நேற்று வீசப்பட்டன. (ம)

கழக மட்டத்தில் விளையாட

## பங்களாதேஷ் வீரர்களுக்கு கட்டுப்பாடுகள்

பங்களாதேஷ் கிரிக்கெட் வீரர்கள் ஒரு ஆண்டில் இரண்டு ரி-20 லீக்குகளிலேயே பங்கேற்கலாம் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பங்களாதேஷ் கிரிக்கெட் சபையால் ஒப்பந்தமளிக்கப்பட்டுள்ள வீரர்கள் வெளிநாட்டு லீக்குகளில் விளையாடுவதற்கு, ஆண்டொன்றுக்கு இரண்டு தடையில்லாச் சான்றிதழ்களே வழங்கப்படும் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் தலைமை நிறைவேற்று அதிகாரி நிஸாமுடீன் சௌத்திரி தெரிவித்துள்ளார்.

உடனடியாக நடைமுறைக்கு வரும் இந்தத் தீர்மானம் குறித்து, பங்களாதேஷ் வீரர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில், இந்தியன் பிறீமியர் லீக், பிக் பாஷ் லீக், பாகிஸ்தான் சுப்பர் லீக், கரீபியன் பிறீமியர் லீக் ஆகியவற்றில் பங்கேற்றுவரும் ஷகிப் அல் ஹசனையே இது பெரும்பாலும் பாதிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## இறுதி அணியாக பெரு தகுதி

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடருக்கு பெரு அணி தகுதி பெற்றது. 32 நாடுகள் இந்தத் தொடரில் பங்கு பற்றுகின்றன. தொடரை நடத்தும் ரஷ்யாவைத் தவிர ஏனைய 31 அணிகளைத் தீர்மானிக்கும் தகுதிச் சுற்று ஆட்டங்கள் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வந்தன. 30 அணிகள் தகுதி பெற்றிருந்த நிலையில் இறுதி அணியைத் தீர்மானிக்கும் ஆட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பெருவை எதிர்த்து நியூசிலாந்து மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றது பெரு. (ம)

## மானிப்பாய் ஏஞ்சல் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், நவ. 17

இலங்கை பாடசாலைகள் கூடைப்பந்தாட்டச் சங்கம் நடத்திவரும் 19 வயதுப் பிரிவினருக்கான கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி இன்று மோதவுள்ளது.

சாகிராக் கல்லூரியின் கூடைப் பந் தாட்டத் திடலில் இடம்பெறவுள்ள இந்த இறுதியாட்டத்தில் மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டு பாடசாலை அணியை எதிர்த்து லைசியம் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)



# மத்தியூஸ் வருகையால் அணி பலம்பெற்றுள்ளது

## சந்திமல் தெரிவிப்பு

"அனுபவ வீரர் மத்தியூஸ் அணிக்குத் திரும்பியுள்ளமையால் அணி பலம்பெற்றுள்ளது" என்று தெரிவித்தார் இலங்கை அணியின் தலைவர் சந்திமல்.

பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் காயம் காரணமாக மத்தியூஸ் அணியில் இருந்து விலகியிருந்தார். காயத்தில் இருந்து மீண்டுள்ள அவர் தற்போது நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான தொடரில் இடம்பிடித்துள்ளார். இதை அடுத்தே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார். இந்தியாவுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நேற்று ஆரம்பமானது. முன்னதாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சந்திமல் இவ்வாறு தெரிவித்தார். "மத்தியூஸின் வருகை எங்களது துடுப்பாட்ட வரிசையை பலப்படுத்தியுள்ளது. அவர் 4ஆவது வரிசையில் துடுப்பெடுத்தாடுவார். அவரது அனுபவம் எங்களுக்குச் சாதகமாக இருக்கும். அவர் தனது மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என்று நம்புகிறோம். ஆனால் பின்னங்கால் காயத்தில் இருந்து மீண்டு வந்திருக்கும் அவர் ஒரு துடுப்பாட்ட வீரராக மட்டுமே இடம்பெறுவார். காயம் காரணமாக துரதிர்ஷ்டவசமாக அவரால் டெஸ்டில் பந்து வீச முடியாதது, எங்களுக்கு சற்று பின்னடைவு தான்.

கொல்கத்தாவில் கடைசியாக நாங்கள் விளையாடிய தொடரில் (ஒரு நாள் தொடர்) வேகப் பந்து வீச்சை திறம்பட சமாளித்தோம். பவுன்ஸ் ஆகக்கூடிய ஆடுகளத்தில் சிறப்பாக விளையாடும் நம்பிக்கையில் இருக்கிறோம். நல்ல தொடக்கம் அமைவது அவசியம்" என சந்திமல் மேலும் தெரிவித்தார். (ம)

O/L 2017 கருத்தரங்கு
வணிகக்கல்வியும் கணக்கீடும்
26.11.2017, 8-2p.m
MR.BALAKAJEN
கணிதம்
யாழ்.கொழும்பு நகரின் முன்னணி ஆசிரியர்
MR.C.K.B.தயாளன்
18/11 (சனி), 19/11 (ஞாயிறு) → 8 - 2p.m.
Day Class மாணவர்கள், உயர்தரம் கற்றுக்கொண்டு கணித பாடம் எடுக்க வேண்டிய மாணவர்கள், கணித பாடத்தில் சித்தி தேவையான மாணவர்களும் பங்குபற்றலாம்.
இடம்: NEC யாழ்ப்பாணம்
(பெருமாள் கோவில் அருகில்)
உங்கள் அனுமதிகளுக்கு.
070 339 6696, 077 749 2794

அமெரிக்க லொத்தர் இலவச விசா
உடனடியாக பதிவு செய்யுங்கள்
யாரும் இலவசமாக அமெரிக்கா போகலாம்
இன்னும் 2 நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன
0768226243
V2 TRAVELS

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 |
| சாவகச்சேரி 0768226242 | நெல்லியடி 0776699892 |
| பருத்தித்துறை 0768226230 | வல்வெட்டித்துறை 0776697960 |


ALLIANCE FRANÇAISE DE JAFFNA-
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSYயின்கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANÇAISE மட்டுமே
- அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL IPLOMAS (DELF, DALF)
- யாரும் படிக்கலாம்.



www.ambafrance-lk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்

**கலைமாணித் தேர்வு பகுதி 2014**

**வெளிவாரிப் பரீட்சைகள் கலைமாணித்தேர்வு - பகுதி II - 2014 (வெளிவாரி)**

மேற்படி பரீட்சையை 04.12.2017 (திங்கட்கிழமை) தொடக்கம் 20.12.2017 (புதன்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சை தொடர்பான நேர அட்டவணையை எமது இணையத்தளத்திலும் (www.codl.jfn.ac.lk) எமது முகப்புத்தகப்பக்கத்திலும் (www.facebook.com/uoj.codl) பார்வையிடலாம்.

பரீட்சை அனுமதி அட்டைகளை 28.11.2017 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் 30.11.2017 (வியாழக்கிழமை) வரை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
15.11.2017

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 06 1930 — மறைவு 16 11 2017



### வைரவி நாகலிங்கம்

கோப்பாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வைரவி நாகலிங்கம் நேற்று (16.11.2017) வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரவி இளையாச்சி தம்பதியினரின் அன்பு மகனும் புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சண்முகம் இளையாச்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் இராசமணியின் அன்புக்கணவரும் கதிரவேலு(இலங்கை வானொலிக்கூட்டுத்தாபனப் பணிப்பாளர், ஓய்வுநிலை,கனடா),காலஞ்சென்ற கணேசன் (ஓய்வு நிலைச் செயலாளர் நகரசபை திருகோணமலை) மற்றும் திருமதி காந்திமதி வெற்றிவேலாயும் (கனடா) ,சிவபாதம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், புஸ்பமலர், தியாகராசா, கைலாயநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கலாபவனி,அம்பிகாவதி,தணிகாசலம்(சந்தை பிடைவை வியாபாரி, திருநெல்வேலி), கமலாம்பிகை,சசிகலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் சிறிஸ்கந்தராசா(காந்தி , வலிவடக்கு பிரதேசசபை வருமானவரி பரிசோதகர், ஓய்வு நிலை),பாஸ்கரன் (பிடைவை வியாபாரி,திருநெல்வேலி), திலகரத்தினம்(அஞ்சல் அலுவலகம், யாழ்ப்பாணம்),சிவசிறி ஆகியோரின் அன்பு மாமனாரும் சுயாத்தா, சபேசன், தர்மதேவன்,சோபிகா,சஜீபன்,மயூரிகா,மயூரதன்,மயூரங்கா,மயூராதா,மயூரம்மியா,யதுசன்,விதுரகா,சுவஸ்திகா,தரணிகா,திலக்ஸன்,திலக்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் லக்சனா,கவிலக்சன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரயைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை பி.ப ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காககோப்பாய்கந்தன்காடுஇந்துமயானத்துக்குஎடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சங்கமம் வீதி, கோப்பாய் தெற்கு ,கோப்பாய்.**
**077 582 7903 ,077 217 8699**

**தகவல்: குடும்பத்தினர்.**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

எமது பாடசாலை அதிபரான

**திரு வேலுப்பிள்ளை செல்வகுமார்**



(அதிபர், கிளி /தர்மக்கேணி அ.த.க. பாடசாலை பளை, சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் B.A [Hons] MA [Merit] MEd, Dip in Edu)

அவர்கள் (28.10.2017) அன்று வட மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்ட 'குரு ப்ரதீபா ப்ரபா' விருதினை நல் அதிபருக்கான கௌரவிப்பினைப் பெற்றமைக்காக பாராட்டி வாழ்த்துவதுடன் 15.11.2017 அன்று சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரனின் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக பதவி ஏற்றமைக்காகவும் தங்களை மேலும் பல பட்டங்களும் பதவிகளும் பெற இறை ஆசி வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

Best Wishes
வாழ்த்துவோர்.
கிளி /தர்மக்கேணி அ.த.க. பாடசாலை ஆசிரியர் நலன்புரிசங்கம்.

## கண்ணீரில் கரைந்த 3 ஆண்டுகள்

தோற்றம் 17.03.1951 — மறைவு 20.11.2014

அமரர்
### வேலாயுதர் இரத்தினம்
(விதானையார்)



திதி - கார்த்திகை சதுர்த்ததி

அப்பா....
வையத்தில் சேவை செய்து வாழ்ந்தவர் நீங்கள்
கொடுக்கின்ற எண்ணத்தால் நிறைந்தவர் நீங்கள்
அஞ்சாத நெஞ்சத்தை ஆழமாகக் கொண்டே
வைகுந்த வாழ்வமர்ந்த இரத்தினம் நீங்கள்

பொன்னாலை.
அப்பா என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்.

## ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1416 — சீட்டிழுப்பு திகதி 2017.11.16
வெற்றி இலக்கங்கள்: 06 11 37 55 W
அடுத்த வியாழக்கிழமைக்கான ஜக்பொட்: ரூ. 12,209,260/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 78
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2017.11.16
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,623,440/-
வெற்றி இலக்கங்கள்: 29 33 53 62 R
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு வாரம் 729
சீட்டிழுப்பு திகதி 16.11.2017 வியாழக்கிழமை
G 27 57 64 70
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 45,516, 584/-
தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## உத்தியோகபூர்வ முடிவுகள்

Development Fortune
சீட்டிழுப்பு வாரம் 092
சீட்டிழுப்பு திகதி 16.11.2017 வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்: 22 25 35 50 — சுப்பர் இலக்கம் 02 — அதிர்ஷ்ட மாதம் மார்ச்

| அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் | அடுத்த சுப்பர் ஜக்பொட் | அடுத்த ஜக்பொட் |
|---|---|---|
| ரூ. 5,856, 264/= | ரூ. 5, 305, 919/= | ரூ. 1, 285, 582/= |

2017.11.18 ம் திகதி சனிக் கிழமை இளஞ்சிவப்பு நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
திட்டமிடல் சேவை — பிரதி சனி 10.00 மணி
சமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் — பிரதி சனி 9.00 -12.30
வடமாகாண ஆசிரியர் தெரிவு — பிரதி ஞாயிறு 10.00 - 2.00
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு (யாழ். நகர்)

வகுப்புக்கள்
D.M.I
வெலிங்ரன் சந்தி Honda காட்சியறை முன்)
திட்டமிடல் சேவை Ltd — பிரதி ஞாயிறு 9.30→2.30
திட்டமிடல் சேவை open — பிரதி ஞாயிறு 9.00→2.00
பிரத்தியேக பொதுஉளச்சார்பு — சனி, ஞாயிறு பி.ப 3.00→4.30
*பதவி உயர்வு தடைதாண்டல் பரீட்சை வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

போட்டிப் பரீட்சை வகுப்புகள்
Nov 26 ஆம் திகதி நடைபெறவுள்ள கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர்
18.11.2017, 19.11.2017, 25.11.2017 காலை 9.00 - 2.00 pm
SLPS (OPEN/ LIMITED) பிரதி ஞாயிறு 9.00 - 2.00 P
SUPRA போட்டிப்பரீட்சை சனி, ஞாயிறு 9.00 -12.00P.M
அதிபர் EB சனி, ஞாயிறு 1.30 - 5.30
அபிவிருத்தி உத்தியோகத்தர் EB சனி, ஞாயிறு 9.00 -12.00
நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T.P. 077 469 6695

## மரண அறிவித்தல்



### முத்துலிங்கம் சுதர்சீலன்

வசந்தபுரம், இளவாலையைப் பிறப்பிடமாகவும் இல.45, குகன் வீதி, அரியாலையை வசிப்பிடமாகவும் , கொண்ட முத்துலிங்கம் சுதர்சீலன் 16.11.2017 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் முத்துலிங்கம் - வளர்மதி தம்பதியரின் அன்பு மகனும் யேமலரின் அன்புக் கணவரும் சுதர்ராஜ், ஜெனுஷன், தீபிகா, தஷ்மிகா ஆகியோரின் தந்தையும் சுகந்தினி, சுதர்மாலினி, சுதர்கரன், சுதர்தீபன், சுதர்வாணி, சுதர்சிகா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2017) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்தில் பி.ப.2.00 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: உறவினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.